வெளியீடு 14-7-2005

Issued 14-7-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, மார்ச் 4, 2005—தொகுதி 69—எண் 2**

**Friday the 4th March, 2005 —Volume 69—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**…ive Assembly Secretariat, Chennai - 600 009**

V211, 31' 605
605. 6F 2
226631

**[Price Rs. 3.00**

325
2005

4-3-2005

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

**1. இரங்கற் குறிப்பு—**

முன்னாள் உறுப்பினர் மறைவு - 101

**2. வினாக்கள்-விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் - 102-144

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 8 மற்றும் 9) - 145-212

**3. கவன ஈர்ப்பு—**

குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெயை தனியே அல்லாமல் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கக் கோருதல். - 213-216

**4. வரவு-செலவுத் திட்டம், 2005-2006,- பொது விவாதம்—** 217-283

டாக்டர் க. பொன்முடி - 217-231, 237-243

டாக்டர் தே. குமாரதாஸ் - 242-245, 247-261, 263-271

*திரு. கே. ஆறுமுகம் - 273-275, 277-283,

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 284-285

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 20, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 மார்ச் 4, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்*
*அடிதழீஇ நிற்கும் உலகு."*

*குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.*

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. வி. பெருமாள் அவர்கள் 26-02-2005 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. வி. பெருமாள் அவர்கள் சேலம் மாவட்டம், ஏற்காடு தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1996 முதல் 2001 வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226631
சென்னை-600 0



## 2. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 61, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

**61—**

### குடகனாறு சீரமைப்பு

***7489—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியணை பகுதியில் ஓடும் குடகனாறை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியணை பகுதியில் ஓடும் குடகனாறை சீர்செய்யும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களின் காவல் தெய்வம், மாண்புமிகு தங்கத் தாரகை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். விவசாயிகளின் நலனே தன் நலனாகக் கொண்டு, இவ்வளவு வறட்சிக் காலங்களிலும் மக்களின் நலனில் அக்கறை கொண்ட அம்மா அவர்கள், மழைநீர் சேமிப்பு எனும் மகத்தான திட்டம் போட்டு ஏரி, வாய்க்கால், குளங்களைத் தூர்வாரச் செய்து, விவசாயிகள் செலுத்தவேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டியை இரண்டு ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்து, விவசாயிகள் வாங்கும் கடனுக்கு வட்டி 14 சதவிகிதமாக இருந்ததை 9 சதவிகிதமாகக் குறைத்து, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிய ஒளி விளக்கே! என்னுடைய தொகுதியில் கடந்த ஆண்டு குடகனாறு நீர்த்தேக்கப் பாசன





வாய்க்கால்களை மேம்படுத்தும் பணிகள் செய்து முடிக்கப் பெற்றதாக அறிகின்றேன். அதன் விவரத்தை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வலது புறம் செல்லும் வாய்க்கால், 53.515 கிலோ மீட்டரில் வெள்ளியணை கண்மாயும், அதனையடுத்து உப்பிடாமங்கலம், வீரராக்கியம் மற்றும் வளையல்காரன்புதூர் ஆகிய நான்கு கண்மாய்கள் உள்ளன. குடகனாறு அணையில் மழைக் காலங்களில் கிடைக்கப்பெறும் உபரி நீரைக் கொண்டு, இந்த வெள்ளியணை மற்றும் அதன்கீழ் உள்ள மூன்று கண்மாய்கள் வாயிலாகத் தண்ணீரைத் தேக்கி, அப்பகுதியில் 1,372 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இந்தப் பாசனக் கால்வாய்மூலம், ரூ.1,08,73,928 மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் யாவும் மார்ச் 2004-ல் முடிக்கப்பட்டுள்ளன. எனவே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியணை பகுதியில் ஓடும் குடகனாறைத் தூர்வாரவோ அல்லது சீர் செய்யவோ திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**62—**

### பாலம் கட்டுதல்

***23909—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், அச்சன்புதூர்—இலத்தூர் செல்லும் சாலையில் அனுமான் நதியில் உள்ள பாலம் இடிந்து விழும் நிலையில் உள்ளதாலும், போக்குவரத்திற்கு ஆபத்தாக உள்ளதாலும் புதிய பாலம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

[2005 மார்ச் 4

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செறிக்கின்ற எந்தனது மலரின் தோட்டம்,
சிங்கார வானமதில் முகிலின் கூட்டம்,
விரிக்கின்ற தோகைமயில் ஆடும் ஆட்டம்,
வெளியெங்கும் தெரிகிறது கலையின் கோட்டம்,
அரிக்கின்ற நதியலையில் மரங்கள் ஆட்டம்,
அடைந்துவிட்ட பறவையெல்லாம் இசையைக் கூட்டும்,
இருக்கின்ற எனக்கு அவை களிப்பைக் கூட்டும்,
இறந்த அந்த இளந்தென்றல் இனிப்பை ஊட்டும்.
புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்திலே
வயலெல்லாம் நெற்கதிர்கள் வளைந்தாடும்,
வாய்க்காலில் மீன்கூட்டம் படைகள் ஓடும்,
அயர்ந்தாங்கே அமர்ந்து நான் கவிதை சொல்ல,
அழகான பசும்புற்கள் அணைகள் போடும்,
வேர்வையிலே சோர்வுற்று வீற்றிருந்தாலே
வீசிடுவாள் இளந்தென்றல் என்னைத் தொட்டு
இயற்கையிலே நான் கண்ட இன்பம் அடடா
இந்த அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தையும்
புரட்சித் தலைவியையும் மறக்க மாட்டோம்"

முற்பகல் 10-05

என்று ஏழை எளிய மக்களெல்லாம் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கின்ற வேளையிலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நெல்லை மாவட்டம், எனது தொகுதிக்குட்பட்ட அச்சன்புதூர்—இலத்தூர் செல்லும் சாலையில் அனுமான் நதியிலுள்ள பாலம் இடிந்து விழும் சூழ்நிலையில் மிகவும் பழுதடைந்த நிலையில்



2005 மார்ச் 4]

உள்ளது. அந்தப் பாலத்தின்மூலம் பயன்பெறும் கிராமங்கள், இலத்தூர், சீவநல்லூர், சித்திராபுரம், நடராஜபுரம், காந்தி காலனி, திருவொற்றியூர், நெடுவயல், பார்வதியாபுரம் ஆகிய கிராமங்களாகும். அந்த கிராமங்களிலுள்ள பொதுமக்கள்தான் இந்தச் சாலையில் செல்கிறார்கள். முதல் விடைக்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். இதற்கும் சொல்லிவிடுவாரோ என்று நான் பயந்துவிட்டேன். புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் கேட்காமலேயே தரக்கூடிய அரசு இது. ஆகவே, இந்தப் பாலத்தை இந்த ஆண்டு கட்டி முடிக்க....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பாடிய கவிதைக்கே கொடுக்கலாமே! நீங்கள் பாடின கவிதைக்கே பாலம் கட்டிக் கொடுக்கலாமே!

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சிறிய வேண்டுகோள். சங்க காலத்தில் புலவர்களுக்கெல்லாம் சன்மானங்கள் வழங்கப்படும். அதுபோல அமைச்சர் ஏதாவது பரிசு கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (சிரிப்பு) அந்தப் பாலத்தை இந்த நடப்பாண்டே கட்டிக் கொடுப்பார்களா என்பதையும் தங்களுடைய வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் செங்கோட்டை-சாம்பவரம்-வடகரை சாலையில் கிலோ மீட்டர் 6/0-லிருந்து அச்சன்புதூர் செல்லும் சாலையில் குறுக்கிடும் அனுமான் நதியின் கிலோ மீட்டர் 2/1.0-ல் அமைந்துள்ளது. இந்தப் பாலத்தை, நான் அந்த மாவட்டத்தினுடைய அனுமான் நதியின் பாசனப் பகுதிகளை ஆய்வு செய்யும்போது நேரடியாகப் பார்த்தேன். அப்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அந்தப் பகுதியிலிருக்கின்ற மக்களும் அந்தப் பாலத்தினுடைய அவசியத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்தப் பாலமானது மாவட்ட இதர சாலையில் உள்ளதாகும். இவ்விடத்தில் நீர்வழிப் பாதையின் அகலம் 14.40 மீட்டர் ஆகும். இவ்விடத்தில் 3.6 மீட்டர் நீளம் கொண்ட 4 கண்களுடைய குறுகலான பாலம் வலுவிழந்த நிலையில் உள்ளது. இருப்பினும் தற்போது இதன் வழியாக போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இவ்விடத்தில் 8 மீட்டர் நீளம் கொண்ட 2 கண்களுடைய R.C.C. பாலம் திரும்பக் கட்ட தோராயமாக ரூபாய் 50 இலட்சம் தேவைப்படும். 'நபார்டு' நிதியுதவியுடன் 120 கோடி செலவினத்தில் புதிய பாலங்களைக் கட்டுதல் மற்றும் பாலங்களைத்

[2005 மார்ச் 4

திரும்ப கட்டுதல் திட்டத்தின்கீழ் 215 பாலங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதில் அனுமான் நதி பாலமும் இடம் பெற்றுள்ளது. நிதியாண்டில் 'நபார்டு' நிதி உதவி கிடைத்தவுடன் இப்பணி விரைந்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**63—**

### சட்டக் கல்லூரி

**வினா 63263—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.



2005 மார்ச் 4]

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலிருந்து சட்டப் படிப்பு படிப்பதற்கு கோவை மற்றும் திருச்சி நகரங்களுக்கு செல்லவேண்டியிருப்பதால் ஏழையெளிய மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஈரோடு நகரம் வளர்ந்துவரும் பெரிய நகரமாகும், மேலும் ஈரோடு, மாவட்டத்தின் தலைநகரமாகவும் உள்ளதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 17-11-2003 இல் செங்கற்பட்டில் ஒரு சட்டக் கல்லூரி தொடங்கியதுபோல, ஈரோடு மாவட்டத்தில் சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டால் ஈரோடு, சேலம் நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, வரும் கல்வி ஆண்டிலாவது ஈரோட்டில் சட்டக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சட்டக் கல்வித் துறையின்கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் மொத்தம் ஐந்து அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஈரோட்டிலேயும் ஒரு சட்டக் கல்லூரி வேண்டுமென்று கேட்டு இருக்கின்றார்கள். சேலத்திலே சுயநிதிக் கல்லூரி இயங்கிக்கொண்டிருக்கின்றது. அந்தக் கல்லூரியிலே இல்லையென்றால், அவருக்கு பக்கத்து மாவட்டமான கோயம்புத்தூரிலே ஓர் அரசுக் கல்லூரி இருக்கின்றது, அந்தக் கல்லூரியிலே மாணவ மாணவிகள் சேர்ந்து பயன்பெறலாம். மாணவர்களிடையே சட்டம் படிக்கவேண்டுமென்கின்ற ஓர் ஆர்வம் மிகுதியாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், ஒவ்வோர் ஆண்டும் விண்ணப்பங்கள் அதிகமாக வருகின்ற நிலையில், அவர்களுக்கு சட்டக் கல்வி அளிக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் விருப்பம். எனவே, அதனை ஓர் அடிப்படைக் கருத்தாகக் கொண்டுதான், மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டம் பயில்கின்ற படிப்பிற்கு 680 இடங்களை 2002-2003 ஆம் கல்வி ஆண்டில் அதிகப்படுத்தி உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே 680 மாணவர்கள் கூடுதலாக சட்டம் பயில்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது.

முற்பகல் 10-10 [2005 மார்ச் 4

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது சட்டம் படிக்கக்கூடிய ஆர்வம் இன்று மாணவர்களிடையே அதிகமாக இருக்கிறது என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்பட்சத்தில் இருக்கக்கூடிய கல்லூரிகளில் ஆங்கே இருக்கைகளைப் பெருக்குவதைவிட, ஆங்காங்கே சில சட்டக் கல்லூரிகளை நீங்கள் உருவாக்கினால்தான், மாணவர்கள் அதிகமாகச் சேரக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். ஏற்கெனவே, 2000 ஆம் ஆண்டு இதே அவையில் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே வேலூரில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பு அப்படியே நின்றுவிட்டிருக்கிறதே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படி அறிந்திருப்பாரேயானால், ஏன் இதுவரை வேலூரிலே அரசு சட்டக் கல்லூரியை, அரசு ஏற்கெனவே அறிவித்தவாறு தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல, அறிவிப்பு ஏதும் அரசு வெளியிடவில்லை. அரசின் கருத்தாக, அது தீவிரமாகப் பரிசீலிக்கப்படும் என்று அதில் சொல்லப்பட்டிருக்கலாம். எனவே, சட்டக் கல்லூரி ஒன்று ஆரம்பிப்பதற்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால், இதிலே உள்ள நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும். மாணவர்களுடைய தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையிலே-entrance exam, அதே போன்று அவர்கள் இறுதியாண்டிலே பிளஸ்-2-விலே எடுக்கின்ற மார்க் அடிப்படையில் தேர்வு நடத்தி, தகுதியின் அடிப்படையிலே தேர்வு செய்யப்படுகின்றனர். அதில் குறைந்த மார்க் எடுக்கின்றதை அடிப்படையாக வைத்து ஒரு Self Financing கல்லூரி, இப்போது செங்கல்பட்டிலேகூட ஒரு constituent college ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த constituent college செங்கல்பட்டிலே ஆரம்பிக்கும்போது, நம்முடைய மாணவர்கள் வெளி மாநிலத்திற்குச் சென்று படிக்கின்றார்கள். இங்கே அவர்கள் அதைக் காட்டிலும் குறைந்த அளவுக்குக் கட்டணம் செலுத்தி படிக்கின்ற ஒரு வாய்ப்பைப் பெற்று அவர்கள் சட்டக் கல்வியை எளிதிலே பெற முடியும்



2005 மார்ச் 4]

என்கின்ற அந்த உயரிய எண்ணத்தோடுதான் அந்தக் கல்லூரி தொடங்கப்பட்டது. ஆனால், சேர்ந்துவிட்டு கட்டணம் உயர்வு என்கின்ற நிலையிலே இருக்கும்போது, அதை மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் constituent college, அதாவது constituent கல்லூரி அங்கே அமைப்பதற்கு அவர்கள் ஒத்துழைப்பு கொடுத்தால், அதை அமைப்பதற்கு அரசுக்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. அரசன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைக்கு தவறான தகவல் தரக்கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விளக்கம் நிறைய சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேரகன்:** தவறான தகவலை அவையில் பதியக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மெத்தப் பணிவன்போடு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். 2000 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில்—அரசாங்கம்—நீங்கள் ஒரு சட்ட அமைச்சர்—அந்தத் துறையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னர், (குறுக்கீடு) அதிலே சொல்லப்பட்டிருக்கிறது, தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருப்பதை, அது கருத்து என்று கருத முடியாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்து, வேலூரில் அரசு சட்டக் கல்லூரியைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு அந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே அது குறிப்பிடப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) 2000 ஆம் ஆண்டில் என்றால், அவர்களைப் போய் கேளுங்கள். (சிரிப்பு)

[2005 மார்ச் 4

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கெல்லாம் தனிக் கேள்வி போட வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அரசன் அவர்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** தொடக்கத்திலேயே நான் அரசு என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி நேரத்திலே அரசியல் பேசக்கூடாது என்கிற அடிப்படையில் நான் குற்றம் சொல்லவில்லை. இந்த வாக்குறுதிகளை எளிதில் கொடுத்துவிடலாம். கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றுவது என்பதுதான் அதன் சிறப்பு. எனவே கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுகின்ற ஓர் அரசு என்று சொன்னால் அது நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு என்றுதான் சொல்ல வேண்டுமேயொழிய வேறு எந்த அரசையும் சொல்ல முடியாது.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 64, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட வேண்டும். (குறுக்கீடு) மானியக் கோரிக்கைகளில் பேசலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்.

**64—**

### கூட்டுறவு வங்கி

***34195—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் வெங்கம்பாக்கம் கூட்டுறவு வங்கியை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2005 மார்ச் 4]

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கின்றேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர் அவர்களும் நான் கேட்டிருக்கிற முதல் கேள்விக்கு இல்லை என்ற பதிலை அவர்கள் தந்திருக்கிறார்கள். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி வெங்கம்பாக்கத்திலே இழுத்து மூடப்பட்டிருக்கிறது. அது, அந்தப் பகுதியிலே இருக்கிற சுற்று வட்டாரத்திலே இருக்கிற நூற்றுக்கணக்கான கிராம மக்களுக்கு உதவுகிற ஒரு தொடக்க வேளாண்மை வங்கியாக இருந்து கொண்டிருந்தது. அதை மீண்டும் திறப்பதற்கு, நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என நம்முடைய துணை சபாநாயகர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெங்கம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி என்பது, நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களுக்குச் சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. 11 கிராமங்களுக்கு மட்டுமே தொடர்புடைய ஒரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி. அந்த வங்கியினுடைய செயல்திறனானது சரியில்லாத காரணத்தினால், 1994 ஆம் ஆண்டே அந்த வங்கியினுடைய செயல்திறனானது குறைந்து, 2001 ஆம் ஆண்டு அந்த வங்கியானது செயல்பட முடியாது என்று கலைக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும், அநத வங்கியினுடைய பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் பயன்பெறத்தக்க வகையிலே, சதுரங்கப்பட்டினம், மெய்யூர், வெங்கம்பாக்கம், பூந்தண்டலம், நெய்க்குப்பி, சோலைக்குப்பம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெறத்தக்க வகையிலே, திருக்கழுக்குன்றம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியோடும், நத்தம் கரியஞ்சேரி, நல்லூர், ஆரம்பாக்கம் ஆகியவை குழிப்பாந்தண்டலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியோடும், நரசங்குப்பம், ஆலப்பாக்கம் ஆகியவை இசட். பாண்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியோடும் இணைக்கப்பட்டு, மேற்கூறிய வகையிலே இணைக்கப்பட்ட கிராமங்களில் பின்வருமாறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. திருக்கழுக்குன்றம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்மூலம், குறுகிய காலப் பயிர்க் கடனாக ரூ. 1.85 இலட்சமும், இதரக் கடன்களாக ரூ. 11.58 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன என்கிற தகவலைச் சொல்லி அமைகிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வெங்கம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியானது, அந்தப் பகுதியினுடைய மக்களுக்குப் பெரிதும் உதவிபுரிகிற வங்கியாக இருந்து கொண்டிருந்தது. இப்போது, அந்த வங்கியின் கிராமங்களை, 4 வங்கிகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் நிலையிலே, அவர்கள் அங்கு சென்றால், உடனடியாக, அதுவும் குறிப்பாக, திருக்கழுக்குன்றத்திலே இருக்கிற கூட்டுறவு வங்கிக்குச் சென்றால், அங்கு ஏற்கெனவே, பொன்விளைந்தகளத்தூர், சாலூர் போன்ற தொடக்க வேளாண்மை வங்கிகள் இதேபோன்று மூடிவிட்டிருக்கின்ற நிலையிலே, அங்கே அதிகமான கிராமங்களைச் சேர்த்ததன் காரணத்தினாலே, அவர்களுக்குச் சரியாக அங்கே கடன் வழங்கப்படுவது இல்லை. அதேபோன்று, இசட். பாண்டூர் கிராமத்திலே இருக்கிற வேளாண்மை வங்கிக்குச் செல்வதற்கு, அவர்கள் ஏறக்குறைய அரை நாள் செலவு செய்ய வேண்டும்; இரண்டு பேருந்துகளில் அல்லது மூன்று பேருந்துகளில் கடந்து செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. அதேபோன்று, குழிப்பாந்தண்டலம் வங்கிக்குச் செல்ல வேண்டுமென்றாலுங்கூட, இரண்டு பேருந்துகளைப் பிடித்துச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, இதை மறுபரிசீலனை செய்து, அந்த வெங்கம்பாக்கம் வங்கியை மீண்டும் துவக்க அரசு முன்வருமா என நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு சரக துணைப் பதிவாளர் கட்டுப்பாட்டிலே இயங்கிவந்த வெங்கம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ — உறுப்பினர்களுக்குப் பயிர்க் கடன் வழங்குதல்—அந்த நோக்கம் நிறைவேறாமல் 1994-க்குப் பின்னர் செயல்படாத நிலையில், செயலிழந்து வந்தது. இவ்வங்கி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை கேட்பில், 10 சதவிகிதம்கூட, உறுப்பினர்களிடமிருந்து வசூலித்து செலுத்த இயலாத நிலையில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் வசதி பெறும் தகுதியை இழந்துவிட்டது. வெங்கம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளை வளர்க்கும்முகமாக, போதுமான வாய்ப்புகளை அளித்தும் பயனில்லாத நிலையில், 17-5-2001 இல் இவ்வங்கி கலைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே வாய்ப்புகள் அளித்து, பயனளிக்காத நிலையில், இவ்வங்கியை மீண்டும் திறக்க வேண்டிய அவசியம் எழவில்லை. எனவே, கலைக்கப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியை, 6 ஆண்டுகளுக்கு மேலாக செயலிழந்து, புத்துயிரூட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பயனளிக்காத நிலையில், காஞ்சிபுரம் மாவட்ட மத்திய





கூட்டுறவு வங்கியின் ஒப்புதல் பெற்று கலைக்கப்பட்டுவிட்ட நிலையில், இதனைப் புத்துயிரூட்டித் திறக்க அவசியம் எழவில்லை. மேலும், கலைக்கப்பட்ட வெங்கம்பாக்கம் விவகார எல்லையிலுள்ள கிராம மக்கள், தொடர்ந்து கூட்டுறவு வங்கியின் சேவைகளைப் பெற ஏதுவாக இக் கிராமங்கள், அருகிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுடன்தான் இணைக்கப்பட்டுள்ளன என்கிற தகவலைச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அன்பழகன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை கூட்டுறவு வங்கிகள் மூடப்பட்டுள்ளன? அப்படி மூடப்பட்டுள்ள கூட்டுறவு வங்கிகளைத் திறப்பதற்கு... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனிக் கேள்வி போடவும் வினா எண் 65, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**65—**

## நியாய விலைக் கடை

***53517—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், சங்கராமநல்லூர் பேரூராட்சி, என்.ஜி. புதூரில், நியாய விலைக் கடை அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலை வட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், சங்கராமநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட என்.ஜி. புதூரில் முழுநேர நியாய விலைக் கடை, 952 குடும்ப அட்டைகளுடன், 1-4-1979 முதல், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே, என்.ஜி. புதூரில், நியாய விலைக் கடை இயங்கி வருவதால், மேலும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2005 மார்ச் 4

முற்பகல் 10-20

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடுமலை வட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், சங்கராமநல்லூர் பேரூராட்சி, என்.ஜி. புதூரில், அந்த பேரூராட்சிக்கு உட்பட்ட 6 கிராமங்களுக்கு நியாய விலைக் கடை இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 952 அட்டைகள் இருப்பதாகக் கூறினார்கள். அங்கே மூன்று கிராமங்களை உள்ளடக்கிய மயிலாபுரம், மடத்தூர் ஆகிய பகுதிகளிலே 600 அட்டைகளுக்குப் பக்கம் உள்ளன. அங்கே பகுதிநேர நியாய விலைக் கடை ஒன்றை அமைக்க நம்முடைய அரசு முன்வருமா என்பதையும் கேட்டு, என்னுடைய உடுமலைத் தொகுதியிலே, பல இடங்களிலே 900 அட்டைகள், 1,000 அட்டைகள் உள்ள பகுதிகள், சின்னவீரன்பட்டி, உடுமலை நகரத்திலே சாதிக் நகர், பெரியகோட்டை ஊராட்சியிலே சிவசக்தி காலனி, மடத்துக்குளம் ஊராட்சியிலே பெரியவட்டாரம் பகுதி—எஸ்சி. மக்கள் அதிகம் உள்ள பகுதி—போடிபட்டி பகுதியிலே காமராஜர் நகர் ஆகிய இடங்களிலே முழு நேரக் கடை அல்லது பகுதி நேரக் கடை வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டுள்ளேன். அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நகராட்சிப் பகுதிகளில் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமல் ஒரு நியாய விலைக் கடையும், கிராமப்புறங்களில், ஊரகப் பகுதிகளில் 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளும், குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்கின்ற அளவில்தான் நியாய விலைக் கடைகள் ஆங்காங்கு செயல்பட்டு வருகின்றன. தேவையான இடங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசுக்கு மனுச் செய்வார்களானால், அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் எத்தனை நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 4]

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக 62 நியாய விலைக் கடைகளும், கூட்டுறவு நிறுவனங்கள் சார்பாக 1,468 நியாய விலைக் கடைகளும், ஏனைய கூட்டுறவு நிறுவனங்களின் சார்பாக 30 நியாய விலைக் கடைகளும், பெண்களால், மகளிர் சுய உதவிக் குழுக்களின் சார்பாக நடத்தப்படும் 76 நியாய விலைக் கடைகளும், நடமாடும் நியாய விலைக் கடைகள் 5-ம், ஆகக்கூடி 1,641 நியாயவிலைக் கடைகள் கோவை மாவட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற தகவலைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு இப்போது புதிதாக தமிழகமெங்கும் புதிய ரேஷன் அட்டைகள் வழங்குகின்ற பணியை மேற்கொண்டு சிறப்பாக அவையெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஒவ்வோர் இடத்திலும் கூடுதலான பயனாளிகள் வருகின்ற ஒரு சூழல் இருக்கின்ற நிலையில், பல்வேறு இடங்களில் இந்தக் கடைகள் அதிகப்படுத்த வேண்டிய ஒரு நிலை இருக்கின்ற சூழல். அப்படிப்பட்ட நிலையில், தனியாக ஒரு கடை அமைக்கப்பட்டு, அதிலே அதிகப்படியான அட்டைகள் இருக்கின்ற நிலையில், எத்தனை அட்டைகள் இருந்தால் புதிதாக ஒரு நியாய விலைக் கடை அமைக்கப்படும்? ஏற்கெனவே இரண்டு மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் இருக்கின்ற கடைகளுக்கு மக்கள் சென்று வாங்குகின்ற நிலை, கஷ்டமாக இருக்கிறது என்கின்ற நிலையில், அவற்றையெல்லாம் பிரித்து, துணை நியாய விலைக் கடைகள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு நியாய விலைக் கடைக்கும், இன்னொரு நியாய விலைக் கடைக்கும் இடையிலே 2 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். தற்போதுள்ள நடைமுறைகளின்படி, 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேலாக இருக்கின்ற பகுதிகளிலே குடும்ப அட்டைகளினுடைய எண்ணிக்கைக்குத் தக்கவாறு பிரித்து, பகுதி நேர நியாய விலைக் கடைகளும் அமைக்கப்படுகின்றன என்கின்ற தகவலைச் சொல்லிக்கொண்டு அமர்கிறேன்.

[2005 மார்ச் 4

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 66, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**66—**

## மூத்த குடிமக்களுக்கு சலுகை

***16674—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மூத்த குடிமக்களுக்கு மருத்துவ வசதிகள், பேருந்துகளில் இருக்கை முன்பதிவு உட்பட பல்வேறு சலுகைகளை அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மூத்த குடிமக்களுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பதற்கென சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் வசதிகள் உள்ளன. அரசு பேருந்துகளில் முதியோர்களுக்கான இருக்கை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் அவர்கள். வள்ளல் பெருமானுக்குப் பதிலாகக் கேளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மூத்த குடிமக்களுக்கு மருத்துவ வசதிகள், மருத்துவமனைகளிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், மூத்த குடிமக்களில் பலர் இன்று ஆதரவற்ற நிலையிலே பஸ் ஸ்டாண்டுகள், ஆஸ்பத்திரிகள் போன்ற இடங்களிலே அலைந்து திரிகிறார்கள். அப்படிப்பட்டவர்களைத் தங்க வைத்து, அவர்களுக்கு உணவு வழங்குவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா? இல்லையென்றால், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?



2005 மார்ச் 4] முற்பகல் 10-25

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்ற ஆதரவற்ற முதியவர்களுக்கு பல்வேறு வசதிகளை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்து வருகின்றது. இன்றைக்கு ஆதரவற்ற, வருமானம் இன்றி உள்ள முதியவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், முதியோர் உதவித் திட்டத்தின்கீழ் மாதம் ஒன்றிற்கு 200 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டிற்கு இருமுறை பொங்கல், தீபாவளி பண்டிகைகளை முன்னிட்டு இலவச வேட்டி—சேலை வழங்கப்பட்டு வருகிறது. சத்துணவுக் கூடங்களில் மதிய உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் இரண்டு கிலோ அரிசியும், மதிய உணவு உட்கொள்ளாதவர்களுக்கு நான்கு கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. முதியோர் இல்லங்கள், நடமாடும் மருத்துவக் குழு மற்றும் பகல் நேரக் காப்பகங்கள் நடத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் அவற்றிற்கு மத்திய அரசு மற்றும் மாநில அரசால் மானியம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் முதியவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு உடல்நலம், இருப்பிட வசதிகள், ஆலோசனை மையங்கள், கல்வி முன்னேற்றம், பாதுகாப்பு அளிப்பது குறித்து முதியவர்களுக்கான மாநில கொள்கை விரைவில் அரசால் வெளியிடப்படவுள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற மூத்த குடிமக்களுடைய எண்ணிக்கை, துறையில் இருக்கிறதா? குறிப்பாக கலசப்பாக்கம் தொகுதியில், மல்லவாடியில் இருக்கின்ற தொழுநோயாளிகள் இல்லத்தில் முதியோர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால், அந்த இல்லம் மூடப்பட்டு அருகிலே இருக்கின்ற தொழுநோயாளிகள் இல்லங்களிலே அவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தத் தொழுநோயாளிகள் இல்லம் அங்கேயே இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் ஆதரவற்றோர், முதியோர் உதவித் தொகை பெறுவோர், 4,70,919 பேரும், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை 58,104 பேரும், விதவை உதவித்

தொகை 4,82,856 பேரும், விவசாயக் கூலி உதவித் தொகை 12,051 பேருக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் உதவித் தொகை 81,218 பேருக்கும் மொத்தம் 11,85,178 பேர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் சமீபத்தில் 650 பேர் இறந்திருக்கிறார்கள். அந்த 650 பேர்கள் போக மீதி 11,84,528 பேர்களுக்கு தமிழக அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 67, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**67—**

**பணவிடை மூலம் உதவித் தொகை**

***35226—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஏழை விதவைகள், முதியோர், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோருக்கு பணவிடை மூலம் அனுப்பப்படும் பணம் சம்பந்தப்பட்டவர்களுக்கு போய்ச் சேருவதில்லை என்ற புகார் பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தாங்களே கையெழுத்து/கைரேகையிட்டு பணத்தை எடுத்துக்கொள்ளும் ஒருசில அஞ்சல் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) சென்னை, சேலம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களைத் தவிர பிற மாவட்டங்களில் தபால் துறை ஊழியர்களால் முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுவதில் முறைகேடு எதுவும் செய்வதாகப் புகார் தெரிவிக்கப்படவில்லை.

(ஆ) சென்னை மாவட்டத்தில் பெரம்பூர்-புரசைவாக்கம், கோட்டை-தண்டையார்பேட்டை வட்டங்களிலும், சேலம் மாவட்டத்தில் வாழப்பாடி வட்டத்திலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர் வட்டத்திலும் முதியோர் ஓய்வூதியத்தில் தபால் துறை ஊழியர்களால் முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள்மீது கடும் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூத்த குடிமக்களுக்கு வழங்கப்படும் இந்த உதவித் தொகையை, மத்திய அரசின் அஞ்சல் துறையில் ஒருசில இளைய குடிமகன்கள் முறைகேடாக அபகரித்துக்கொள்வது வழிப்பறிக்கு ஒப்பான ஒரு செயலாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே அவர்கள்மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, இப்படி ஆதரவற்ற, யாருமே ஆதரிக்க முடியாத நிலையிலே இருக்கின்ற இந்த முதியோர் பென்ஷன் பெறுபவர்களுடைய பணத்தை அபகரிப்பவர்கள்மீது சம்பந்தப்பட்ட துறைவாரியாக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு, அவர்களை வேலையிலிருந்து தற்காலிகப் பணி நீக்கம் செய்வதற்கோ அல்லது வேலையிலிருந்து அவர்களை நீக்குவதற்கோ சம்பந்தப்பட்ட துறைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக பரிந்துரை அனுப்பப்பட்டு இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், இன்றைக்கு இதுபோன்ற முறைகேடுகள் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. சேலம் மாவட்டத்தில் வாழப்பாடி வட்டம், திருமனூர் கிராமத்தில் மேற்படி வகையான புகார் பெறப்பட்டு விசாரணை மேற்கொண்டதில், 176 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை மற்றும் இதர உதவித் தொகைகள் 2003, நவம்பர் மாதத்திற்குரிய திருமனூர் கிளை அஞ்சலக அலுவலர் திருமதி மீனாம்பாள், கணவர் பெயர் முத்துசாமி மற்றும் தபால் பட்டுவாடா செய்யும் ஊழியர் திரு. மயில்சாமி, s/o நைனாமலை ஆகிய இருவரும் கையாடல் செய்துள்ளனர். அவர்கள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதால், துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 6-4-2004 பிற்பகல் முதல் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும், இவர்கள் இருவரிடமும் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம், ரூபாய் 20 ஆயிரம் பெறப்பட்டு அஞ்சலகத்தில் செலுத்தப்பட்டது. இதுவரையிலும் 162 பயனாளிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது எனவும், 14 நபர்கள் பணம் வாங்க மறுத்துவிட்டதனால் விசாரணை நடைபெற்று வருகின்றது என்றும் சேலம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்கள்.

[2005 மார்ச் 4

பெரம்பூர்-புரசைவாக்கம் மற்றும் கோட்டை-தண்டையார்பேட்டை வட்டங்களைத் தவிர, பிற வட்டங்களில் உள்ள பயனாளிகளிடமிருந்து இதுபோன்ற குறிப்பான புகார்கள் ஏதும் பெறப்படவில்லை. பெரம்பூர்-புரசைவாக்கம் வட்டத்தைச் சார்ந்த வியாசர்பாடி பகுதியிலிருந்து 7 பயனாளிகள் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து தங்களுக்கு அனுப்பப்பட்ட உதவித் தொகை 3 முதல் 4 மாதங்களாக தங்களுக்கு வந்து சேரவில்லை எனவும் அண்மையில் புகார் அளித்துள்ளனர். இதுபோன்று கதவு எண் 31, தில்லைநாயகம் 3-வது தெரு, பெரம்பூர், சென்னையிலுள்ள ஹஜரத் பிலால் என்கின்ற ரவி, சமூக சேவை அமைப்புத் தலைவர், தனது 1-7-2004 நாளிட்ட மனுவில், பெரம்பூர் தபால் நிலையத்தில் பணிபுரியும் தபால்காரர் திரு எஸ்.எச். பிரபு என்பவர் சில பயனாளிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உதவித் தொகையை பல மாதங்களாக கொடுக்காமல் கையாடல் செய்துள்ளதாகவும், கையாடல் செய்யப்பட்ட தொகையில் ஒரு பகுதியை சம்பந்தப்பட்டவர்களுக்கு 28-6-2004 அன்று பட்டுவாடா செய்துள்ளதாகவும், மீதித் தொகையை 3-7-2004-ல் சம்பந்தப்பட்டவர்களுக்கு பட்டுவாடா செய்துவிடுவதாக உறுதி அளித்துள்ளதாகவும் தெரிவித்து, பாதிக்கப்பட்டவர்கள் 36 நபர்களது பெயர் விவரங்களை 1-7-2004 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். கோட்டை-தண்டையார்பேட்டை வட்டத்திலிருந்து ஒரே பயனாளியிடமிருந்து இவ்வாறான புகார் பெறப்பட்டுள்ளது. இப்புகார் குறித்து தொடர்புடைய பெரம்பூர்-புரசைவாக்கம் மற்றும் கோட்டை-தண்டையார்பேட்டை வட்டாட்சியர்கள் சம்பந்தப்பட்ட பயனாளிகளிடம் நேரடியாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளிக்க பணிக்கப்பட்டுள்ளனர். விசாரணை முடிவில், புகார்கள் உண்மையாக இருக்கும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட தபால் அலுவலர்கள்மீது துறை நடவடிக்கையுடன் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்க, தொடர்புடைய முதுநிலை அஞ்சலகக் கண்காணிப்பாளர் கேட்டுக்கொள்ளப்படுவார் என சென்னை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கண்டிப்பூண்டி மதுரா, உத்தண்டிப்பாளையம் கிராமத்தில் முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளிகளுக்கு ஓய்வூதியம் பணவிடைமூலம் அனுப்பிவைக்கப்பட்டதில், ஓய்வூதியம் சரியாக வழங்கப்படாததாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் புகார் மனு பொது மக்களால் கொடுக்கப்பட்டது. இதன்பேரில், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், போளூர் அஞ்சலக புறநிலை ஊழியர் திரு. சுந்தரமூர்த்தி என்பவர் முதியோர், விதவை உதவித் தொகையினை 3 மாதங்களாக வழங்கவில்லை என்றும், இதுகுறித்து அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை



2005 மார்ச் 4]

எடுக்கப்பட்டிருப்பதாகவும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதில் நிறைய சொல்லிவிட்டார்கள். திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி அஞ்சல் துறைமூலமாக நடைபெறுகின்ற தவறுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு, சென்னையிலே எடுத்துக்கொண்டால்கூட, தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்ற வங்கிகள், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி 44-ம், சென்னை மத்திய கூட்டுறவு வங்கி 63-ம், நகரக் கூட்டுறவு வங்கி 23-ம், ஆகமொத்தம் ஒட்டுமொத்தமாக 130 வங்கிகளில் ரூபாய் 2,150 கோடிக்கு மேலாக வைப்பு நிதி வைக்கப்பட்டு, மாநகராட்சியில் வங்கிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படி முதியோர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தில் ஒரு நபருக்கு 10 ரூபாய் என்ற வீதத்தில் Service Charge—ஆக அரசாங்கத்தின் வாயிலாகச் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வகையிலே பார்த்தால், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற 11,84,528 நபர்களுக்கு ஆண்டுக்கு 1 கோடியே 10 இலட்சத்து 5 ஆயிரத்து 280 ரூபாய் செலவாகிறது. மாநில அரசாங்கத்தின் மூலமாக நடத்தப்படும் வங்கிகளின்வாயிலாக இந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்வதற்கு ஏற்பாடு செய்தால் அரசாங்கத்திற்குப் பணத் தொகையும் மிச்சமாகும், இப்படி அஞ்சல் துறையினர் வாயிலாக நடத்தப்பெறுகின்ற ஊழலும் குறைவாகும் என்பதால், நம் வங்கிகள் மூலமாக பணத்தைப் பட்டுவாடா செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீண்ட பதில், நீண்ட கேள்வி.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 4

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 68. திரு. சி. சிவசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**68—**

## திருப்பூரில் மருத்துவமனை

***19741—திரு. சி. சிவசாமி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர் நகரின் வடபகுதியில் அனைத்து வசதிகளுடன்கூடிய ஒரு மருத்துவமனை அமைக்கப்படுமா ?*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய தலைநகரான டெல்லியிலே, புது டெல்லி, Old Delhi என்று இருப்பதைப்போல, பின்னலாடை தொழிலுக்குப் புகழ்பெற்ற திருப்பூர் நகரில், இன்றைக்குப் பழைய திருப்பூர், புதிய திருப்பூர் என்கின்ற அளவிற்கு திருப்பூரினுடைய வடக்குப் பகுதியில் புதிய திருப்பூர் நகரம் உருவாகியிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால், புதிய திருப்பூர் நகரத்தில் Nethaji Apparel Park என்ற பின்னலாடைத் தொழில் பூங்கா தொடங்கப்பட்டு, கோவை-ஈரோடு தேசிய நெடுஞ்சாலையில் இருக்கக்கூடிய அப்பகுதியில் சுமார் 50 ஆயிரம் பேர் வேலை பெறுகின்ற அளவுக்கு மிகப் பெரிய ஒரு தொழில் பூங்கா அங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. திருப்பூரிலே இருக்கக்கூடிய கோவை புறநகர் மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனை, திருப்பூரினுடைய தென்கிழக்கு திசையில் திருப்பூர் நகரத்தின் மையப் பகுதியிலிருந்து 5 கிலோ மீட்டருக்கு தெற்கே இருக்கிறது. திருப்பூரினுடைய வடக்குப் பகுதி என்பது கிட்டத்தட்ட திருப்பூர் நகரத்தினுடைய மையப் பகுதியிலிருந்து வடக்கே சுமார் 20 கிலோ மீட்டர் நீளம் வரை உள்ளது. எனவே, வடக்குப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் மருத்துவ வசதி வேண்டி திருப்பூர் நகரத்தையும் கடந்து, தெற்குப் பகுதியில் இருக்கின்ற தலைமை மருத்துவமனைக்கு வரவேண்டுமேயானால், கிட்டத்தட்ட 2 மணி நேரம் போக்குவரத்துக்காக எடுத்துக்கொள்ள வேண்டிய அவல நிலை இருக்கிறது.



2005 மார்ச் 4]

மேலும், திருப்பூர் தொகுதியைப் பொறுத்தவரையில், தமிழகத்தினுடைய பல பாகங்களிலிருந்து, பல மாநிலங்களிலிருந்து மக்கள் எல்லாம் தொழில் செய்வதற்காக திருப்பூர் நகருக்கு வந்திருக்கின்ற காரணத்தினால், 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்ற காரணத்தினால், மருத்துவ வசதியை உடனடியாக வழங்குவதற்காக திருப்பூரினுடைய வடக்குப் பகுதியிலே ஒரு மருத்துவமனை வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை இல்லை என்று மறுத்தாலும்கூட, திருப்பூர் நகரின் பேருந்து நிலையத்திற்கு அருகில் மத்தியிலே இருக்கக்கூடிய O.P. மருத்துவமனையில் மூன்று ஏக்கருக்கும் மேற்பட்ட இட வசதி இருக்கிறது. அந்த இடத்திலேயே மாண்புமிகு அம்மா அவர்களால் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மருத்துவப் பரிசோதனைக் கூடமும் கட்டப்பட்டு, இன்னும் ஒருசில மாதங்களில் தொடக்க விழா நடக்க இருக்கிறது. எனவே, திருப்பூர் பழைய பேருந்து நிலையத்தில் இயங்கி வருகிற அந்த O.P. மருத்துவமனையில் இருக்கக்கூடிய அந்த மூன்று ஏக்கர் வளாகத்தில் 40 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு மருத்துவமனையை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வந்தால், அதற்குரிய கட்டடங்கள் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் பொது மக்களுடைய பங்களிப்போடு உரிய கட்டட வசதிகளையெல்லாம் நாங்கள் செய்துகொள்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பழைய பேருந்து நிலையத்திலே இயங்கி வருகிற O.P. மருத்துவமனையில் 40 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு மருத்துவமனையை அங்கே புதியதாக அமைக்க முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய கேள்வியைக் கேட்கும்பொழுதே, அத்தனை வசதிகளையும், மருத்துவமனை செலவிலிருந்து, அத்தனைக் கட்டடங்களையும் கட்டித் தருவதாக உறுதி அளித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, பழைய பஸ் ஸ்டாண்டிற்கு அருகில் இப்போது அந்த மருத்துவமனை இயங்கி வருகிறது. அவர் கூறியதுபோல் அத்தனை வசதிகளையும் செய்து தருவார்களென்றால், கண்டிப்பாக அரசு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பழைய பேருந்து நிலையத்தில் இருக்கக்கூடிய O.P. மருத்துவமனையில்—(மணியடிக்கப்பெற்றது) சொல்லி விடுகிறேன்—புதிய மருத்துவமனை அமைத்துத் தருகிறேன் என்று கூறிய மாண்புமிகு

[2005 மார்ச் 4

அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேபோல, திருப்பூர் வடக்குப் பகுதியில் இருக்கக்கூடிய Primary Health Centre — P.H.C. மருத்துவமனை, அது கடந்த 4 ஆண்டுகளாக upgradation—க்காக அதாவது, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றுவதற்கான கோரிக்கை ஒரு முன்னணியில் இருந்தாலும்கூட, மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனை திருப்பூர் தொகுதியிலே இருக்கிற காரணத்தால், அந்த P.H.C. மருத்துவமனை upgrade செய்யப்படாமல் இருந்து வந்துள்ளது. எனவே, அந்த P.H.C. மருத்துவமனை வடக்குப் பகுதியிலே இருக்கிற காரணத்தால், அந்த மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக upgrade செய்து தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று இதற்கும் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐம்பதாயிரம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட நகராட்சிப் பகுதிகளிலே, சில நகரங்களிலே மருத்துவமனைகள் ஒரு ஓரமாக அமைந்து விடுகின்றன. ஆகவே, தமிழகம் முழுமைக்கும் ஒரு ஆய்வு செய்து, மறுபரிசீலனை செய்து, அப்படி ஒரு ஓரமாக இருக்கிற நகரங்களில் குறிப்பாக, அறந்தாங்கி நகராட்சிப் பகுதியில் இன்னொரு சிறிய மருத்துவமனை அந்த நகரத்திலே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கும், இவருடைய கேள்விக்கும் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் கேட்ட கேள்வி, அந்தப் பழைய பஸ் ஸ்டாண்ட் அருகிலே இருக்கக்கூடிய அந்த மருத்துவமனை 24 மணி நேரமும் இயங்க வேண்டும் என்றும், அதற்கு நிதி கொடுப்பதாகவும் உறுதி அளித்திருக்கிறார்கள். தாங்கள் கூறியது,



2005 மார்ச் 4]

ஏற்கெனவே அறந்தாங்கியில் மருத்துவமனை இருக்கிறது என்றும், அதற்கு அருகிலே இன்னொரு மருத்துவமனை வேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். கண்டிப்பாக அதற்கு சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 69, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**69—**

## குழந்தைகளின் இறப்பு விகிதம்

***22513 —திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழந்தைகளின் இறப்பு விகிதங்களைக் குறைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குழந்தைகளினுடைய இறப்பு விகிதங்களைக் குறைத்திட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சிசுக்களுக்குப் போதிய அளவு உணவு ஊட்டாமை, வீடுகளிலே சுத்தம் மற்றும் சுகாதாரமான பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்காமை போன்றவற்றால் ஏற்படும் பின்விளைவுகளைப்பற்றி தாய்மார்களுக்கு எடுத்துரைக்கப்படுகின்றன. மேலும், நோயுற்ற குழந்தைகள் மற்றும் சிசுக்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்க, கிராம சுகாதார செவிலியர்களுக்குத் தேவையான பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. கிராம சுகாதார செவிலியர்கள் வீடுகளுக்கு நேரிடையாகச் சென்று புதியதாக பிரசவித்த குழந்தைகளுக்கு மருத்துவக் கவனிப்பு அளிப்பதோடு சத்துணவு பற்றிய கருத்துகளையும் தாய்மார்களுக்கு எடுத்துரைக்கின்றனர். சிசுக்களுக்கு தாய்ப்பால் ஊட்டுதல், சிசுக்களின் உணவு முறை பழக்க வழக்கங்கள் மற்றும் நோயுற்ற காலங்களிலே குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டிய உணவு வகைகள் பற்றிய அறிவுரைகளையும் வழங்குகின்றனர். சிசு மரணம், பிரசவத்தின் போது தாய்மார்கள் மரணம் மற்றும் எடை குறைவான குழந்தைகள் பிறத்தல் போன்றவற்றைத் தடுக்கவும், புதியதாகப் பிரசவிக்கும் குழந்தைகளுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கும் பொருட்டு, 24 மணி

நேரமும் இயங்கக்கூடிய சீமாங்க் [CEMONC] அமைப்புகள் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன. 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குத் தடுப்பூசியின் மூலம் தடுக்கப்படக்கூடிய நோய்களுக்கு எதிராக தடுப்பூசி போடப்படுகிறது. இதனால் இக்குழந்தைகளுக்கு வைட்டமின்—ஏ திரவம் அளிக்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு, குழந்தைகளினுடைய இறப்பு விகிதங்களைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளுக்கு பிரசவத்திற்குச் செல்லும் பெண்களில் பலருக்கு கஷ்டப் பிரசவம் ஏற்படுகிறது. அப்போது நர்சுகள், கர்ப்பிணிப் பெண்களிடம் கனிவாக நடந்து கொள்ளாமல், கடும் சொற்களால் திட்டவும் செய்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படாமல் இருக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த அரசின் இந்த அரிய முயற்சிகளினால் இறப்பு விகிதம் குறைந்துள்ளதா? 2000 ஆம் ஆண்டில் குழந்தைகளின் இறப்பு விகிதம் என்ன? 2004 ஆம் ஆண்டில் இறப்பு விகிதம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் செவிலியர்களுடைய நடவடிக்கை குறித்துக் கூறியிருக்கிறார்கள். தற்சமயம் ஆங்காங்கே இருக்கக்கூடிய அரசு மருத்துவமனைகளிலே மகப்பேறு நடக்கும்பொழுது, குழந்தைகள் பிறந்தவுடனே-Labour Ward—லே இப்போது மைக் பொருத்தப்பட்டிருக்கிறது, செவிலியர்கள், அங்கு வரக்கூடிய தாய்மார்களிடம் கனிவாக நடந்துகொள்ள வேண்டும். குழந்தைகள் பிறந்தவுடனே ஆணா, பெண்ணா என்பதை ஒலிபெருக்கிமூலம் சொல்ல வேண்டும் என்பதற்கான உத்தரவும் இடப்பட்டிருக்கிறது.

தாங்கள் கேட்ட அடுத்த கேள்வி, இப்போது குழந்தைகளினுடைய இறப்பு விகிதம் பற்றியது. 2000-லிருந்து 2004 வரை கேட்டிருக்கிறீர்கள். நமது தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், 2000 ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால், 1000 குழந்தைகளுக்கு 51 குழந்தைகள் இறந்திருப்பதாகவும், 2002-2003-லே 1000-க்கு 44-ம், 2003-2004-லே 30.1-ம் இறந்திருப்பதாக கணக்கெடுப்பின்போது அந்த ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே 2000-லிருந்து 2004 வரை நீங்கள் நோக்கும்போது இறப்பு 1000-க்கு 51-லிருந்து 30.1 ஆகக் குறைந்திருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலியோ ஒழிப்பு, அம்மை தடுப்பூசி போன்றவற்றிற்காக வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள்மூலமாக விளம்பரம் செய்வதைப்போல, குழந்தை பிறந்தது முதல், சுமார் மூன்றரை வயதுவரை குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும்; எந்த எந்த மாதத்தில் என்னென்ன உணவு வழங்க வேண்டும் என்று அரசு விளம்பரப்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற விளம்பரங்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு Pulse Polio சொட்டு மருந்து சிறப்பு முகாம் நடக்கும்பொழுது 'இன்று ஒரு தகவல்' என்ற ஒரு விளம்பரத்தை ஆங்காங்கே இருக்கக்கூடிய பொது மக்களுக்கும், தாய்மார்களுக்கும் விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதிலே, குழந்தைகள் பிறந்தவுடன் மேற்கொள்ள வேண்டிய சில குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே முதலில் குறிப்பாக, குழந்தைகள் பிறந்தவுடனே தாய்ப்பால், சீம்பால் ஊட்ட வேண்டும். முதல் ஆறு மாதங்களுக்குத் தாய்ப்பால் மட்டுமே ஊட்ட வேண்டும். ஆறு மாதங்களுக்குப் பிறகு தாய்ப்பாலுடன் இணை உணவும் கொடுக்க வேண்டும். தாய்ப்பால் எவ்வளவு காலம் ஊட்ட முடியுமோ அவ்வளவு காலம் கொடுக்கலாம்.

அடுத்தபடியாக, கால அட்டவணையை எடுத்துக்கொண்டால், பிறந்தவுடன் ஒரு தடுப்பூசி.-முதலாவதாக எடுத்துக்கொண்டால், முதல் மாதத்திற்குள்ளாக B.C.G. என்ற ஊசியைப் போடவேண்டும், மற்றும் D.P.T. என்ற தவணையாக போலியோ சொட்டு மருந்தும், மற்றும் D.P.T. என்ற அந்தச் சொட்டு மருந்தும் ஒன்றரை மாதத்திற்குள்ளாகப் போடவேண்டும், இரண்டாவது தவணையாக எடுத்துக்கொண்டால், போலியோ சொட்டு மருந்தும் மற்றும் D.P.T.-யையும் இரண்டரை மாதத்திற்குள்ளாகப் போடவேண்டும், மூன்றாவது தவணையாக எடுத்துக்கொண்டால், போலியோ சொட்டு மருந்தும் மற்றும் D.P.T.-யையும் மூன்றரை மாதத்திற்குள்ளாகப் போடவேண்டும். தட்டம்மை தடுப்பூசி பத்தாவது மாதத்திற்குள்ளாகப் போடவேண்டும். இதுபோக, பல்வேறு விளம்பரங்கள், சொட்டு மருந்து முகாம் நடக்கும்போது ஆங்காங்கே இருக்கக்கூடிய கிராமங்களுக்கு, கிராம சுகாதாரச் செவிலியர்கள் சென்று தினந்தோறும் அதை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-45 [2005 மார்ச் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குழந்தைகளுடைய இறப்பு விகிதத்தை குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக, இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 50-க்கு மேல் இருந்தது, ஆயிரத்திற்கு 40, பிறகு இப்பொழுது 30-ஆகக் குறைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படி ஆயிரத்திற்கு 30 இறப்பு என்று சொன்னாலும்கூட, மருத்துவ வசதி வேகமாக வளர்ந்து வரக்கூடிய இந்தச் சூழ்நிலையில் ஆயிரத்திற்கு 30 என்பது மிக வேதனையளிக்கக்கூடிய அம்சமாக இருக்கிறது. ஆகவே, குழந்தைகளுடைய இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காக, கிராமப்புறங்களிலே நடமாடும் மருத்துவமனைகள் மூலமாக இறப்பு விகிதத்தைத் தடுப்பதற்கு, அதிலும் குறிப்பாக, பள்ளி வயதுக்குக் கீழே உள்ள குழந்தைகளின் இறப்பு விகிதத்தைத் தடுப்பதற்கு சிறப்புத் திட்டங்களை நடமாடும் மருத்துவமனைகள் மூலமாக மேற்கொள்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறும்போது, இறப்பு விகிதம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை இந்தியாவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது மாநிலம் இன்றையதினம் இரண்டாவது இடத்திலே இருந்து கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் இறப்பு விகிதம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அடுத்து, நடமாடும் மருத்துவமனைகள் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பள்ளிகளை எடுத்துக்கொண்டால், குறிப்பாக அரசு ஆரம்பப் பள்ளிகளாக இருந்தாலும், அத்தனை பள்ளிகளிலும் நடவடிக்கைகள் சுகாதாரத் துறை மூலம் எடுக்கப்பட்டு, வியாழக்கிழமைதோறும் மருத்துவர்கள் அங்கு சென்று அங்கிருக்கக்கூடிய குழந்தைகளுக்கு என்னென்ன நோய் என்பதைக் கண்டறிந்து, அதற்கும் மருந்துகள் கொடுக்கப்படுகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001-2002, 2002-2003, 2003-2004, 2004-2005 ஆம் ஆண்டுகளில் ஆண் குழந்தைகள் எவ்வளவு பிறந்திருக்கின்றன, பெண் குழந்தைகள் எவ்வளவு பிறந்திருக்கின்றன என்பதையும், அதேநேரத்தில் பொதுவாக ஒரு கருத்து. தமிழகத்திலே பல மாவட்டங்களில் பேசிக்கொள்கிறார்கள்.



2005 மார்ச் 4]

ஆண் பிள்ளைகள் அதிகமாகவும், பெண் பிள்ளைகள் குறைவாகவும் இருப்பதாகப் பேசிக்கொள்கிறார்கள். அந்த விகிதாச்சாரங்களையும், அந்தக் கணக்குகளையும் தெளிவாகப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கணக்கை ஆய்விலே எடுத்துக்கொண்டால், சென்னையை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட ஆயிரத்திற்கு 957 ஆண் குழந்தைகளும், கோவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 963-ம், கடலூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 986-ம், தருமபுரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 938-ம், திண்டுக்கல் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 986-ம், ஈரோடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 972-ம், அதேபோல காஞ்சிபுரம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 975-ம், கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1014-ம், அங்கு அதிகமாகவே இருக்கிறது; கரூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1010-ம், கிருஷ்ணகிரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 938-ம், மதுரை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 978-ம், நாகப்பட்டினம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1016-ம்,-ஆயிரம் என்பது ஆண் குழந்தைகள், 1016 என்பது பெண் குழந்தைகள்; நாமக்கல் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 966-ம், நீலகிரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரம் ஆண்களுக்கு 1014 பெண் குழந்தைகள் பிறந்திருக்கின்றன; பெரம்பலூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரம் ஆண்களுக்கு 1006 பெண் குழந்தைகள், புதுக்கோட்டை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1015-ம் பிறந்திருக்கின்றன; இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1036-ம், சேலம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 926-ம், சிவகங்கை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1038-ம், தஞ்சாவூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1021-ம், தேனி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 978-ம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1001, திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1042, திருவள்ளூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 971, திருவண்ணாமலை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 995, திருவாரூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1014, தூத்துக்குடி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1050, வேலூர் மாவட்டத்தை

எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 997, விருதுநகர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 1012, விழுப்புரம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்கு 984-ம் பிறந்திருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கேள்விக்கு மாவட்டம் வாரியாக தெளிவான விளக்கங்கள் கொடுத்திருக்கின்றேன் என்பதை மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கமான பதிலைத் தந்தார்கள். குழந்தைப் பேறு மருத்துவர்கள் இல்லாத சில மருத்துவமனைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த இடங்களிலே அந்த மருத்துவ வசதி இல்லாமல் குழந்தைகள் இறக்க நேரிடுகின்றன. ஊட்டியைப் பொறுத்தவரையில், ஐந்து மருத்துவர்கள் இருக்க வேண்டிய இடத்திலே ஒருவர்கூட இல்லை. அந்த மாதிரி இடங்களில் அந்தக் குழந்தைப் பேறுகால இறப்பைக் குறைப்பதற்காகக் கட்டாயமாக மருத்துவர்கள் பணியிடம் நிரப்ப வேண்டும் என்ற வகையிலே அரசு ஏதாவது ஒரு திட்டம் வகுக்குமா? Scan முறையைத் தடுப்பதற்கு, அதோடு சேர்த்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினருடைய கேள்விக்கு தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த அரசு பொறுப்பேற்ற உடனே, தமிழக வரலாற்றிலே இதுவரையிலும் இல்லாத அளவிற்கு, ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்குப் பெயர்தான் CEMONC—Comprehensive Emergency Obstetric and New Born Care Centre—விரிவான உடனடிப் பேறுகால கவனிப்பு வசதி மற்றும் பிறந்த குழந்தைகளைப் பராமரிக்கும் வசதி கொண்ட மருத்துவம். கிட்டத்தட்ட ஒரு மாவட்டத்திலே இரண்டு மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டு மருத்துவமனைகளிலும் குறைந்தது ஏழு மருத்துவர்கள், அதாவது பெண் மருத்துவர்கள் முதல் அத்தனை மருத்துவர்களையும் நியமிக்க வேண்டும் என்ற ஓர் உத்தரவை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிறப்பித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்த்தால், கிட்டத்தட்ட 29 மாவட்டங்களிலும், கிட்டத்தட்ட இருக்கக்கூடிய அத்தனை மாவட்டங்களிலும் குறைந்தது





இரண்டு அல்லது மூன்று வீதம், 51 அரசு மருத்துவமனைகள், அதுபோல மருத்துவத் துறையிலே இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் 11, ஆக மொத்தம் 62 மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அங்கே கண்டிப்பாக மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். உதாரணத்திற்கு ஊட்டியை எடுத்துக்கொண்டால், அதற்காக அவர்களுக்குத் தனியாக இப்போது அந்தத் தேர்வு செய்யப்படுகிறது, ஊதியமும் அவர்களுக்குத் தனியாக அளிக்கப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல தாங்கள் ஒரு கேள்வியைக் கேட்டீர்கள். Scan மூலமாக எடுக்கக்கூடிய, அந்தக் குழந்தைகள் பிறப்பைப்பற்றி இந்த அரசைப் பொறுத்தவரையிலே, எப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று. கடந்த மாவட்ட ஆட்சியர்களுடைய கூட்டத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு நல்ல கருத்தை மாவட்ட ஆட்சியாளர்களுக்கு எல்லாம் வழங்கினார்கள். அப்போதுதான் ஒரு நல்ல கருத்து வரும்போது, குறிப்பாகப் பெண்கள் கருத்தரித்தவுடனே, அவர்கள் கர்ப்பப் பையில் இருக்கக்கூடிய பனிக்குடம் நீரை, ஆங்காங்கு இருக்கக்கூடிய பனிக்குடம் பரிசோதனை நிலையத்தின்மூலம் எடுத்து, அது ஆணா, பெண்ணா என்று பரிசோதிக்கிறார்கள். அதற்கும் இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்த உத்தரவின் அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், இணைச் சுகாதாரச் செயலாளர், துணைச் செயலாளர்கள், அதேபோல N.G.O.-ஐ எல்லாம் சேர்த்துக்கொண்டு, கிட்டத்தட்ட 10 பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, இதுபோன்ற இடங்களிலே பிறக்கும் குழந்தைகள் ஆணா, பெண்ணா என்பதைக் கண்டுபிடிக்கக் கூடாது; அப்படி கண்டுபிடித்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் சிசுக் கொலைகள் தமிழகத்தில் தற்போது நடந்து வருகிறதா? அதைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன? அதேபோல, என்னுடைய தொகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு குழந்தை நரபலி கொடுக்கப்பட்டது. அப்படி கொடுக்கப்பட்டதற்கு, அரசு உரிய நடவடிக்கை எடுத்து, அந்தக் குற்றம் செய்தவர்கள் விரைவாக

[2005 மார்ச் 4

தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுபோன்று, வேறு மாவட்டங்களில் குழந்தைகள் நரபலி கொடுக்கப்பட்டிருக்கிறதா? அதன்மீது வழக்கு தொடுக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா? சென்னை போன்ற மாநகர்களில் இந்த ஆழ்துளைக் கிணறுகள் போடுகின்றபோது, bore well போடுகின்றபோது, அதிலே சில குழந்தைகள் தவறி விழுந்து உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறபோது, தீயணைப்புத் துறை எவ்வளவோ முயற்சித்தும்கூட, அவர்களைக் காப்பாற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி தொடர்ந்து இந்தக் குழந்தைகள் இறப்பதைத் தடுப்பதற்கும், சமுதாயத்தில் இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகள் காரணமாக குழந்தைகள் இறப்பதைத் தடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும், அப்படி நரபலி கொடுக்கப்படுகின்ற குழந்தைத் தொழிலாளர்கள்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லி முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிசு மரணத்திற்கு இரண்டு வகையான காரணங்கள் உள்ளன. ஒன்று மருத்துவ ரீதியான காரணம். இன்னொன்று சமூக ரீதியான காரணம். மருத்துவ ரீதியான காரணங்களுக்கு ஏற்கெனவே விளக்கம் கொடுத்திருக்கிறேன். சமூக ரீதியான காரணங்களுக்குத் தாங்கள் கூறியதுபோல, அத்தகைய காரணங்களுக்கு எல்லாம் ஆங்காங்கு இருக்கக்கூடிய, அரசு சார்பாக இருக்கக்கூடிய கிராமச் சுகாதாரச் செவிலியர்கள், அங்கு இருக்கக்கூடிய கிராமப் பகுதிகளுக்குச் சென்று, அந்தக் கிராமப் பகுதியினுடைய மக்களுக்கு, பெண்களுக்கு, குறிப்பாக நீங்கள் கூறிய அந்த கொலை போன்ற செயல்களில் எல்லாம் ஈடுபடக் கூடாது என்று அறிவுரைகள் கூறி, Cultural Programme போன்ற நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரமாக, மாவட்ட வாரியாக ஆண் குழந்தைகள் பிறப்பு விகிதம், பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் பற்றி எல்லாம் கூறினார்கள். 2000 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை, ஆணும் இல்லாமல், பெண்ணும் இல்லாமல், eunuch, அலியாக, குழந்தைகள் பிறப்பு ஏதாவது இருக்கிறதா? அப்படி இருக்குமேயானால் அப்படிப்பட்ட பிறப்புகள் இனி வராமல் தடுப்பதற்கு அமைச்சர் ஏதாவது



2005 மார்ச் 4]

நடவடிக்கை எடுத்திருக்கிறாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**70—**

## புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

***30609—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு, இயந்திரத் தளவாட முதலீட்டிற்கு 15 சதவிகிதமாக உள்ள மானியத்தை 25 சதவிகிதமாக உயர்த்தித்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களை நகர்ப்புறங்களாக மாற்றி, கிராமப்புறங்களிலே உற்பத்தியையும், வேலைவாய்ப்பையும் அதிகரிக்கின்ற மிக அற்புதமான திட்டமான மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே, இயந்திரத் தளவாடங்களுக்கு 15 சதவிகிதம் மானியம் வழங்கப்படுவதுபோல்—அது அதிகரிக்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னாலும், முதலீட்டாளர்களை, தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்துகின்ற, உற்சாகப்படுத்துகின்ற வகையிலே வேறு என்னவிதமான சலுகைகள் அரசினுடைய சார்பிலே வழங்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

[2005 மார்ச் 4

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி ஊரகப் பகுதிகளில் வேளாண் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்காகவும், ஊரகப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்காகவும், ஊரகப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிய திட்டம் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இதன் மூலமாக, தொழிற்சாலைகளில் நிறுவப்படுகின்ற மின்னாக்கியின் முதலீட்டில் 15 சதவிகிதம், அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் வரையிலும், தொழிற்சாலையில் 50 சதவிகிதத்திற்கு மேல் மகளிரைப் பணிக்கு அமர்த்தும் நிறுவனங்களுக்குக் கூடுதல் மானியமாக முதலீட்டில் 5 சதவிகிதம், 5 இலட்சம் ரூபாய் வரையிலும், தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள், இதில் எது முந்தியதோ அந்த நாளிலிருந்து வசூலிக்கப்பட்ட மின் கட்டணத்திலிருந்து முதல் ஆண்டு 30 சதவிகிதம், இரண்டாம் ஆண்டு 20 சதவிகிதம், மூன்றாம் ஆண்டு 10 சதவிகிதம் என 3 ஆண்டுகளுக்கு மின் மானியம் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபோன்ற நல்ல பல சலுகைகளைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்குப் பின்னாலே, எத்தனை மாவட்டங்களிலே இந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி எத்தனைத் தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன? எத்தனைத் தொழில்கள் தொடங்கப்பட்டு இன்றைக்குப் பயனாளிகள் பயன்பெற்றிருக்கிறார்கள்? புதுக்கோட்டை மாவட்டத்திலே இதுபோன்ற புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் எத்தனைத் தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் ஒரு கோடி முதலீட்டிற்குக் குறையாத அளவிற்கு வேளாண் சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. 25-2-2005 நிலவரப்படி, 385 ஊராட்சி ஒன்றியங்களில் 144 ஒன்றியங்கள் சார்ந்த 213 தொழில் அலகுகள் ரூ.138.43 கோடி முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுதவிர கூடுதலாக



2005 மார்ச் 4]

புதுக்கோட்டை உள்பட 88 ஊராட்சி ஒன்றியங்களில் 165 திட்டங்கள் ரூ.108.36 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்பட்டு இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**71—**

## புதிய தொழில் மையம்

***31674—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தில் சிட்கோ மூலம் புதிய தொழில் மையம் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி. பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தில் சிட்கோ மூலம் புதிய தொழில் மையம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஊத்தங்கரையில் 41.25 ஏக்கர் நிலம் பெறப்பட்டு அதில் ஒரு பகுதி மேம்படுத்தப்பட்டு தொழிற்பேட்டை 1995-96-ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிற்பேட்டையில் கட்டப்பட்ட 5 தொழிற்கூடங்களில் ஒரு தொழிற்கூடம் தனியார் சிறு தொழில் நிறுவனம் ஒன்றிற்கு 1997-98 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படித் தொழிற்கூடத்திற்கான அப்போதைய விலை ரூ.6 இலட்சத்து 94 ஆயிரத்து 600 என நிர்ணயிக்கப்பட்டது. இந்தக் கிரயத் தொகையினை சிறு தொழில் நிறுவனம் செலுத்த

[2005 மார்ச் 4

முன்வரவில்லை. மேலும், மற்ற தொழிற்கூடங்களுக்கும் எந்தவிதமான விண்ணப்பங்களும் பெறப்படவில்லை. இதன் அடிப்படையில் பல தடவை உள்ளூரிலேயே இருக்கக்கூடிய நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு அதன் பேரிலேயும் தொழில் முனைவோர்கள் வரவில்லை. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மீண்டும் அந்தப் பகுதிகளில் தொழிற்கூடங்கள் அமைக்கப்பட வேண்டும் என்கிற அறிவுறுத்தலை ஏற்று, 2003—2004 ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனத்தால் முடிவெடுக்கப்பட்டு இம்மாத இறுதிக்குள் ஊத்தங்கரையில் கட்டப்பட்டுள்ள தொழிற்கூடங்களை ஒதுக்கீடு செய்வதற்கு வசதியாக தனியார் சிறு தொழில் நிறுவனங்களிடமிருந்து போதிய விண்ணப்பங்கள் வரப்பெற்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் இரண்டும் ஒன்றுபட்ட மாவட்டமாக இருந்தபோது, தருமபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம் என்று மனிதவள மேம்பாட்டுத் துறை ஆய்வு செய்து இருக்கிறது. அரசியல், பொருளாதாரம், கலை, கலாச்சாரம், மனித வாழ்வியல் ஆண்டுகள் அனைத்திலுமே பின்தங்கிய மாவட்டம் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட மாவட்டத்தினுடைய ஒரு கடைசி பகுதியாக ஊத்தங்கரை வட்டம் இருக்கிறது. அங்கு படித்த இளைஞர்களுக்கு எந்தவிதமான வேலைவாய்ப்பும் இல்லாமல் வெளி மாநிலங்களுக்குச் சென்று அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட பின்தங்கிய பகுதியிலே தொழில்கூடம் துவங்குகின்ற நோக்கத்தோடு கட்டப்பட்ட கட்டடங்கள் அனைத்தும் இன்றைக்கு வெறுமனே காலியாக இருந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலையில், அரசாங்கம், தனியார் வருவார்கள் என்று எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அரசாங்கம் ஏதேனும் ஒரு முன்முயற்சி எடுத்து தொழில்கள் துவங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டால், அப்பகுதியில் படித்த இளைஞர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பினை பெறுகின்ற ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்த முடியும் என்பதைக் கணக்கில் கொண்டு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 4]

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால்தான் தருமபுரியில் 19 தொழில்கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை, பாப்பிரெட்டிபட்டி, காரிமங்கலம், சின்னாத்தூர், பொம்மிடி, பண்டாரச்செட்டிபட்டி, பில்பருத்தி, சிங்காரஹள்ளி, கடத்தூர், துருஞ்சிப்பாளையம், பள்ளிப்பட்டி, பயர்நத்தம், மெனசி, வெள்ளக்கவுண்டன்பாளையம், செட்டிக்கரை, மதனமங்கலம், மதனஹள்ளி, நாத்தம்பட்டி, சாமல்பட்டி, அரூர், ஒட்டப்பட்டி இந்த இடங்களிலே எல்லாம் சிறு தொழிற்கூடங்கள் 'சிட்கோ'-வினால் கட்டப்பட்டு இன்றைக்கு சிறு முதலீட்டாளர்கள் இதன்மூலம் பயன்பெற்று வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஊத்தங்கரைப் பகுதியில் ஏற்கெனவே அரசின் சார்பில் தொழில் முனைவோர்களுக்கு வசதியாக ஏற்கெனவே 6,94,600 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்ட தொழிற்கூடத்திற்கான விலையை ரூபாய் 4,00,000-ஆகக் குறைத்து, அதற்குப் பிறகு தற்போது அதை ரூபாய் 3,06,000-ஆகக் குறைத்து மீண்டும் தொழில் முனைவோர் வரவேண்டுமென்று விளம்பரப்படுத்தி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உங்களுடைய தொகுதிக்கு இந்தத் தொழிற்கூடம் தேவையிருப்பின் அங்கே இருக்கக்கூடிய தொழில் முனைவோர்களைச் சந்தித்து முயற்சி செய்தால் இந்தக் குறைந்த விலையிலே இந்தத் தொழிற்கூடத்தை நீங்கள் சிபாரிசு செய்யக்கூடியவருக்கு நாங்கள் தொழிற்கூடத்தைத் தந்து அந்த இடத்திலே தொழிற்சாலை தொடங்குவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிட்கோ' தொழில் மையங்கள் அமைந்திருக்கின்ற பகுதிகளிலே சாலைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த 'சிட்கோ'வும் அந்தச் சாலைகளை மேம்படுத்துவது இல்லை. சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளும் சாலைகளைச் செப்பனிடுவதில்லை. ஆகவே, இந்த அரசு அந்த 'சிட்கோ' மையங்களிலே இருக்கின்ற அந்தச் சாலைகளையெல்லாம், தரம் உயர்த்த, செப்பனிட முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிட்கோ' நிலத்திலே போடப்பட்டிருக்கக்கூடிய சாலை வசதிகளையெல்லாம் அந்தந்த ஆண்டு ஒதுக்கீடு செய்து நாங்கள் சாலைகளைச் செப்பனிட்டுத் தந்திருக்கிறோம். உள்ளாட்சி அமைப்புகளில்

[2005 மார்ச் 4

அரசியல் காரணங்களால், வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதிகளில் தலைவர்களாக இருப்பார்களேயானால், அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையை, அரசுக்குச் சாதகமாக வந்துவிடும் என்கின்ற காரணத்தினால் காலம் தாழ்த்துகிறார்கள். மேலும் அவர்களுக்கு இதுபோன்ற சாலைகளைச் செப்பனிடுவதற்கு அரசின் சார்பிலே அறிவுறுத்துகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிட்கோ' மூலம் தொழிற்பேட்டை துவங்குவதாக செய்யாறிலே அறிவித்து, அதிலே இடங்களாகத்தான் தரப்படும், அதிலே கட்ட முடியாது என்று சொல்லிய காரணத்தினால், அந்த....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 72, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**72—**

## கட்டட வசதி

### *20665—திரு. மீ.அ. வைதியலிங்கம்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அகரம் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் நலத் துறை பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன ?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, அகரம் பதுவஞ்சேரியில் உள்ள ஆதிதிராவிடர் நலத் துறை நடுநிலைப் பள்ளிக்கு தற்போது 3 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் ஒன்று அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் ரூ.4,50,000/- மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றது.



2005 மார்ச் 4]

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலவாக்கம் பகுதியிலே இருக்கக்கூடிய அரிஜன நலத் துறைப் பள்ளிக்கு 2002 ஆம் ஆண்டிலேயே முதல்வர் ஆணையிட்டு நில ஆர்ஜிதம் செய்வதற்காக 2003-லேயே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டாரே, அந்த நில ஆர்ஜிதம் முடிந்துவிட்டதா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலவாக்கத்தில் அரசு புறம்போக்கு நிலம் எதுவும் இல்லாததால் தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலத்தை கையகம் செய்ய முடிவு செய்து, அதன்படி பாலவாக்கம் கிராமம் புல எண்கள் 53/1G, 53/1B, மற்றும் 52/1B ஆகியவற்றில் நஞ்சை என வகைப்பாடு செய்யப்பட்ட தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலத்தில் 75 சென்ட் பரப்பளவு நிலத்தை தனியார் பேச்சுவார்த்தைமூலம் கையகம் செய்ய காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணை பிறப்பித்தது.

இதன்படி, நில உரிமையாளர்களுடன் ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் ஒரு சென்ட் நிலம் ரூபாய் 77,100 என்ற விலைக்கு நிலத்தை வழங்க நில உரிமையாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இதன்படி 75 சென்ட் நிலத்திற்கு ரூபாய் 57,82,500 தொகையாகின்றது. இந்த அளவிலான தொகைக்குப் பேச்சுவார்த்தைமூலம் நிலம் கையகம் செய்யும் அதிகாரம், நில நிர்வாக ஆணையர் தலைமையிலான மாநில அளவிலான குழுவிற்கு மட்டுமே உள்ளதால், பேச்சுவார்த்தைமூலம் முடிவு ஏற்பட நிலத்திற்குண்டான மொத்தத் தொகை ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், எனவே, இத்தொகையை ஒதுக்கித் தருமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநரிடமிருந்து அரசுக்குக் கருத்துரு வரப்பெற்று, தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2002 ஆம் ஆண்டு ஆணையிட்டு, 2003 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது உடனடியாக இதைச் செய்து தருகிறேன், ஆணையிட்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். இப்போதுதான் இது அரசினுடைய

பரிசீலனைக்கு வந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற மாணவர்கள் இடவசதி இல்லாமல் ஒரு சமுதாயக் கூடத்திலே இருந்துகொண்டு மரத்தடியிலே படித்துக்கொண்டிருக்கிறார்கள். நேற்று போய் நான் அந்த இடத்தைப் பார்வையிட்டபோது நில உரிமையாளர் அதை மனைப் பிரிவுகளாக பிரித்து கல் நட்டு வைத்திருக்கிறார். அதையாவது இந்த அரசு தடுத்து நிறுத்திவிட்டு ஆர்ஜிதம் செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல சமுதாயக் கூடத்தில் இயங்கி வந்த பாலவாக்கம் ஆரம்பப் பள்ளிக்கு, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் மூன்று வகுப்பறைக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. விரைவில் கட்டடங்கள் கட்டுமானப் பணி முடியக்கூடிய தருவாயில் உள்ளது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பாலவாக்கம் மேல்நிலைப் பள்ளிக்கு புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தால் அப்போது அங்கிருந்த புறம்போக்கு நிலங்களில் எல்லாம், கடந்த ஆட்சிக் காலத்தில் நீங்களும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தீர்கள், அப்போதே ஏற்பாடு செய்திருந்தால் நீங்கள் முயற்சி செய்திருந்தால் கண்டிப்பாக அந்தப் புறம்போக்கு நிலத்தில் கட்டியிருக்கலாம். இடவசதி இல்லாததால், புறம்போக்கு நிலங்களை எல்லாம் ஆக்கிரமிப்பு செய்து தனியார்கள் வீடுகள் கட்டியுள்ளதால், அதற்காக இடம் இல்லாததால் தனியார் நில உரிமையாளர்களிடம் பேசி, ஒரு சென்ட் 77,100 ரூபாய் என்று பேசப்பட்டு, விரைவில் அதை முடித்து, விரைவில் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, செல்வி சி. கனகதாரா. (குறுக்கீடுகள்)

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு அமைச்சர் குற்றச்சாட்டு சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டு ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) செல்வி சி. கனகதாரா மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதில் ஒன்றுமில்லை. அப்போதே முடித்திருக்கலாம் என்று சொல்கிறார்.

வினா எண் 73, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**73—**

## நகரப் பேருந்து

***13622—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடியிலிருந்து சிந்தகாமெனிகுண்டா வழியாக நகரப் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி— சிந்தகாமெனிகுண்டா வழித்தடத்தின் பெரும்பகுதி பல வளைவுகளைக் கொண்ட குறுகிய மலைச் சாலையாகும். இச்சாலை பேருந்துகள் இயக்குவதற்குத் தகுதியற்றதாக உள்ளதால் வாணியம்பாடியிலிருந்து சிந்தகாமெனிகுண்டா வழியாக நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நினைத்ததை முடிக்கும் நெஞ்சுரம் கொண்டு, பொற்கால தமிழகத்தை உருவாக்க, பொழுதெல்லாம் பாடுபடும் எங்கள் அன்னையே, நீவிர் அமர்ந்திருக்கும் திசைநோக்கி வணங்கி, இந்தியாவிலே தமிழகத்தை முதன்மை மாநிலமாக, முன்னோடி மாநிலமாக மாற்றும் எங்கள் அன்னையின் இலட்சியத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியில் 31 கோடி மதிப்பீடு திட்டத்தில் மலட்டாற்றின் குறுக்கே பத்திரப்பள்ளி நீர்த்தேக்க அணையினை கட்டுவிக்க, நீண்டகாலமாக, நெடுங்காலமாக இருந்து வந்த கோரிக்கையினை ஏற்று, ஆணையிட்டு வழங்கிய தமிழக முதல்வர், தங்கத்

தாரகை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றியினை, நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியில் ஆலங்காயம் ஒன்றியம் சிந்தகாமெனிகுண்டாவில், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நான்கு, ஐந்து கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. மாதகடுப்பு, வெலதிகாமணிகுண்டா போன்ற பகுதிகள் மலையின மக்கள், பழங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதிகளாக இருந்து வருகின்றன. அதிக மக்கள் வாழ்வதால் பேருந்து வசதிகள் செய்யப்படவேண்டும். எனவே, அம்மா அவர்களுடைய ஆட்சியில் எல்லாப் பகுதிகளுக்கும் போதுமான போக்குவரத்து வசதி அளிக்கப்படவேண்டுமென்கிற நோக்கத்தில் வாணியம்பாடியில் இருந்து சிந்தகாமெனிகுண்டா வழியாக நகரப் பேருந்து ஒன்றை இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய நான் விரும்புகிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி, சிந்தகாமெனிகுண்டா வழித்தடத்தில் பெரும்பகுதி, மலைப் பகுதியைச் சேர்ந்தது ஆகும். அந்த மலைப் பகுதி பல வளைவுகளைக் கொண்ட சாலையாக இருப்பதாலும், குறுகிய சாலையாக இருப்பதாலும், பெரிய பேருந்துகளை இயக்குவதற்கு வாய்ப்பு இல்லை. எனவே அந்த வழித் தடங்களில் சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்த வழித் தடத்தில் 5 தனியார் சிற்றுந்துகள், தினசரி 60 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்தச் சிற்றுந்துகளின்மூலமாக அனைத்து நடைகளும் வெலதிகாமணிகுண்டாவிலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ள ஆந்திர எல்லைக்கும் மற்றும் அதைத் தாண்டியுள்ள 1.5 கி.மீ. தொலைவில் உள்ள ஆரியமணிகுண்டா வரைக்கும் இயக்கப்படுகின்றன. ஆகவே, சிந்தகாமெனிகுண்டாவிலிருந்து இன்னும் குறுக்கு வழியிலே நடந்து சென்றால், பக்கத்திலே 1/2 கி.மீ. தொலைவில்தான் வெலதிகாமணிகுண்டா இருக்கிறது, அந்த குறுகிய மலைப் பாதையில் குறுக்கே சென்றால் 1/2 கி.மீ. ஆனால், அதற்குப் பேருந்து வசதி கிடையாது. சுற்றிப் போனால், ஏறத்தாழ 1.5 கி.மீ. சுற்றிச் செல்லவேண்டும். அதற்கும் ஆந்திர எல்லைக்குள் சென்று, மீண்டும் தமிழக எல்லைக்குள் வர வேண்டிய பாதையாக இருப்பதால், அந்த ஆந்திரா





எல்லைக்குள் செல்வதற்கு, ஆந்திரா அரசும் தமிழ்நாடு அரசும் Inter State ஒப்பந்தம் — இரண்டு மாநிலங்களுக்கிடையிலே அந்த ஒப்பந்தத்தில் கட்டுப்பட்ட பகுதியாக இருந்தால்தான், அதிலே பேருந்து இயக்க முடியும். ஆனாலும்கூட ஆந்திர மாநில அரசு அந்தப் பகுதிக்கு போதுமான அளவிற்கு பேருந்து வசதி செய்து இருக்கிறது. ஆகவே நமது பகுதியிலே, தனியார் சிற்றுந்தின்மூலமாக 60 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே அந்தப் பகுதிக்குப் புதியதாக பேருந்து விடுவதற்கு ஏற்கெனவே போதிய வசதிகள் இருப்பதால் அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக புதிய பேருந்து வசதி செய்து கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.

**செல்வி சி. கனகதாரா**: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாய்ப்பு இல்லை என்று கூறியபோதிலும், வாணியம்பாடி சிந்தகாமெனிகுண்டா வழித்தடத்தில் பல்வேறு அபாயகரமான வளைவுகள் உள்ளதால், பலமான தடுப்புச் சுவர் கட்டப்பட வேண்டும். இதன்மூலம் விபத்துகளைத் தடுப்பதற்கும், வாகனங்களைப் பாதுகாப்பாக ஓட்டிச் செல்வதற்கும் முடியும் என்பதால் சிந்தகாமெனிகுண்டா வழியில் வளைவுகளைச் சீரமைத்து, தடுப்புச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகளை அகலப்படுத்துவதும் மற்றும் தடுபபுச் சுவர் கட்டுவதும், நமது நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த பணியாகும். எனவே, அதற்காகத் தனிக்கேள்வி போட்டு, அந்தத் துறையில் பதிலைப் பெற்றுக்கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாணியம்பாடியிலிருந்து இந்த வெலதிகாமணிகுண்டா, சிந்தகாமெனிகுண்டா போன்ற கிராமங்களுக்கு, மிக வளைவான பாதைகள் இருக்கிற காரணத்தினாலே, அரசுப் பேருந்துகளை இயக்குகின்ற வாய்ப்பு இல்லை என்று கூறினார்கள். 60 நடைகள் மினி பேருந்துகள் போவதாகச் சொன்னார்கள். அந்த மினி பேருந்துகளை அடிக்கடி அவர்கள் நிறுத்தி விடுகிறார்கள். சில நாட்களில் பஸ்ஸே இல்லாத ஒரு சூழ்நிலைகூட வந்துவிடுகிறது. ஆகவே, ஓர் உறுதி

ஏற்படுத்துகிற வரையில், அரசு ஒரு டவுன் பஸ்ஸை விடுமேயானால், அது மக்களுக்கு வசதி ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக இருக்கும். நாம் ஏற்கெனவே சில பேருந்துகளை வைத்துக்கொண்டு இருக்கிறோம். வேலூரிலேகூட சிறு பேருந்து பாலமதி என்கிற மலைச் சாலைக்கு சென்று வந்துகொண்டு இருக்கின்றது. அதேபோல செங்காநத்தம் என்ற மலைச் சாலைக்கு போய் வந்து கொண்டு இருக்கிறது. அதேபோல, அரசே ஒரு சிறு பேருந்தை, அரசு சார்பில் நகரப் பேருந்தாக நீங்கள் இந்த வெலதிகாமணிகுண்டாவிற்கும், சிந்தகாமெனிகுண்டா போன்ற கிராமங்களுக்கும்—இந்த மலைவாழ் மக்கள் மினி பேருந்தை நம்பி சில நேரங்களிலே மோசம் போகின்ற காரணத்தினாலே மக்கள் பெறும் அவதிக்குள்ளாகிற சூழ்நிலையை உணர்ந்து, அரசு டவுன் பஸ்ஸை விடுவதற்கு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வழித்தடத்தில், ஏற்கெனவே தனியார் துறை மூலமாக 5 சிற்றுந்துகள் இயக்கப்படுகின்றன. அவர்கள் சரிவர இயக்குவதில்லை என்று சொல்லி இருக்கிறார். அந்த வழித்தடங்களில் இயக்குவதற்கு உரிமம் பெற்ற அந்த சிற்றுந்து உரிமையாளர்களிடம் உரிமம் பெற்ற அந்த வழித்தடத்தில் சிற்றுந்துகளைச் சரியாக இயக்க வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுத்து, அவர்கள் உரிமம் பெற்றிருக்கின்ற அந்தப் பகுதியிலே தனியார் சிற்றுந்துகள் முறையாக இயக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போதிய பயணிகளுடைய அடர்வு அந்தப் பகுதியில் இருக்குமானால், அரசுப் போக்குவரத்துத் துறைமூலமாகக்கூட குறுகிய chassis bus, சிறிய பேருந்தை அந்தப் பகுதியில் விடுவது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஞ்சிய கேள்விகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.



## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல்கள் 8 மற்றும் 9@)

## எட்டாவது பட்டியல்

**1—**

### பட்டா வழங்குதல்

**வினா எண் 25055—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் மற்றும் இடங்கணசாலை பகுதியில் இலவச பட்டா கோரி 2001-2002 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மனுக்கள் எத்தனை?

(ஆ அதில் எவ்வளவு பேருக்கு பட்டா அரசு வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பட்டா வழங்கக் கோரி மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை. எனவே, வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை.

**2—**

### இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 47998—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, புத்தகரம் ஊராட்சி, முத்தாகவுண்டனூர் கிராமத்தில் வசித்து வரும் ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

---

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2005 மார்ச் 4

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதி, திருப்பத்தூர் வட்டம், புத்தகரம் ஊராட்சி, முத்தாகவுண்டனூர் கிராம ச.எண் 259/1, கன்னியார்குட்டை புறம்போக்கில் 12 நபர்கள் மற்றும் புல எண் 315/1 சுசம் குட்டை புறம்போக்கில் 16 நபர்கள் ஆக மொத்தம் 28 நபர்கள், கூரை வீடு மற்றும் மாடி வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். மேற்படி ஆக்கிரமணம் ஆட்சேபகாமானது என்பதாலும், மேற்படி கிராமத்தில் காலி கிராம நத்தம் ஏதுமில்லை என்பதாலும், நீர்நிலைப் புறம்போக்குகளில் பட்டா வழங்க அரசின் தடையாணை உள்ளதாலும் வீட்டுமனைப் பட்டா வழங்க சாத்தியமில்லை.*

3—

## புதிய சிறுசேமிப்பு முகவர் நியமனம்

**வினா எண் 52728—திரு. கா.தி. இளையகண்ணு:** *மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஏற்காடு தொகுதியில் புதிய சிறுசேமிப்பு முகவர் நியமனம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** *(அ) ஏற்காடு தொகுதியில் புதிய சிறுசேமிப்பு முகவர்கள் நியமனம் தற்பொழுது நடைமுறையில் உள்ளது.*

*(ஆ) சிறுசேமிப்பு முகவர்கள் நியமனத்திற்கு காலக்கெடு என்று ஏதுமில்லை. தகுதியானவர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளரிடம் விண்ணப்பித்து முகவர் நியமனம் பெறுகிறார்கள். முகவர் நியமனத்திற்கான விளம்பரங்கள் உள்ளூர் செய்தித்தாள்களில் கொடுக்கப்படுகின்றன.*



2005 மார்ச் 4]

4—

## கணிப்பொறி பயிற்சி மையம்

**வினா எண் 16528—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் கணிப்பொறி பயிற்சி மையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) N.I.I.T., C.S.C., போன்ற பெரிய நிறுவனங்கள், கணிப்பொறி பயிற்சி மையங்களை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பெருநகரங்கள் மற்றும் பேரூராட்சிகளிலும் நிறுவி உள்ளனர். மேலும், தனியார்களும் கணிப்பொறி பயிற்சி மையங்களை அமைத்து உள்ளனர். தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் 1,197 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு கணினிக் கல்வி அளிக்கும் பாடத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலான மாணவர்கள் கணினி பயிற்சி பெறுகிறார்கள். இப்பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள கணிப்பொறிகளை, பள்ளி வேலை நேரம் தவிர மற்ற நேரங்களில், சிறந்த முறையில் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் கட்டணத்துடன் கூடிய கணிப்பொறி பயிற்சி அளிக்க வசதிகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. எனவே, சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் கணிப்பொறி பயிற்சி மையம் தொடங்க அவசியம் இல்லை.*

5—

## குடும்ப நீதிமன்றம்

**வினா எண் 83683—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2005 மார்ச் 4

*(அ)* மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் குடும்ப நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் குடும்ப நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**6—**

## குடும்ப நீதிமன்றம்

**வினா எண் 63684—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் குடும்ப நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் குடும்ப நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**7—**

## அன்ன யோஜனா திட்டம்

**வினா எண் 33945—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 மார்ச் 4]

*(அ)* மைய அரசின் அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

*(ஆ)* அதற்கென வழங்கப்படும் உணவு தானியம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *(அ)* மைய அரசின் அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 11,18,500 ஆகும்.

*(ஆ)* அதற்கென வழங்கப்படும் உணவு தானியம் மாதம் ஒன்றுக்கு 39,148 மெட்ரிக் டன்கள் ஆகும்.

**8—**

## கிராமத்திற்கு புதிதாக அங்காடிக் கட்டடம்

**வினா எண் 35595—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், சங்கம் விடுதி ஊராட்சி, சொக்கம்பேட்டை கிராமத்திற்கு புதிதாக அங்காடிக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், சங்கம் விடுதி ஊராட்சி, சொக்கம்பேட்டை கிராம நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டுவதற்காக 2003-2004 ஆம் நிதியாண்டில் ரூ.1.59 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து கட்டடம் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.

9—

## அங்காடிக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 51961—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆணைக்காரன் சத்திரம் ஊராட்சி, மாங்கனாம்பட்டிலுள்ள அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆணைக்காரன் சத்திரம் ஊராட்சி, மாங்கனாம்பட்டிலுள்ள நியாயவிலைக் கடை மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் வாடகை கட்டடத்தில் செயல்படும் முழுநேரக் கடையாகும். இக்கடைக்கு கட்டடம் கட்டித்தரக் கோரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நாகப்பட்டினம் அவர்களுக்கு நாகப்பட்டினம் மண்டல இணைப் பதிவாளரினால் முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

10—

## தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம்

**வினா எண் 32218—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் ஊராட்சியிலுள்ள கடைக்காடு தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம், ஊராட்சியிலுள்ள கடைக்காடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூ.50,000 மதிப்பீட்டில் வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11—

## தொடக்கப் பள்ளிக்கு சத்துணவு மையம்

**வினா எண் 32220—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அள்ளிமேடு அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளி சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, அள்ளிமேடு அரசு ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளி சத்துணவு மையம் நடப்பு நிதி ஆண்டில் ரூ.50,000 மதிப்பீட்டில் வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

## சத்துணவு சமையல் கூடம்

**வினா எண் 32323—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மாதிரவேலூர் ஊராட்சியிலுள்ள கீழவாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி சத்துணவு சமையல் கூடம் ரூ.30,000 மதிப்பீட்டில் நடப்பு நிதி ஆண்டில் வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**13—**

## தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம்

**வினா எண் 32326—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சின்னவகுப்பு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசுக்கு திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், தண்டவன்குளம் ஊராட்சியிலுள்ள சின்னவகுப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சமையல் கூடம் ரூ.50,000 மதிப்பீட்டில் புதியதாக வறுமை ஒழிப்பு திட்டத்தின்கீழ் நடப்பு நிதி ஆண்டில் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14—**

## குழந்தைகள் நலக் காப்பகக் கட்டடம்

**வினா எண் 34956—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, அரசூர் ஊராட்சியிலுள்ள குழந்தைகள் நலக் காப்பகக் கட்டடம் மிகவும் சேதமடைந்துள்ளதை சீர் செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, அரசூர் ஊராட்சி குழந்தைகள் நலக் கட்டடம் நடப்பு நிதி ஆண்டில் ரூ.1,50,000 மதிப்பீட்டில் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**15—**

## உதவித் தொகை வழங்குதல்

**வினா எண் 47422—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் விதவைப் பெண்கள் அரசின் உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்து இன்னும் உதவித் தொகை கிடைக்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நல்த் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை வட்டத்தில் 13-9-2003 அன்று நடத்தப்பட்ட சிறப்பு முகாமில் முதியோர் உதவித்தொகை கோரி மொத்தம் 284 விண்ணப்பங்கள் வரப்பெற்றதில் 74 விண்ணப்பங்கள் விதவை உதவித் தொகை கோரி வரப்பெற்றது. அதில் 13 நபர்கள் மட்டுமே தகுதியுடையவர்கள் என கண்டறியப்பட்டு உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டது. மீதமுள்ள 61 நபர்களுக்கு வருமான ஆதாரம் உள்ளது என்பதால் அவர்களுக்கு உதவித் தொகை வழங்க இயலாத நிலையில் அவர்களது விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[2005 மார்ச் 4

16—

## சடலங்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 54507—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் உள்ள பிணவறைகளில் கேட்பாரற்று இருக்கும் சடலங்கள் எத்தனை நாட்களுக்கு பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன?

(ஆ) அதன் பின்னர் அவை எந்த வகையில் அடக்கம் செய்யப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) குளிர் வைப்பறை வசதியுள்ள பிணவறைகளில் 10 நாட்களுக்கும், அவ்வாறு வசதியில்லாத பிணவறைகளில் 3 நாட்களுக்கும் பாதுகாப்பாக சடலங்கள் வைக்கப்படுகின்றன.

(ஆ) அநாதையாக உள்ள சடலங்கள், சட்டம் சம்பந்தப்பட்டதாக இருந்தால், பிண ஆய்வுக்குப் பிறகு காவல் துறையின்மூலம் அடக்கம் செய்யப்படுகின்றன. உரிமை கொண்டாடாத சடலங்கள், பிண ஆய்வுக்குப்பின் ஊராட்சி / நகராட்சி / மாநகராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அடக்கம் செய்யப்படுகின்றன. ஆனால், 8.4.2004 ஆம் நாளுக்குப் பிறகு உரிமை கொண்டாடாத சடலங்கள் மருத்துவ மாணவர்களின் படிப்பிற்கு உதவும் வகையில் மருத்துவக் கல்லூரிக்கு ஒப்படைக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

17—

## உழவு மாடுகள் வழங்குதல்

**வினா எண் 33117—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 மார்ச் 4]

புதுக்கோட்டை மாவட்டத்தில் உழவு மாடுகள் வழங்கும் திட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** புதுக்கோட்டை மாவட்டத்தில் உழவு மாடுகள் வழங்கும் திட்டத்தில் 2001-2002 ஆம் நிதியாண்டில் 13 நபர்களும், 2002-2003 ஆம் நிதியாண்டில் 8 நபர்களும், 2003-2004 ஆம் நிதியாண்டில் 7 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

18—

## தாட்கோ மூலம் கடனுதவி

**வினா எண் 41417—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 1-வது தொகுதியில் தாட்கோமூலம் எவ்வளவு நபர்களுக்கு 2002-2003 ஆம் ஆண்டில் கடன் வழங்கப்பட்டது?

(ஆ) கடன் வழங்கிய தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** (அ) சேலம் 1-வது தொகுதியில் 2002-2003 ஆம் ஆண்டில் 50 நபர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டது.

(ஆ) தாட்கோமூலம் மானியமாக ரூ.7,48,807/-மும் வங்கிக் கடனாக ரூ.19,47,000/-மும் பயனாளியின் பங்குத் தொகையாக ரூ.1,41,883/-மும் ஆக மொத்தம் ரூ.28,37,690/- வழங்கப்பட்டது.

19—

## பேருந்து வசதி

**வினா எண் 43569—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 4

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவிலிலிருந்து செங்கானம், பேயாடிக்கோட்டை வழியாக பேருந்து வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து எண் டி.என். 55/என்.0061 வழித்தடம் அறந்தாங்கி-திருவாடானை செல்லும்பொழுது ஆவுடையார்கோவில், கரூர், செங்கானம், பேயாடிக்கோட்டை மூன்று நடைகளும், மற்றும் ஒரு பேருந்து எண் டி.என்.55/என்.0151 புதுக்கோட்டை, அரிமளம் வழியாக திருப்புனவாசல் சென்று திரும்பும்பொழுது பேயாடிக்கோட்டை, செங்கானம், கரூர், ஆவுடையார்கோவில் வழியாக வருகிறது. ஆக நாள் ஒன்றுக்கு மேற்படி வழித்தடத்தில் நான்கு நடைகள் தொடர்ந்து எவ்வித பயணத் தடையுமின்றி இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி நடைகளில் பயணிகள் பயன்பாடு குறைவாக இருந்தும் பயணிகளின் நலனை முன்னிட்டு தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கொண்டு அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவிலிலிருந்து செங்கானம், பேயாடிக்கோட்டை வழியாக பேருந்து வசதி செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**20—**

## பிரதான சாலையில் பேருந்து வசதி

**வினா எண் 51990—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேட்டில் பிரதான சாலையில் பேருந்து நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி-காரைக்கால் தடத்தில் செல்லும் அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணத்தைச் சார்ந்த பேருந்துகள் காரைமேட்டில் நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் சென்று வருகின்றன. மேலும், கழக போக்குவரத்து ஆய்வாளர்மூலம் மேற்படி பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகள் நின்று செல்கின்றனவா என்று தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.



**21—**

## இரவு நேரப் பேருந்து இயக்கம்

**வினா எண் 53279—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டிலிருந்து கல்பாக்கத்திற்கு இரவு நேரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு-கல்பாக்கம் தடத்தின் நீளம் 32.0 கிலோ மீட்டர் ஆகும். இத்தடத்தில் செங்கற்பட்டிலிருந்து கல்பாக்கத்திற்கு கடைசிப் பேருந்து இரவு 10.15 மணிக்கு இயக்கப்படுகிறது. கல்பாக்கம் ஒரு தொழில்கள் நிறைந்ததோ அல்லது வியாபாரம் மிகுந்த நகரமோ அல்ல. எனவே, புதியதாக வந்து செல்வோர் (Floating Population) இத்தடத்தில் குறைவு. ஆகவே, இரவு நேரங்களில் பேருந்துகளை இயக்கினால் கூட்ட நெரிசல் இருக்காது. எனவே, கோரிக்கை தடத்தில் இரவு நேரப் பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**22—**

## நகரப் பேருந்துகளை இயக்கும் திட்டம்

**வினா எண் 53356—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம், திருப்போரூர், மதுராந்தகம், உத்திரமேரூர் பகுதிகளுக்குச் செல்லும் நகரப் பேருந்துகளை பழைய பேருந்து நிலையத்தில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2005 மார்ச் 4

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** செங்கற்பட்டு பழைய பேருந்து நிலையம் மிகவும் சிறிய ஒன்றாகும். எனவே, பேருந்துகளை இயக்குவதில் சிரமம் ஏற்பட்டது. இதனை கருத்தில் கொண்டு செங்கற்பட்டு நகராட்சி, நகரின் மத்தியில் பேருந்து நிலையம் ஒன்றை புதியதாக நிர்மாணித்து பேருந்துகள் அங்கிருந்து எந்தவித தங்குதடையும் இன்றி இயங்கி வருகின்றன. புதிய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகளை இயக்கவில்லை என்றால் அதனை நிர்மாணித்த நோக்கம் நிறைவேறாமல் போகும். புதிய பேருந்து நிலையத்திற்கும், பழைய பேருந்து நிலையத்திற்கும் இடையில் உள்ள தூரம் 0.8 கிலோ மீட்டர் ஆகும். எனவே, பழைய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகளை இயக்க போதிய இடவசதி இல்லாததால் அங்கிருந்து திருக்கழுக்குன்றம், திருப்போரூர், மதுராந்தகம், உத்திரமேரூர் செல்லும் நகரப் பேருந்துகளை இயக்கும் திட்டம் இல்லை.

**23—**

## பேருந்துகளை அதிகப்படுத்துதல்

**வினா எண் 54123—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, மதுரை பெரியார் நிலையத்தில் இருந்து கருமாத்தூர் வழியாக சடச்சிப்பட்டிக்கு பேருந்து விடவும், உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து சடச்சிப்பட்டி வரை செல்லும் பேருந்துகளை அதிகப்படுத்தவும் அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மதுரையிலிருந்து கருமாத்தூர், வாலாந்தூர் வழியாக சடச்சிப்பட்டிக்கு தடத்தின் தூரம் 33.5 கிலோ மீட்டர் தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 1989 பிரிவு "3(e)"-இன்படி ஏற்கனவே பேருந்து வசதி பெற்ற கிராமங்களைக் கொண்ட தடத்தில் நகரப் பேருந்து இயக்க அதிகபட்ச வரையறை தூரம் 30 கிலோ மீட்டர் ஆகும். எனவே, மதுரை பெரியார் நிலையத்திலிருந்து கருமாத்தூர், வாலாந்தூர் வழியாக



2005 மார்ச் 4]

சடச்சிப்பட்டிக்கு நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும், சடச்சிப்பட்டி மக்கள் தற்போதுள்ள பேருந்துகள் மூலம் மதுரை-உசிலம்பட்டி தேசிய நெடுஞ்சாலையிலுள்ள வாலாந்தூருக்கு வந்தால் பெரியார் பேருந்து நிலையம் செல்ல அடிக்கடி பேருந்து வசதி உள்ளது. உசிலம்பட்டியிலிருந்து சடச்சிப்பட்டி வழியாக சி.நடுவபட்டி, பாப்பாபட்டி, சின்னக்குறவக்குடி கிராமங்களுக்கு 18 தனி நடைகள் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நடைகளில் பயணிகள் அடர்வு மிகவும் குறைவாக 40% மட்டுமே உள்ளது. எனவே, உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து சடச்சிப்பட்டி வரை செல்லும் பேருந்துகளை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் இல்லை.

**24—**

## பேருந்து வசதி

**வினா எண் 58277—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் ஒன்றியத்தில் மயிலாடுதுறை, மங்கநல்லூர் வழியாக நக்கம்பாடி வழித்தடத்தில் அரசு நகரப் பேருந்து இயக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மயிலாடுதுறை-நக்கம்பாடி (வழி) மங்கநல்லூர், கோமல், நச்சினார்குடி, ஸ்ரீகண்டபுரம் தடத்தின் நீளம் 2.2 கிலோ மீட்டர் ஆகும். கோரிக்கை தடத்தில் தனியார் நகரப் பேருந்து தடம் எண் 19 மூலம் தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. எனினும் மயிலாடுதுறை - மங்கநல்லூர், மங்கநல்லூர்-கோமல், கோமல்-நக்கம்பாடி என பகுதி பகுதியாக கழகப் பேருந்து வசதி உள்ளது. கோரிக்கை தடம் புதிய வழித்தடமாகும். எனவே, கோரிக்கை தடத்தில் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**25—**

## கூடுதல் பேருந்துகளை இயக்குதல்

**வினா எண் 61131—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 4

அறந்தாங்கியிலிருந்து புதுக்கோட்டை, அத்தாணி, சுப்பிரமணிபுரம், எட்டியத்தளி, அரசர்குளம் கிழக்கு, மங்களநாடு மேற்கு வழியாக அமரசிம்மேந்திரபுரம், நாகுடி, நற்பவளக்குடி செங்கமாரி, ஆவணத்தான் கோட்டை, பூவைமாநகர், ஆவுடையார்கோவில், குரும்பூர், எரிச்சி, ஒத்தக்கடை, ஆளப்பிறந்தான் கொடிவளல் ஆகிய இடங்களுக்கு பள்ளி நேரத்தில் மாணவ, மாணவிகள் பயன்பெற கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** அறந்தாங்கி, ஆவுடையார்கோவில் மற்றும் ஆலங்குடியை மையமாக வைத்து 24 நகரப் பேருந்துகள் இயங்கி வருகின்றன. அவை யாவும் பல்முறை திட்டத்தின்கீழ் பல வழித்தடங்களில் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்ட வழித்தடங்களில் இயங்கி வருகின்றன. கோரிக்கையின்படி பள்ளி நேரத்திற்கு மாணவ, மாணவிகள் பயன்பெறும்படியாக கால அட்டவணையை மாற்றி இயக்கினாலோ அல்லது கூடுதல் நடைகள் இயக்கினாலோ பொது மக்களுக்கு போக்குவரத்தில் சிரமம் ஏற்பட்டு சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எழ வாய்ப்புள்ளது. எனவே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஊர்களுக்கு பள்ளி நேரத்தில் மாணவ-மாணவிகள் பயன்பெறும் வகையில் கூடுதல் பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**26—**

## பேருந்து வசதி

**வினா எண் 61160—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கியிலிருந்து தேவக்கோட்டை, புதுக்கோட்டை, இராமேசுவரம் ஆகிய இடங்களுக்கு பேருந்து வசதி செய்து தரும் கருத்துரு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** பட்டுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கி, காரைக்குடி வழியாக இரண்டு பேருந்துகள் மூலமாக நேரிடையாக தேவக்கோட்டைக்கு



2005 மார்ச் 4]

10 நடைகள் இயங்கி வருகின்றன. மேலும் அறந்தாங்கியிலிருந்து காரைக்குடிக்கும் காரைக்குடியிலிருந்து தேவக்கோட்டைக்கும் 15 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயங்கி வருகிறது.

புதுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கிக்கு 240 நடைகளும் புதுக்கோட்டையிலிருந்து தேவக்கோட்டை வழியாக இராமேசுவரத்திற்கு 52 நடைகள் இயங்கி வருகின்றன. இதைத்தவிர அறந்தாங்கியிலிருந்து இராமேசுவரத்திற்கு இரண்டு பேருந்துகள் மூலம் நாள் ஒன்றுக்கு நான்கு நடைகள் இயங்கி வருகின்றன. அறந்தாங்கியிலிருந்து கட்டுமாவடி வரை அரைமணி நேரத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயங்கி வருகிறது. கட்டுமாவடியிலிருந்து இராமேசுவரம் செல்ல போதுமான அளவில் பேருந்துகள் இயங்கி வருகின்றன. வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஊர்களுக்கு ஏற்கெனவே மேற்கூறியவாறு போதுமான அளவு பேருந்து வசதி உள்ளதால் மேற்கொண்டு பேருந்து வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**27—**

## உப்பனாற்றை சுத்தப்படுத்தும் திட்டம்

**வினா எண் 29043—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், இராதாநல்லூர் எடமலை திருமுல்லைவாசல், திருநகர் பெரியமேடு ஆகிய ஊராட்சி பகுதிகளில் உப்பனாற்றில் கிளிஞ்சல் அள்ளி சுத்தப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** (அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்தில், உப்பனாற்றில் கிளிஞ்சல் அள்ளி சுத்தப்படுத்துவதற்கான திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) விடை எழாது.

[2005 மார்ச் 4

28—

### விசைத் தெளிப்பான்கள்

**வினா எண் 30612—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் விசைத் தெளிப்பான் வழங்கும் திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** புதுக்கோட்டை மாவட்டத்தில் 2002-2003 மற்றும் 2003-2004 ஆகிய ஆண்டுகளில் விசைத் தெளிப்பான்கள் ஏதும் வழங்கப்படவில்லை.

29—

### பயிர் பாதுகாப்புத் திட்டம்

**வினா எண் 58001—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி பகுதியில் பயிர் பாதுகாப்புத் திட்டத்தை விரிவுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** தமிழ்நாட்டில தேசிய வேளாண்மை பயிர் காப்புறுதித் திட்டம், கரீப் 2000 பருவம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயக் கடன் பெற்ற விவசாயிகள் இத்திட்டத்தில் கட்டாயம் சேர வேண்டும். விவசாயக் கடன் பெறாத விவசாயிகள் விருப்பத்தின் அடிப்படையில் சேரலாம். இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பயிர்கள் மற்றும் வட்டாரங்கள் ஒவ்வொரு பயிர் பருவத்திற்கும் மாநில அளவிலான பயிர் காப்பீட்டுக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு அறிவிக்கை செய்யப்படுகிறது.



2005 மார்ச் 4]

கோயம்புத்தூர் மாவட்ட வால்பாறை தொகுதிக்குட்பட்ட அங்கலக்குறிச்சி ஆனைமலை வட்டாரத்தைச் சேர்ந்ததாகும். நெல், கடலை, சோளம், பருத்தி (மானாவாரி) பயிர்களுக்கு ஆனைமலை வட்டாரத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்த அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. தற்போது கரீப் 2004 பருவத்திற்கும் இவ்வட்டாரம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், அங்கலக்குறிச்சி பகுதியில் உள்ள விவசாயிகள் யாரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

30—

### கால்நடைப் பண்ணை தொடங்குதல்

**வினா எண் 64741—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் மாவட்ட கால்நடைப் பண்ணை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தின் அருகில் தஞ்சை மாவட்டத்தில் ஈச்சங்கோட்டை மற்றும் ஒரத்தநாடு ஆகிய இடங்களிலும், திருவாரூர் மாவட்டத்தில் கொருக்கை என்னும் இடத்திலும் கால்நடைப் பண்ணைகள் உள்ளதால் தற்போது நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியில் மாவட்ட கால்நடைப் பண்ணை தொடங்கும் உத்தேசம் எதுவும் இல்லை.

31—

### தடிமரம் வளர்க்கும் திட்டம்

**வினா எண் 38673—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தடிமரம் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

[2005 மார்ச் 4

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** (அ) சேலம் மாவட்டத்தில் தடிமரம் வளர்க்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**32—**

## கல்லூரி வகுப்புகளை தொடங்கும் திட்டம்

**வினா எண் 58798—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் எம்பிஎம்., முதுகலை கணினி, எம்.எஸ்சி., (பயோகெமிஸ்டரி), எம்.எஸ்.(தகவல் தொழில்நுட்பவியல்), எம்.எஸ்சி., (மைக்ரோ பயாலஜி) மற்றும் எம்.பி.ஏ. வகுப்புகள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** எம்.பி.எம்., எம்.எஸ்சி., (பயோகெமிஸ்டரி), எம்.எஸ். (தகவல் தொழில்நுட்பவியல்), எம்.எஸ்சி., (மைக்ரோ பயாலஜி) மற்றும் எம்.பி.ஏ. பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கு பாரதிதாசன் பல்கலைக்கழக பதிவாளருக்கு புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரி கருத்துரு ஏதும் அனுப்பவில்லை. முதுகலை கணினி வகுப்பு மட்டும் 2003-2004 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டுள்ளது.

**33—**

## கூடுதலாக நூல்களை வழங்குதல்

**வினா எண் 62029—திரு. டி. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 மார்ச் 4]

மலையாள மொழி அறிந்தோர் உள்ள குமரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு நூலகங்களில் கூடுதல் மலையாள நூல்களும், குறிப்புதவி நூல்களும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** கன்னியாகுமரி மாவட்டத்தில், அம்மாவட்ட நூலக ஆணைக் குழுவின்கீழ் இயங்கும் 1. மாவட்ட மைய நூலகம், 2. கிளை நூலகம், இடைக்கோடு, 3. ஊர்ப்புற நூலகம், குலசேகரம், 4. ஊர்ப்புற நூலகம், அருமனை, 5. ஊர்ப்புற நூலகம், மாலைக்கோடு, 6. ஊர்ப்புற நூலகம், குழித்துறை, 7. ஊர்ப்புற நூலகம், விளாத்துறை, 8. ஊர்ப்புற நூலகம், பைங்குளம், 9. ஊர்ப்புற நூலகம், மாடச்சேரி, 10. ஊர்ப்புற நூலகம், பொன்மனை, 11. ஊர்ப்புற நூலகம், திருநந்திக்கரை, 12. ஊர்ப்புற நூலகம், பாகோடு, 13. ஊர்ப்புற நூலகம், பனவிளை, 14. ஊர்ப்புற நூலகம், கிறிஸ்டோபர்நகர், 15. ஊர்ப்புற நூலகம், மாதாபுரம் ஆகிய 15 நூலகங்களில் மலையாளம் மொழி அறிந்தோர் பயன்பாட்டிற்காக மலையாள மொழி நூல்கள் உள்ளன. இந்நூலகங்களுக்கு நடப்பு நிதியாண்டில் (2004-2005) குறைந்தபட்சம் 100 தலைப்புகளில் கூடுதலாக மலையாளம் நூல்கள் வாங்கி விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மேற்படி நூலகங்களுக்கு மலையாளம் நூல்கள் வாங்கும்போது குறிப்புதவி நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட மைய நூலகம் மற்றும் குளச்சல் கிளை நூலகத்தில் தலா 1500 குறிப்புதவி நூல்களும், அகஸ்தீஸ்வரம், மணவாளக்குறிச்சி, காரங்காடு ஆகிய 3 கிளை நூலகங்கள் மற்றும் குழித்துறை, சுசீந்திரம் ஆகிய 2 ஊர்ப்புற நூலகங்களில் தலா 537 குறிப்புதவி நூல்களும் இருப்பில் உள்ளன.

**34—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 1333—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி இ.மேட்டுக்காடு பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது அரசுக்குத் தெரியுமா?

[2005 மார்ச் 4

(ஆ) ஆம் எனில், குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சி, 62-வது வார்டு மேட்டுக்காடு பகுதியில் 60,000 லிட்டர் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு எடப்பாடி-இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தண்ணீர் பெறப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**35—**

## தேங்கியிருந்த கழிவுநீரை அகற்றுதல்

**வினா எண் 7981—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சி, குயவன்குட்டையில், கழிவுநீர் தேங்கி, பொதுமக்களுக்கு இடையூறாக இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் சரி செய்து கொடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பெருந்துறை பேரூராட்சி, ராஜ வீதியில் உள்ள குயவன்குட்டையில் மழைநீர் மற்றும் அப்பகுதி சாக்கடை தண்ணீரை வெளியேற்ற திட்டம் தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்டதில், மாவட்ட ஆட்சியர் அவர்களால் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தில் ரூ.7.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி சாக்கடை கட்டப்பட்டு 19.7.2002-ல் முடிக்கப்பட்டு குயவன்குட்டை கழிவுநீர் முழுவதும் வெளியேற்றப்படுகிறது. தற்சமயம் குயவன்குட்டையில் பிரச்சினைகள் ஏதும் இல்லை.



2005 மார்ச் 4]

**36—**

## குடிநீர் வசதி

**வினா எண் 12149—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, ஆலடிமணி நகருக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதிகளை ஸ்தல ஆய்வு செய்ததில் ஆலடிமணி நகர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதி என அறிய வருகிறது. மேற்படி பகுதியில் 15 குடியிருப்புகள் உள்ளன. பாதுகாக்கப்பட்ட குடிநீர்ப் பொது நல்லி ஒன்று நல்ல முறையில் இயங்கி வருகிறது. ஆழ்குழாய் அடிபம்பு ஒன்றும் உள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் தினசரி 3 மணி நேரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி பகுதியில் 400 மீட்டர் தூரத்தில் கன்னடியன் கால்வாய் உள்ளது. ஆகவே, போதுமான குடிநீர் வசதியுள்ளது.

**37—**

## தொடக்கப்பள்ளிக்கு கூடுதலாக பள்ளிக் கட்டடம்

**வினா எண் 15204—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதலாக பள்ளிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) இல்லை.

(ஆ) பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட மதிப்பீட்டுத் தொகையில் 40 சதவீதத்தை பொதுமக்கள் பங்குத் தொகையாக பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலமாக செலுத்தக் கோரப்பட்டது. பொதுமக்கள் மேற்படி பங்குத் தொகை செலுத்தாததால் பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட இயலாது.

**38—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 21602—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு எத்தனை லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது?

(ஆ) அதை அதிகப்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 29,593. இவர்களுக்கு தினசரி நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இருப்பாளி மற்றும் புளோரைடு திட்டத்தின்கீழ் 23 மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு பொதுமக்களுக்கு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் தற்பொழுது தனி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தற்பொழுது தனி நபருக்கு குடிநீர் வழங்குவது அதிகப்படுத்தப்பட்டுள்ளது.



**39—**

## சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 26573—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வெங்கோடு கிராமம் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, வெங்கோடு கிராமம் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணி மேற்கொள்ள எந்த திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

**40—**

## ஊராட்சி அலுவலகக் கட்டடம்

**வினா எண் 29654—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஊராட்சி அலுவலகக் கட்டடம் இல்லாத ஊராட்சிகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** தமிழகத்தில் 144 ஊராட்சிகளுக்குத் தனியான அலுவலகக் கட்டடங்கள் இல்லை.

**41—**

## பழுதடைந்த சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா எண் 33015—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடை காளியம்மன் கோயில் வீதி மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடை காளியம்மன் கோயில் வீதி சுமார் 3.00 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கப்பிச் சாலையாகும். இதனை தார்ச்சாலையாக மாற்றுவதற்கு உத்தேசமாக ரூ.16.00 இலட்சம் செலவாகும். இந்தச் சாலை பேருந்துகள் செல்லும் சாலையாக உள்ளது. மேற்படி ரூ.16.00 இலட்சம் செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**42—**

## ஊராட்சி மன்றக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 34941—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம் புனல்குளம் ஊராட்சிக்கு ஊராட்சி மன்றக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், புனல்குளம் ஊராட்சி மன்றக் கட்டடம் கட்டுவதற்கு 2003-2004 ஆம் ஆண்டு சம்பூர்ணா கிராமின் ரோஜ்கர் யோஜனா திட்டத்தில் 1.75 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து முடிக்கப்பட்டுள்ளது.



**43—**

## கழிவுநீர்க் கால்வாய் வசதி

**வினா எண் 37759—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், மாவுரெட்டி ஊர்ப் பொதுமக்களுக்கு கழிவுநீர்க் கால்வாய் வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், மாவுரெட்டி ஊர்ப் பொதுமக்களுக்கு கழிவுநீர்க் கால்வாய்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**44—**

## பழுதடைந்த பாதையைச் செப்பனிடுதல்

**வினா எண் 45946—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள கோட்டூர் பேரூராட்சியில் உள்ள ஆழியாறு நகர் மண்ணம் பகுதி பாதை மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள கோட்டூர் பேரூராட்சியில் உள்ள ஆழியாறு நகர் மண்ணம் பகுதி பாதை மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

45—

### சமுதாயக் கூடம் கட்டுதல்

**வினா எண் 46859—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சி, விளக்குமூக்கு தெருவிற்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சி, விளக்குமூக்கு தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5,00,000/- செலவில் சமுதாயக் கூடம் கட்டி முடிக்கப்பட்டு 30-6-2004 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் 7,500 பொதுமக்கள் பயன்பெற வாய்ப்புள்ளது.

46—

### பேருந்து நிலையம்

**வினா எண் 48023—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூரில் பேருந்து நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் ஏற்படுத்துவதற்கு கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

47—

### தெருவிளக்கு வசதி

**வினா எண் 48185—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, புதுக்காடு, ஷேக்கல்முடி, முருகானி எஸ்டேட் பகுதி, வலதுகரை, பள்ளிமேடு மற்றும் கல்லார் சோலையாறு பஜார் பகுதிகளுக்கு தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை, புதுக்காடு பகுதியில் 12 விளக்குகளும், உடுக்கல்முடி பகுதியில் 31-ம், ஷேக்கல்முடி முருகானி பகுதியில் 210-ம், சோலையாறு வலதுகரையில் 9-ம் பள்ளிமேடு பகுதியில் 41-ம் கல்லார் சாலையில் 20 எண்ணிக்கையும் தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதுவே போதுமானதாக உள்ளது.

48—

### தெருவிளக்கு வசதி

**வினா எண் 49724—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 4

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை 17-வது வார்டு லோயர் ஷேக்கல்முடி எஸ்டேட் என்.டி. டிவிஷனில் தெரு விளக்குகள் கூடுதலாக அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை பேரூராட்சி, 17-வது வார்டு லோயர் ஷேக்கல்முடி எஸ்டேட் என்.டி. டிவிஷனில் 44 தெரு விளக்குகளும், 3 சோடியம் ஆவி விளக்குகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டு போதுமானதாக உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**49—**

## பழுதடைந்த சாலையினை செப்பனிடுதல்

**வினா எண் 49728—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, பழனியூர் சாலை முதல் பூலாங்கிணறு சாலை வரை பழுதடைந்துள்ள சாலையை செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, பழனியூர் சாலை முதல் பூலாங்கிணறு வரை உள்ள சாலை, தற்போது ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்க்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.



2005 மார்ச் 4]

**50—**

## மயானங்களை விரிவுபடுத்த இடவசதி

**வினா எண் 50811—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி மற்றும் வேட்டைக்காரன்புதூர் மயானங்களை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி மற்றும் வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிகளிலுள்ள மயானங்களை விரிவுபடுத்த இடவசதி இல்லாததாலும் இப்பேரூராட்சிகளில் போதுமான நிதி வசதி இல்லாததாலும் இப்பணியினை மேற்கொள்ள இயலாதுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

[2005 மார்ச் 4

## ஒன்பதாவது பட்டியல்

**1—**

### வங்கிகள் மூலம் கடனுதவி

**வினா எண் 33844—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2002 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய கரும்புள்ளி கிராமங்களைச் சேர்ந்த கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டு கைவிடப்பட்ட நபர்களுக்கு வங்கிகள்மூலம் அரசு கடனுதவி செய்துள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** கடந்த 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை, தேனி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மறுவாழ்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேனி மாவட்டத்திலுள்ள பாலார்பட்டி மற்றும் கொண்டாங்கிப்பட்டி கிராமங்களில் திருந்தி வாழும் 7 நபர்களுக்கு ரூ.1,48,000/- மதிப்புள்ள ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாவட்டம், செய்யார் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட செண்பகவுண்டன்பாளையத்திலுள்ள 46 திருந்தி வாழும் நபர்களுக்கு JGSMSE என்ற நிறுவனத்தின்மூலம் ரூ.7,36,000/- மதிப்புள்ள பசு மாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில் காளப்பன்பட்டி, கம்மாலப்பட்டி கிராமங்களிலுள்ள திருந்தி வாழும் 46 நபர்களுக்கு அரசு சாரா ஓல்டு விஷன் இந்தியா என்ற நிறுவனத்தின்மூலம் ரூ.4,60,000/- மதிப்புள்ள 46 பசு மாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், திருந்தி வாழும் 17 நபர்களுக்கு ஓட்டுநர் உரிமமும், 10 நபர்களுக்கு கணினி பயிற்சியும், 70 நபர்களுக்கு ஆடு வளர்ப்பும் மற்றும் பெட்டி கடைகள் ஆரம்பிக்க ரூ.2,10,000/-மும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு வங்கிகள்மூலமாகவும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலமாகவும் மறுவாழ்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2005 மார்ச் 4]

**2—**

### போலி மதுபானங்களின் மதிப்பு

**வினா எண் 36400—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழ்நாட்டில் 2002-2003 வரை காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட போலி மதுபானங்களின் மதிப்பு எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** கடந்த 2002 ஆம் ஆண்டு மொத்தம் 1,59,083 போலி மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றில் 1,202 ஒரு லிட்டர் பாட்டில்களும், 52,772 முழு பாட்டில்களும் (750 மி.லி.), 7,114 அரை பாட்டில்களும் (375 மி.லி.), 79,315 கால் பங்கு பாட்டில்களும் (180 மி.லி.) மற்றும் 18,680 (100 மி.லி.) பாட்டில்களும் அடங்கும். இவற்றின் மொத்த மதிப்பு ரூ.1,66,42,734/- ஆகும்.

கடந்த 2003 ஆம் ஆண்டு மொத்தம் 1,47,141 போலி மது பாட்டில்களும் கைப்பற்றப்பட்டன. இவற்றில் 379 ஒரு லிட்டர் பாட்டில்களும், 54,093 முழு பாட்டில்களும் (750 மி.லி.), 12,341 அரை பாட்டில்களும் (375 மி.லி.) 76,972 கால் பங்கு பாட்டில்களும் (180 மி.லி.) மற்றும் 3,356 (100 மி.லி.) பாட்டில்களும் அடங்கும். இவற்றின் மொத்த மதிப்பு ரூ.1,66,91,898/- ஆகும்.

**3—**

### நெல் சேமிப்புக் கிடங்கு

**வினா எண் 63802—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மயிலாடுதுறை மற்றும் அரசூரில் நவீன அரிசி ஆலையில் நெல் சேமிப்புக் கிடங்கு கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2005 மார்ச் 4

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான உணவு தானியங்களை சேமித்து வைப்பதற்கு கீழ்க்கண்டவாறு தேவையான அளவு கிடங்குகள் தற்போது உள்ளன.

| வ. எண் | கிட்டங்கி பெயர் | கொள்ளளவு மெட்ரிக் டன் |
|---|---|---|
| 1 | வேதாரண்யம் | 1500.00 |
| 2 | எம்.ஆர்.எம். சித்தர்காடு | 7035.00 |
| 3 | சீர்காழி | 2850.00 |
| 4 | வாய்மேடு | 146.00 |
| 5 | எம்.ஆர்.எம். ஆக்கூர் | 910.00 |
| 6 | எம்.ஆர்.எம். எருக்கூர் | 12400.00 |
| 7 | திருக்குவளை | 375.00 |
| 8 | மயிலாடுதுறை | 2000.00 |
| 9 | ஆக்கூர் (கிடங்கு) | 770.00 |
| | மொத்தம் | 27986.00 |

இவை தவிர நாகப்பட்டினம் மாவட்டத்தில் அறுவடை காலங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லை சேமித்து வைக்க திறந்த வெளி சேமிப்பு நிலையங்கள் போதுமான அளவு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு வளாகங்களில் உள்ளன. ஆகவே, நாகப்பட்டினம் மாவட்டத்தில் சொந்தமாக புதிய சேமிப்பு கிடங்கு கட்டடங்கள் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.



2005 மார்ச் 4]

**4—**

## இசைக் கலைஞர்கள் நியமனம்

**வினா எண் 10453—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளத்திலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்திற்கு நாதசுரம் மற்றும் தாள இசைக் கலைஞர்கள் ஆகியோரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) விளாத்திக்குளத்தில் உள்ள அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயிலில் தவில் கலைஞர் பணியாற்றி வருகிறார். நிதிவசதி இன்மையால் நாதசுரம் மற்றும் தாள இசைக் கலைஞர்கள் தற்போது நியமனம் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

**5—**

## கோயில்களில் ஓதுவார்களுக்கு ஊதிய உயர்வு

**வினா எண் 47843—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு கோயில்களில் தமிழில் ஓதுவார்களுக்கு ஊதியத்தை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு திருக்கோயில்களில் முதுநிலை திருக்கோயிலின் ஓதுவார்களுக்கு ரூ.3200-85-4900 என்ற ஊதிய விகிதமும், முதுநிலை அல்லாத மற்றும் துணைக் கோயிலில் பணிபுரியும்

[2005 மார்ச் 4

ஓதுவார்களுக்கு ரூ.2000-60-2300-75-3200 ஊதிய விகிதமும் கடந்த 21.5.2004-ல் மாற்றி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**6—**

### மூன்று சக்கர வண்டி வழங்குதல்

**வினா எண் 10204—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள உடல் ஊனமுற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு நடப்பு கல்வியாண்டில் மூன்று சக்கர வண்டி வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) புவனகிரி தொகுதியிலுள்ள உடல் ஊனமுற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளில் 2001-2002, 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 24 நபர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் 11 நபர்களுக்கும், 2002-2003 ஆம் ஆண்டில் 8 நபர்களுக்கும், 2003-2004 ஆம் ஆண்டில் 5 நபர்களுக்கும் மூன்று சக்கர சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது.

**7—**

### மறுவாழ்வு மையம்

**வினா எண் 55741—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊனமுற்றவர்களின் பயிற்சிக்காக மாவட்ட மறுவாழ்வு மையங்களில் பயன்படுத்தப்படும் பயிற்சிக் கருவிகள் யாவை?



2005 மார்ச் 4]

(ஆ) அதை மேலை நாடுகளில் உள்ளது போல நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) ஊனமுற்றவர்களின் பயிற்சிக்காக ஊன முற்றோருக்கான மாநில ஆணையரகம் மூலம் பிசியோதெரபி முடநீக்கு பயிற்சிகள் இலவசமாக நடத்தப்படுகிறது. செயற்கை அவயவங்கள் தயாரிப்பு, காது அச்சு தயாரிப்பு, பாத காலணிகள் தயாரிப்பு செய்து ஊனமுற்றவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

(ஆ) இதுபற்றிய கருத்துரு தக்க தருணத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**8—**

### பேருந்தை இயக்கும் திட்டம்

**வினா எண் 21028—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி முதல் சாமிசெட்டிப்பட்டி, பங்குநத்தம் கொட்டாய் வழியாக அரக்காசன அள்ளி வரையில் இயங்கும் நகரப் பேருந்து எண் 5-சி வழித்தடத்தை கூடுதலாக இரண்டு நடைகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மண்டலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (சேலம்) லிமிடெட் நகர் பேருந்து தடம் எண். டி.5 சி-யின் மூலம் நாளொன்றுக்கு 12 நடைகள் தருமபுரி-அரக்காசன அள்ளி தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றது. இதில் பயணிகளின் அடர்வு 54 விழுக்காடுகளேயாகும். எனவே, இத்தடத்தில் தற்சமயம் இயக்கப்படும் நடைகளே போதுமானதாகும். மேலும், 5-சி நகர் பேருந்து நாளொன்றுக்கு 402 கி.மீ. தூரம் இயக்கப்பட்டு வருகின்றது. காலை 5.00 மணிக்கு புறப்பட்டு இரவு 23.45 மணிக்கு முடிவடைகிறது. இதற்கு மேல் இந்தப் பேருந்தின்

[2005 மார்ச் 4

மூலம் தருமபுரி முதல் சாமிசெட்டிப்பட்டி, பங்குநத்தம் கொட்டாய் வழியாக அரக்காசன அள்ளி வரைக்கும் கூடுதல் நடைகள் இயக்க இயலாது என்பதால், இப்பேருந்தை இயக்கிடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**9—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 23028—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஆனைமலை வழி கோட்டூர் வழியாக உடுமலை சென்று பழநி சென்றடையும் பேருந்து பெத்தநாயக்கனூர், சோமந்துறை, சித்தூர் வழியாக செல்ல ஏற்பாடு செய்ய பொதுமக்கள் கோருவது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* ஆனைமலை வழி கோட்டூர் வழியாக உடுமலை சென்று பழநி சென்றடையும் பேருந்தை பெத்தநாயக்கனூர், சோமந்துறை, சித்தூர் வழியாக இயக்கக் கோரி பொதுமக்களிடமிருந்து கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு கோரிக்கைகள் ஏதும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. எனினும், அப்பகுதிவாழ் பொதுமக்கள் நலன் கருதி தினசரி ஒரு நடை பெத்தநாயக்கனூர் மற்றும் சோமந்துறை, சித்தூர் வழியாக பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**10—**

## பேருந்து நிறுத்தம்

**வினா எண் 30125—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 மார்ச் 4]

*(அ)* வால்பாறை தொகுதி, ஆழியாறு செக போஸ்ட்டில் மகளிர் கழிப்பிட வசதி செய்துள்ள இடத்தில் பேருந்துகள் சில நிமிடங்கள் நின்று செல்லுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** *(அ)* வால்பாறை தொகுதி, வனத் துறை சோதனைச் சாவடி அமைந்துள்ள பகுதியில் பேருந்துகள் நிற்பதால் வன விலங்குகளுக்கு ஆபத்து ஏற்படுகின்றது என்று இந்திரா காந்தி வன விலங்கு சரணாலய அதிகாரிகளும், பேருந்துகள் நின்று செல்வதால் மனிதக் கழிவுகள் ஆழியாறு அணை நீரில் கலந்து குடிநீர் மாசுபடுவதாகவும் சுகாதார அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, வால்பாறை தொகுதி, ஆழியாறு வனத் துறை சோதனைச் சாவடியில் மகளிர் கழிப்பிட வசதி செய்துள்ள இடத்தில் பேருந்துகள் நின்று செல்ல வாய்ப்புகள் இல்லை.

*(ஆ)* இக்கேள்வி எழாது.

**11—**

## கூடுதல் பேருந்துகள் இயக்கம்

**வினா எண் 53119—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மோகனூர்-நாமக்கல் இடையே கல்லூரிகளின் நேரத்திற்குத் தகுந்தவாறு கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** *(அ)* மோகனூர்-நாமக்கல் (18 கி.மீ.) இடையே கல்லூரிகளின் நேரத்திற்குத் தகுந்தவாறு தற்போது இயக்கப்பட்டு வரும் பேருந்துகளின் விவரம் பின்வருமாறு:

[2005 மார்ச் 4

தடம் (மோகனூர்-நாமக்கல்) மற்றும் நேரம்:

காலை 08.00-10.00 மணி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் - 7 புறப்பாடுகள்.

மாலை 15.00-17.00 மணி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் - 7 புறப்பாடுகள்.

தடம் (நாமக்கல்-மோகனூர்) மற்றும் நேரம்:

காலை 09.00-10.00 மணி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் - 7 புறப்பாடுகள்

மாலை 15.30-17.00 மணி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் - 4 புறப்பாடுகள்.

மேற்படி இயக்கப்படும் புறப்பாடுகள் கல்லூரி-பள்ளி நேரங்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளது. எனவே, கூடுதல் பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**12—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 57620—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் முதல் மண்ணச்சநல்லூர் அய்யம்பாளையம் வழியாக வலையூர் வரை இயங்கி வரும் நகரப் பேருந்து தடம் எண் 42-ஐ ஸ்ரீபெரும்புதூர் வரை நீட்டித்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) திருச்சி மண்டலம் நகரப் பேருந்து ஒன்றின்மூலம் சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து சமயபுரம் வழியாக ஸ்ரீபெரும்புதூருக்கு 6 நடைகளும்,



2005 மார்ச் 4]

மற்றொரு நகரப் பேருந்து மூலம் சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து மண்ணச்சநல்லூர் வழியாக ஸ்ரீபெரும்புதூருக்கு 4 நடைகளும் ஆக மொத்தம் 10 நடைகள் நாள்தோறும் இயக்கப்பட்டு வருகின்றன. நகரப் பேருந்து தடம் எண் 42 பல்வழித்தட திட்டத்தின்கீழ் சமயபுரம், மருதூர், மூவானூர் மற்றும் வலையூர் என இயங்கி வருவதால் தடம் எண் 42-ஐ தடநீட்டிப்பு செய்து ஸ்ரீபெரும்புதூர் வரை இயக்க வழிவகை இல்லை.

**13—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 58202—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லிலிருந்து பாச்சல் கிராமத்திற்கு பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** (அ) நாமக்கல்லில் இருந்து தற்போது (1) புதன்சந்தை, புதுச்சத்திரம், பாச்சல் பிரிவு வழியாக இராசிபுரம் வரை, மற்றும் (2) இராசிபுரத்தில் இருந்து பாச்சல் பிரிவு, புதுச்சத்திரம், புதன்சந்தை வழியாக நாமக்கல் வரை கீழ்க்கண்ட புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள் இயங்கி வருகின்றன:

| | | | |
|---|---|---|---|
| (1) | அரசுப் பேருந்துகள் | = | 111 புறப்பாடுகள் |
| | தனியார் பேருந்துகள் | = | 33 புறப்பாடுகள் |
| | மொத்தம் | = | 144 புறப்பாடுகள் |
| (2) | அரசுப் பேருந்துகள் | = | 88 புறப்பாடுகள் |
| | தனியார் பேருந்துகள் | = | 72 புறப்பாடுகள் |
| | மொத்தம் | = | 160 புறப்பாடுகள் |

[2005 மார்ச் 4

நாமக்கல்-இராசிபுரம் வழித்தடத்தில், பாச்சல் பிரிவு ரோடில் இருந்து 1.00 கி.மீ. தூரத்தில் பாச்சல் கிராமம் அமைந்துள்ளது. அரசு வழிகாட்டுதலின்படி போக்குவரத்து வசதி பெற்ற இடத்திலிருந்து 1 கிலோ மீட்டருக்குள் உள்ள பகுதிகள் பேருந்து வசதி பெற்றதாகக் கருதப்படுவதால் பாச்சல் கிராமமும் பேருந்து வசதி பெற்றதாகவே கருதப்படுவதால் நாமக்கல்-பாச்சல் என தனியாக பேருந்து இயக்கத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

(ஆ) இக்கேள்வி எழாது.

14—

## கூடுதல் பேருந்து இயக்கம்

**வினா எண் 58284—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூரிலிருந்து பரமத்தி வேலூருக்கு காலை நேரத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** (அ) மோகனூரிலிருந்து பரமத்தி வேலூருக்கு காலை 4.30 மணி முதல் 10.00 மணி வரை கழக நகரப் பேருந்துகள் மூலம் 9 நடைகளும், தனியார் பேருந்துகள் மூலம் 14 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு இயக்கப்படும் இந்நடைகளே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்து வருவதால் கூடுதல் பேருந்துகள் இயக்க தேவை எழவில்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.



2005 மார்ச் 4]

15—

## பேருந்து இயக்கம்

**வினா எண் 58287—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லிலிருந்து மோகனூருக்கு இரவு 11 மணிக்கு பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் நகரப் பேருந்து தடம் எண் 16-சி, இரவு 22.30 மணிக்கு நாமக்கல்லிலிருந்து புறப்பட்டு மோகனூர் சர்க்கரை ஆலையை 23.10 மணிக்குச் சென்றடைந்து இரவு தங்கல் செய்யப்படுகின்றது. இந்நடையில் பயணிகள் அடர்வு 46% மட்டுமே உள்ளதால் இரவு 23.00 மணிக்கு நாமக்கல்லிலிருந்து மோகனூருக்கு பேருந்து இயக்க தேவை எழவில்லை.

16—

## வேலிக்கருவேல் செடியை அகற்றுதல்

**வினா எண் 62915—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நிலத்தடி நீரை முழுமையாக உறிஞ்சக்கூடிய வேலிக்கருவேல் செடியை முழுமையாக அகற்ற ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** (அ) பொதுவாக வனத் துறை மூலம் வேலிக்கருவேல் செடிகள் நட்டு வளர்க்கப்படுவதில்லை. இருந்தபோதிலும் தமிழ்நாட்டில்

[2005 மார்ச் 4

குளங்கள் மற்றும் கண்மாய்களில் எழுப்பப்பட்டுள்ள சமூகக்காடுகள் தோட்டங்களுக்கு இடையே சிறு சிறு பகுதிகளில் வேலிக்கருவேல் செடிகள் வளர்ந்து காணப்படுகின்றன. ஆனால், வனத் துறையின் ஒதுக்குக் காடுகளில் (Reserved Forests) வேலிக்கருவேல் வளர்ச்சி ஏதுமில்லை. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் உள்ள தரிசு நிலங்கள் மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களில் வேலிக்கருவேல் செடிகளின் வளர்ச்சி அபரிமிதமாகக் காணப்படுகிறது. இவை அனைத்தும் வனத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத நிலங்கள் என்பதால் வேலிக்கருவேல் செடியை முழுமையாக அகற்ற ஒருங்கிணைந்த திட்டம் ஏதும் வனத் துறையிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**17—**

## கிராமத்தில் நூலக வசதி

**வினா எண் 36688—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கோட்டேரி கிராமத்தில் நூலக வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கோட்டேரி கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறக்க கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏதும் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதால் நூலகம் இன்னும் திறக்கப்படவில்லை:

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலி மனை நூலக ஆணைக் குழு பெயருக்கு இலவசமாக பத்திரப் பதிவு செய்து அளிக்கப்பட வேண்டும்.



2005 மார்ச் 4]

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாட சாமான்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

5. ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**18—**

## பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 39180—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, பிள்ளையார்நத்தம் அரசு உயர்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள பணியிடங்களில் இரண்டு பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி தொகுதி, பிள்ளையார்நத்தம் பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளி ஏதும் செயல்படவில்லை.

**19—**

## புதிதாக ஊர்ப்புற நூலகம்

**வினா எண் 41384—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, வேப்பம்பட்டி உயர்நிலைப் பள்ளி வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் அக்கட்டடத்தைச் சீர் செய்து நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 4

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ)* தருமபுரி மாவட்டம், கரூர் தொகுதி, வேப்பம்பட்டி உயர்நிலைப் பள்ளி மிகவும் பழுதடைந்துள்ளதால் பள்ளி நிர்வாகத்தால் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு, அக்கட்டடம், தற்பொழுது எந்த அலுவலகமும் இயங்காமல் காலியாக உள்ளது. அக்கட்டடத்தை வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து நூலகத் துறைக்கு பெற்றாலும் அக்கட்டடத்தின் மிக அருகிலேயே பொதுக் கழிப்பிடம் உள்ளதால் வாசகர்கள் நூலகத்திற்கு வந்து படிக்கும் அளவுக்கு சுகாதாரமான சூழ்நிலை இல்லை. மேலும் அக்கட்டடத்தின் சுற்றுப்புறம் முழுவதும் முட்செடிகளால் சூழப்பட்டுள்ளது. எனவே, அரூர் தொகுதி வேப்பம்பட்டி உயர்நிலைப் பள்ளி கட்டடத்தை சீர் செய்து நூலகம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. மேலும் அரசாணை நிலை எண் 50, பள்ளி கல்வித் துறை, நாள் 11.1.2003-ன்படி புதிதாக ஊர்ப்புற நூலகம் அமைக்கும் பொருட்டு வேப்பம்பட்டி ஊராட்சி தலைவரிடமும், அவ்வூர் மக்களிடமும் நூலகத் துறை அணுகியபோது அவர்களிடமிருந்து போதுமான ஒத்துழைப்பு கிடைக்காமையால் அவ்வூரில் நூலகம் திறக்கப்படவில்லை.

**20—**

## புதியதாக கிளை நூலகம்

**வினா எண் 42294—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செங்கற்பட்டு தொகுதியில் புதியதாக கிளை நூலகங்கள் அமைக்க அரசு இசைவு தர உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எந்தெந்த ஊரில் என அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ)* செங்கற்பட்டு தொகுதியிலுள்ள அம்மணப்பாக்கம், குண்ணவாக்கம் ஆகிய கிராமங்களில் நூலகம் திறக்க விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவ்விடங்களில் 28.11.2003 அன்று ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. புதிய கிளை நூலகம்



2005 மார்ச் 4]

திறக்க புதிதாக மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். எனவே, செங்கற்பட்டு தொகுதியில் உள்ள பிற கிராமங்களில் கிளை நூலகம் அமைக்க தற்போது சாத்தியக்கூறு இல்லை.

**21—**

## நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 43190—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, புலியூர் காட்டுச்சாலையில் தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ)* புலியூர் கிளை நூலகத்திற்கு ஏற்கெனவே பெறப்பட்ட காலி மனையில் கட்டடம் கட்ட 1995-1996-ல் ரூ.1,10,000/- தஞ்சாவூர் தொழில்நுட்பக் கல்விக் கோட்டம் செயற் பொறியாளருக்கு செலுத்தப்பட்டு கட்டடம் கூரை அளவு (Roof level) சுவர் எழுப்பப்பட்டது. இந்நிலையில் அக்காலி மனை வழங்கியவர்களுக்கும், மற்றொருவருக்கும் நிலத் தகராறு ஏற்பட்டு, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. கட்டடம் முடிவுறாத நிலையில் உள்ளதால் அவ்விடத்தில் நூலகம் இயங்கவில்லை. மேலும், அந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேறு இடத்தில் காலி மனை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**22—**

## கிளை நூலகம் அமைத்தல்

**வினா எண் 43192—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 4

(அ) பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு கிராமத்தில் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ): கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு கிராமத்தில் நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும், நூலகம் திறப்பதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் நூலகம் திறக்க இயலும்:

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலி மனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

5. தலா ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**23—**

## புதிதாக நூலகம் அமைத்தல்

**வினா எண் 44723—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு தொகுதி, கீரைத்துறை பகுதியில் புதிதாக நூலகம் அமைக்க அரசு முன்வருமா?



2005 மார்ச் 4]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ): மதுரை மாவட்டம், மதுரை கிழக்குத் தொகுதி, கீரைத்துறையில் நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும் இதுவரை நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்ட கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏதும் பூர்த்தி செய்யப்படாததால் அவ்விடத்தில் நூலகம் திறக்க இயலவில்லை:

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலி மனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

5. தலா ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**24—**

## பொது நூலகம்

**வினா எண் 48477—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், குன்னிப்பாளையத்தில் பொது நூலகம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை— [2005 மார்ச் 4

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ): நாமக்கல் மாவட்டம், கபிலர்மலைத் தொகுதி, மோகனூர் ஒன்றியம், குன்னிப்பாளையம் கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறக்க இதுவரை கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏதும் பூர்த்தி செய்யப்படாததால் நூலகம் திறக்கப்படவில்லை.

1. பகுதி நேர நூலகம் செயல்பட வாடகை இல்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

2. 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான காலி மனை நூலக ஆணைக் குழுவின் பெயருக்கு பத்திரப் பதிவு செய்துதர வேண்டும்.

3. 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.2,000/- மதிப்பில் தளவாடங்கள் நன்கொடையாக அளிக்க வேண்டும்.

**25—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 49066—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, கோடிமங்கலம் ஊராட்சியில் நூலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கோடிமங்கலம் ஊராட்சியில் நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும், நூலகம் திறப்பதற்கான கீழ்க்கண்ட நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் பூர்த்தி செய்தால் அவ்வூரில் நூலகம் திறக்க இயலும்:



2005 மார்ச் 4]

1. நூலகம் செயல்பட வாடகையற்ற இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான காலி மனை நூலக ஆணைக் குழுவின் பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தர வேண்டும்.

3. ரூ.2,000/- மதிப்பில் தளவாடங்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

4. 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**26—**

## கிராமங்களில் நூலகம் திறத்தல்

**வினா எண் 49428—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் மற்றும் திருஞானசம்பந்தர் கிராமங்களுக்கு நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ): சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எருக்கூர் மற்றும் திருஞானசம்பந்தர் கிராமங்களில் நூலகம் திறக்கக் கோரி இதுவரை விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படாததாலும், ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் பூர்த்தி செய்யாததாலும் அவ்விடங்களில் நூலகம் அமைக்க இயலவில்லை:

1. வாடகையற்ற இலவசக் கட்டடம்.

2. 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான காலி மனை நூலக ஆணைக் குழுவின் பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தர வேண்டும்.

3. ரூ.2,000/- மதிப்பில் தளவாடங்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

4. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**27—**

## கிளை நூலகம் அமைத்தல்

**வினா எண் 49429—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பெரம்பூரில் கிளை நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ): சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பெரம்பூரில் கிளை நூலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை. கிளை நூலகம் திறக்க புதிதாக ஒரு மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். தற்போதுள்ள நிதி நெருக்கடியில் காலியாக உள்ள பணியிடங்களையே நிரப்புவது சிரமமாக உள்ளது. எனினும், அக்கிராமத்தில் நூலகம் அமைக்க பொதுமக்கள் ஒத்துழைப்புடன் உரிய கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றித் தரும் பட்சத்தில் ஒரு பகுதி நேர நூலகம் அமைக்க இயலும்:

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. வருங்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தமாக 5 செண்ட் முதல் 10 செண்ட் வரையிலான இலவச காலி மனை மாவட்ட நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தர வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் நன்கொடையாக அளிக்க வேண்டும்.

5. ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.



**28—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 58177—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள முத்துமுடியில் நூலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு பொது நூலக விதிகளின்படி 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் பகுதி நேர நூலகம் திறக்கலாம். கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள முத்துமுடி என்பது பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் என்ற தனியார் நிறுவனப் பணியாளர்கள் மட்டுமே வசிக்கும் பகுதியாகும். வால்பாறைக்குட்பட்ட முத்துமுடி எஸ்டேட்டில் மக்கள் தொகை 450. அதில் ஆண்கள் 270 மற்றும் பெண்கள் 180 ஆகும். எனவே, இவ்விடம் தனியார் எஸ்டேட் பகுதியானதாலும், பணியாளர்கள் மட்டுமே வசிப்பதாலும் மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட பகுதியாகவுள்ளதாலும், நிர்ணயிக்கப்பட்ட கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏதும் நிறைவு செய்யப்படாததாலும் நூலகம் திறக்க வழிவகையில்லை:

1. நூலகம் செயல்பட வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 செண்ட் முதல் 10 செண்ட் வரை காலி மனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

5. தலா ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

[2005 மார்ச் 4

**29—**

## கிளை நூலகம்

**வினா எண் 62418—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள கருமலை பஜார் மற்றும் வாட்டர் ஃபால்ஸ் எஸ்டேட் பகுதிகளில் கிளை நூலகங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு பொது நூலக விதிகளின்படி 5,000 மக்கள் தொகைக்கு மேலுள்ள ஊர்களில் கிளை நூலகம் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள கருமலை பஜார் மற்றும் வாட்டர் ஃபால்ஸ் எஸ்டேட் ஆகிய பகுதிகளின் மக்கள் தொகை முறையே 3,021 (ஆண்கள் 1,620, பெண்கள் 1,401) மற்றும் 3,612 (ஆண்கள் 1,401, பெண்கள் 1,905) ஆகும். மேலும், ஒரு கிளை நூலகம் திறக்க ஒரு மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் புதிதாகத் தோற்றுவிக்கப்பட வேண்டும். புதிதாகப் பணியிடங்கள் தோற்றுவிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதால், அவ்வூரில் கிளை நூலகம் திறக்க சாத்தியக்கூறு இல்லை. எனினும், அப்பகுதியிலுள்ள பொது மக்களின் ஒத்துழைப்புடன் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவு செய்தால் முதற்கட்டமாக பகுதிநேர நூலகம் திறக்க இயலும்:

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான காலி மனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்கு பத்திரப் பதிவு செய்து வழங்கப்பட வேண்டும்.

3. தலா ரூ. 1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.



2005 மார்ச் 4]

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-, ஆண்டுச் சந்தா ரூ.5/-, ஆக மொத்தம் ரூ.20/- வீதம் செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்.

**30—**

## சாலை ஓரம் கடைகள் கட்ட அனுமதி

**வினா எண் 5356—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சி எல்லை சாலை ஓரம் கடைகள் கட்டி வாடகைக்கு விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கடை கட்டப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ): செஞ்சி பேரூராட்சி எல்லையில் சாலை ஓரங்களில் கடைகள் கட்டி வாடகைக்கு விட பேரூராட்சி மன்றம் உத்தேசித்துள்ள இடம் தேசிய நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்தது. மேற்படி நெடுஞ்சாலைத் துறையினரிடமிருந்து அனுமதி கிடைக்கப் பெறாமையினால் திட்டம் செயல்படாமல் உள்ளது.

**31—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 7188—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 4

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, அண்ணா பொன்நகர் கிராமத்தில் திண்காரை சாலை, தொலைக்காட்சி வசதி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட, அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, அண்ணா பொன்நகர் கிராமத்தில் மொத்தம் 15 குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கு இரண்டு ஆழ்குழாய் அடிபம்புகள் உள்ளன. மேலும், தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மக்கள் தொகை அடிப்படையில் தற்போது அங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட இயலாத நிலை உள்ளது.

அண்ணா பொன்நகர் கிராமத்தில் இரண்டு தெருக்கள் உள்ளன. அந்தத் தெருக்களுக்கு ஊராட்சி நிதியில் இருந்து சிமெண்ட் சாலை அமைக்கப்பட உள்ளது.

இலவச தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

**32—**

### சாக்கடை வடிகால் அமைத்தல்

**வினா எண் 10727—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆசாத் நகரில் உள்ள பள்ளிவாசல் பின்புறமாக மழைநீர் தேங்கி சுகாதாரக் கேடு விளைவிப்பதால் பேரூராட்சி மூலமாக சாக்கடை வடிகால் அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?



2005 மார்ச் 4]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை சிறப்பு ஊராட்சியில் ஆசாத் நகரில், பள்ளிவாசல் முன்புறம் உள்ள இரண்டு சாலைகளும் சிமெண்ட் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மழைநீர் தேங்கி சுகாதாரக் கேடு விளைவிக்கும் நிலை ஏதுமில்லை. மேலும், பள்ளிவாசல் பின்புறம், பள்ளிவாசலில் பயன்படுத்தும் கழிவு நீரானது பொதுச் சுகாதாரத்திற்கு இடையூறு இல்லாதவாறு பள்ளிவாசலுக்குச் சொந்தமான இடத்திலேயே விடப்படுகிறது. எனவே, தனி நபருக்குச் சொந்தமான இடத்தில் சாக்கடை / வடிகால் அமைக்கும் திட்டம் ஏதும் சிறப்பு ஊராட்சியில் இல்லை.

**33—**

### பள்ளிக் கட்டடத்தை பழுதுபார்த்தல்

**வினா எண் 12029—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, காவூர் கிராமத்திலுள்ள பள்ளிக் கட்டடம் பழுது நீக்கித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, காவூர் கிராமத்திலுள்ள பள்ளிக் கட்டடம் பழுதுபார்க்கும் பணி 2000-2001 ஆம் ஆண்டு 11-வது நிதிக் குழு மானியத் திட்டத்தில் ரூ.12,500/- மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 18-10-2002-ல் முடிவுற்று தற்[illegible] கட்டடம் நல்ல நிலையில் உள்ளது.

226631
சென்னை-600 009

34—

## மேல்நிலை குடிநீர்த் தொட்டி

**வினா எண் 13339—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சார அள்ளி ஊராட்சி, மஞ்சாரப்பட்டிக்காடு கிராமத்திற்கு நடப்பாண்டில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சார அள்ளி ஊராட்சி, மஞ்சாரப்பட்டிக்காடு குடியிருப்பில் தற்போதைய மக்கட் தொகை 326 ஆகும். இக்குடியிருப்பில் ஒரு ஆழ்துளைக் கிணறு பயனில் உள்ளது. மேலும், 2000-2001 ஆம் ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.5.90 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, ஊராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டு, நல்ல முறையில் இயங்கி வருகிறது. எனவே, இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் எழவில்லை.

35—

## மேல்நிலைத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 15628—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், ஏலம்பாக்கம் மேற்கு நத்தம் எட்டிகுத்திமேடு பகுதியில் மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், ஏலம்பாக்கம் மேற்கு நத்தம் குடியிருப்பின் மக்கள் தொகை 120 ஆகும். இக்குடியிருப்பிற்கு ஒரு கையிறைப்பான்மூலம் அத்தியாவசிய தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தேவை மற்றும் தகுதிக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் புதிய குடிநீர்த் திட்டம் அமைக்க பரிசீலிக்கப்படும்.

36—

## நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர்

**வினா எண் 15654—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், தொழுதாவூர் ஊராட்சி நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், தொழுதாவூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கு நிதி வசதி இல்லை. எனவே, இப்பணியை மேற்கொள்ள அரசு திட்டம் ஏதுமில்லை.

37—

## கழிவுநீர்க் கால்வாய் வசதி

**வினா எண் 15681—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாலங்காடு ஒன்றியம், பூனிமாங்காடு கிராமத்தில் இதுவரையில் கழிவுநீர்க் கால்வாய் வசதி எதுவும் செய்து தரப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

[2005 மார்ச் 4

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அப்பணி மேற்கொள்ளப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பூனிமாங்காடு கிராமத்தில் 2002-2003 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.36,545/- மதிப்பீட்டில் கழிவுநீர்க் கால்வாய் கட்டப்பட்டுள்ளது.

**38—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 22941—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, பரிமனூர் பூசாரி வளவிற்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சிக்கு உட்பட்ட பரிமனூர் குடியிருப்பின் ஒரு பகுதி, பரிமனூர் பூசாரி வளவு ஆகும். இப்பகுதிக்குப் பரிமனூரில் கட்டப்பட்டு உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம், இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிக்குத் தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.



2005 மார்ச் 4]

**39—**

## மேல்நிலைத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 27289—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சி, கருப்பக்கவுண்டனூர், வெள்ளக்காட்டு குருவக்கவுண்டனூர் ஆகிய இடங்களில் மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சி, கருப்பக்கவுண்டனூர் குடியிருப்பின் ஒரு பகுதியே வெள்ளக்காட்டு குருவக்கவுண்டனூர் ஆகும். கருப்பக்கவுண்டனூர் குடியிருப்புக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் புதிதாக அமைக்கப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய்கள்மூலம் காவிரி குடிநீர் வழங்கப்படுகிறது. வெள்ளக்காட்டு குருவக்கவுண்டனூர் பகுதிக்கு ஊராட்சிமூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய் நீட்டிப்பு செய்து காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**40—**

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 29177—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பாலிசின்னம்பாளையம் ஊராட்சியில் ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 4

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியம், பாலிசின்னம்பாளையம் ஊராட்சியில், சின்னம்பாளையம் குடியிருப்பிற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் போதுமான குடிநீர் வழங்கப்படுவதால் தற்போது புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

**41—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 29571—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சி, அண்ணா நகர் ஏரியில் போட்டுள்ள ஆழ்துளைக் கிணறுக்கு கடந்த 2 வருடங்களாக மின் இறைப்பான் வைக்காததினால் குடிநீர் வழங்கப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைப் பொருத்தி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சிக்கு உட்பட்ட பூச்சிரெட்டியூர் குடியிருப்பின் ஒரு பகுதி அண்ணாநகர் ஏரி ஆகும். தற்போது பூச்சிரெட்டியூர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து ஒரு பொதுக் குழாய் அண்ணாநகர் ஏரிப் பகுதியில் அமைக்கப்பட்டு திட்டம் பயனில் உள்ளது. மேலும், இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மகுடஞ்சாவடி ஒன்றியத்தைச் சார்ந்த 175 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் பூச்சிரெட்டியூர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புப் பணி செயல்படுத்தப்பட்டு 3/2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



2005 மார்ச் 4]

**42—**

## காவேரி குடிநீர் வழங்குதல்

**வினா எண் 29880—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சி, சமுத்திரம் கஸ்பா மற்றும் ஆதிதிராவிடர் தெரு பகுதிகளுக்கு குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஊராட்சி மன்றக் கட்டடத்திற்கு அருகே உள்ள மேல்நிலைத் தொட்டியை பழுது பார்த்து அதன்மூலம் காவேரி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சியைச் சேர்ந்த சமுத்திரம் கஸ்பா, ஆதிதிராவிடர் தெரு பகுதிகளுக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், கொங்கணாபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த 107 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 5/2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**43—**

## நடுநிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி

**வினா எண் 32808—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், நெ.2 கரியமாணிக்கம் ஊராட்சி குருவம்பட்டியில் அமைந்துள்ள அரசு நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதலாக பள்ளிக் கட்டட வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—** [2005 மார்ச் 4

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், நெ.2, கரியமாணிக்கம் ஊராட்சி, குருவம்பட்டியில் அமைந்துள்ள அரசு நடுநிலைப் பள்ளிக்கு இரண்டு ஓட்டுக் கட்டடங்களும், ஓர் ஓட்டுக் கட்டடமும் உள்ளன. 2000 ஆம் ஆண்டில் ஓர் ஓட்டுக் கட்டடம் (39'x17') 663 ச.அடி அளவில் கட்டப்பட்டுள்ளது. தற்சமயம் இப்பள்ளியில் 370 மாணவ / மாணவியர் பயில்கின்றனர். எனவே, அரசிடம் தற்சமயம் கூடுதலாக பள்ளிக் கட்டடம் கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

**44—**

## தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர்

**வினா எண் 37309—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு 2003-2004 ஆம் ஆண்டு கிராம தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ.1,50,000/- மதிப்பீட்டுச் செலவில் சுற்றுச்சுவர் கட்டித் தரப்பட்டுள்ளது.

**45—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 39918—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 மார்ச் 4]

(அ) அரூர் தொகுதி, மூன்றாம்பட்டி ஊராட்சி, வன்னிய நகரில் குடிநீர் பற்றாக்குறை உள்ளதால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர்த் தட்டுப்பாட்டை போக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், அரூர் தொகுதி, மூன்றாம்பட்டி ஊராட்சி, வன்னியர் நகரில் தற்போது 3 கைப்பம்புகளும், ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் மற்றும் திறந்தவெளிக் கிணறும் உள்ளன. இதன்மூலம் இக்கிராமத்திற்கு போதிய குடிநீர் வசதி உள்ளதால் மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**46—**

## பள்ளிக்குச் சுற்றுச்சுவர்

**வினா எண் 40902—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, இருக்கூர் ஊராட்சி, வடக்கு செல்லப்பம்பாளையம் ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், இருக்கூர் ஊராட்சி, வடக்கு செல்லப்பம்பாளையம் ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு 2004-2005 ஆம் ஆண்டு எடுத்த திட்டத்தில் சுற்றுச்சுவர் கட்ட இயலாது.

47—

[2005 மார்ச் 4

## தொடக்கப் பள்ளிக்குச் சமையல் கூடம்

**வினா எண் 40969—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சி, ஊராட்சி தொடக்கப் பள்ளிக்குச் சமையல் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சமையல் கூடம் கட்டித் தர இயலாது.

48—

## பள்ளிக்கூட கட்டடங்களைச் சீர்செய்தல்

**வினா எண் 44312—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், கூடுதுறை ஆரம்பப் பள்ளிக்கூட கட்டடங்களைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மோகனூர் ஊராட்சி ஒன்றியம், கூடுதுறை ஆரம்ப பள்ளிக் கூடக் கட்டடங்களைச் சீர் செய்ய தொகை ரூ.35,000/- செலவாகும். மேற்படி பணியினை செய்ய போதிய நிதி வசதி இல்லாமையால் பணியினை மேற்கொள்ள இயலவில்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் மேற்படி பணியினை செய்ய இயலும். ஆனால் இது நாள் வரை ஒதுக்கீடு கிடைக்கப் பெறவில்லை. அதனால் மேற்படி பணி செய்ய இயலவில்லை.



2005 மார்ச் 4]

49—

## தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 48509—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், பெரமாண்டம்பாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், பெரமாண்டம்பாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் 45 மாணவர்கள்தான் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்கு இரண்டு கட்டடங்கள் உள்ளன. அதில் ஒன்று ஓட்டு வில்லை கட்டடம் 2002-2003 ஆம் ஆண்டு பொது நிதியில் இருந்து ரூ.15,000/- மதிப்பீட்டில் பழுதுகள் சரி செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மற்றொன்று தார்சு கட்டடம். இக்கட்டடத்தை ஒன்றிய பொது நிதியில் இருந்து ரூ.80,000/- மதிப்பீட்டில் பழுதுகள் சரி செய்யும் பணி நடைபெற இருக்கிறது. எனவே, இப்பள்ளிக்கு புதிய கட்டடம் தேவையில்லை.

50— [2005 மார்ச் 4

## திரைக்காட்சி

**வினா எண் 58010—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் திரையிடப்படும் திரைக்காட்சிகளில் வரும் ஆபாச காட்சிகள் இரத்து செய்யப்படுமா?

(ஆ) இரத்து செய்ய வேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

(இ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ), (ஆ) மற்றும் (இ) 1952 ஆம் ஆண்டு மைய அரசு சினிமா சட்டத்தின்படி மைய அரசின் மத்திய தணிக்கைக் குழு திரைப்படங்கள் திரையிடும் முன் திரைப்படத்தை தணிக்கை செய்து, திரைப்படம் வெளியிட ஒப்புதல் அளிக்கிறது. எனவே, திரையிடப்படும் திரைக்காட்சிகளில் வரும் ஆபாசக் காட்சிகளை இரத்து செய்வது மைய அரசின் தணிக்கைக் குழுவின் வரம்பிற்கு உட்பட்டது. மைய அரசின் மத்திய தணிக்கைக் குழுவினரால் வெட்டப்பட்ட ஆபாசக் காட்சிகளை இணைத்து திரையரங்கில் திரையிடும் உரிமதாரர்கள் மீது 1952 ஆம் ஆண்டு மைய அரசு சினிமா சட்டம் பிரிவு 7 மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 292 (ஏ) (பி)-ன்கீழ் உரிய வழக்கு, காவல் துறையினரால் பதிவு செய்யப்பட்டு உரிய தண்டனை நீதிமன்றங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. மற்றும் உரிமம் வழங்கும் அதிகாரியால் (மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / காவல் ஆணையர், சென்னை) திரையரங்கின் 'சி' படிவ உரிமம் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



# 3. கவன ஈர்ப்பு

## குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெயை தனியே அல்லாமல் நியாயவிலைக் கடைகள்மூலம் வழங்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை நகராட்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோக மையங்கள் மூலம் மண்ணெண்ணெய் வழங்காமல் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து" மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களில் மண்ணெண்ணெயும் ஒன்றாகும். மற்ற அத்தியாவசியப் பொருட்கள் போலன்றி, மண்ணெண்ணெய் எரிபொருளாக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. எனவே, இதனை மற்ற உணவுப் பொருட்களுடன் கலக்காத வகையில் தனியாக வைத்து விநியோகம் செய்ய வேண்டியும் மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அனைத்து நாட்களிலும் மண்ணெண்ணெய் வழங்குவதற்காகவும், மண்ணெண்ணெய் விநியோக மையங்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்ணெண்ணெய் விநியோக மையத்திலும், அந்த மையத்தினைச் சுற்றியுள்ள 5 அல்லது 6 நியாயவிலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகள், மேற்படி மையத்துடன் இணைத்து மண்ணெண்ணெய் மட்டும் வழங்கப்பட்டு

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 மார்ச் 4

வருகிறது. எனவே, மண்ணெண்ணெய் விநியோகத் மையங்களில் இணைக்கப்பட்ட குடும்ப அட்டைகளை மீண்டும் நியாயவிலைக் கடைகளில் இணைக்க வேண்டிய அவசியமில்லை. இம்மையங்களில் இணைக்கப்பட்டுள்ள அட்டைகள் அதிகமானால், கடைகள் மூலமும் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்படலாம்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்துப் பார்த்தேன். விவர அறிக்கையினுடைய கடைசி வாக்கியத்தில் குடும்ப அட்டைகள் அதிகமானால் கடைகள் மூலமாக மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இங்கே வெளியிட்டிருக்கிறது. அதற்காக புதுக்கோட்டை மாவட்ட மக்களுடைய சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதுக்கோட்டை நகராட்சியிலே மட்டும் ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகிறார்கள். தற்போது புதுக்கோட்டை நகரிலே மட்டும் 32,239 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதிலே, அந்த 32,239 குடும்ப அட்டைகளுக்கும் இரண்டே இரண்டு மண்ணெண்ணெய் பங்குகள் மட்டும், விநியோக மையங்கள் மட்டும் செயல்பட்டு வருகின்றன. அதிலே ஒரு மையத்திலே 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட கார்டுகளும், இன்னொரு மையத்திலே 9 ஆயிரத்திற்கு மேற்பட்ட கார்டுகளும் இணைக்கப்பட்டுள்ளன. மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்ற நாட்களிலே மத்திய அரசு இன்றைக்கு மண்ணெண்ணையை முழுமையாக 100 சதவிகிதம் வழங்காத இந்தச் சூழ்நிலையிலே, எங்கே மண்ணெண்ணெய் கடைகளுக்கு அல்லது நியாயவிலைக் கடைகளுக்கு தாமதமாகச் சென்றால் நமக்கு மண்ணெண்ணெய் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சத்திலே பொதுமக்கள் ஒரே நேரத்திலே அந்த மண்ணெண்ணெய் பங்குகளை காலை 6 மணி முதலே முற்றுகையிட்டு காலையிலிருந்து மாலை வரை கால் கடுக்க அந்த இரண்டு மண்ணெண்ணெய் பங்குகளிலும் பொதுமக்கள் நிற்கவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகின்ற அந்த நேரத்திலே, ஏறத்தாழ அங்கே பொதுமக்களிடையே



2005 மார்ச் 4] [டாக்டர் சி. விஜயபாஸ்கர் ]

தகராறுகள் போன்றவை எல்லாம் ஏற்பட்டு, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எல்லாம் ஏற்பட்டு காவல் துறை தலையிட்டு சமாதானப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே உருவாகிவிடுகிறது. அதுமட்டும் அல்லாமல், அங்கே ஏறத்தாழ மண்ணெண்ணெய் கடைகளிலிருந்து பொதுமக்கள் செல்லக்கூடிய அந்தத் தூரமும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்ல அரசிலே சோதனைகளை சாதனைகளாக்கி மக்களுக்கு நல்லது செய்து கொண்டிருக்கின்ற நல்லாட்சியிலே இன்றைக்கு கார்டுகள் அதிகமாக இருக்கின்ற சூழ்நிலையில், அதிகமாக இருக்கின்ற அந்தக் கார்டுகளை மட்டும் பிரித்து மீண்டும் நியாயவிலைக் கடைகளிலே மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுமா என்பதை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிலே இருக்கின்ற அமைச்சர் வாயிலாகக் கேட்டு, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு எவ்வளவு அளவு மண்ணெண்ணெய் கிடைக்கின்றது என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மண்ணெண்ணெய் விநியோகம் என்பது மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. மைய அரசு மண்ணெண்ணெயை, அந்தந்த மாநிலத்தினுடைய அளவீட்டை ஒதுக்கீடு செய்து, விநியோகிக்கின்ற தன்மையை மட்டும் மாநில அரசுக்குக் கொடுத்துள்ளது. மைய அரசு ஒதுக்குகின்ற மண்ணெண்ணெயினுடைய அளவுக்கு ஏற்றாற்போன்று மாநிலத்தில் இருக்கிற குடும்ப அட்டைகளினுடைய எண்ணிக்கைக்குத் தக்கவாறு அந்தந்த மாவட்டங்களுக்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தமிழகத்தினுடைய மண்ணெண்ணெய் ஒதுக்கீடானது 78 ஆயிரம் கிலோ லிட்டர் என்று நடைமுறையில் இருந்ததை, மைய அரசு படிப்படியாகக் குறைத்து 58 ஆயிரம் கிலோ லிட்டர் என்று இப்போது நிலுவையில் வைத்துள்ளது. நாளுக்கு நாள் பெருகி வருகின்ற மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்றவாறு மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை அதிக அளவில் ஒதுக்க வேண்டிய மைய அரசு மிகக் குறைந்த அளவிலே ஒதுக்கீடு செய்கின்ற காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிகழ்வுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நேர்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்படிப்பட்ட நிலை தமிழகத்தில் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் சென்ற

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 மார்ச் 4

ஆண்டிலேயே பெருகி வருகின்ற குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையையும் கணக்கிலே கொண்டு, ஏற்கெனவே நடைமுறையிலே உள்ள குடும்ப அட்டைகளோடு புதிதாக வழங்கவிருக்கின்ற குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையையும் கணக்கிலே கொண்டு பாரதத்தினுடைய பிரதமர் அவர்களுக்கும், மைய அரசுக்கும், 58 ஆயிரம் கிலோ லிட்டர் என்று குறைக்கப்பட்டிருக்கின்ற மண்ணெண்ணெய் அளவை ஒரு இலட்சத்து 200 கிலோ லிட்டர் என்று மண்ணெண்ணெய் அளவை தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கடிதம் மூலமாகவும், நேரிலேயும் பாரதப் பிரதமரிடத்திலே கோரிக்கை வைத்தது இன்றுவரை நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-20

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மைய அரசிலே ஆளும் கட்சியாக அங்கம் வகிக்கின்ற காரணத்தினால், தமிழகத்தைச் சேர்ந்தவரே மையத்தில் பெட்ரோலியத் துறை அமைச்சராக இருக்கின்ற காரணத்தினாலும், தமிழக மக்களினுடைய நன்மையைக் கருதி மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவர்களுடைய கட்சியினுடைய தலைவர்களை வலியுறுத்தி, மைய அரசினுடைய ஒதுக்கீட்டை அதிக அளவிலே பெற்றுத் தர வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய ஆணையின் பேரிலே புதிதாக 37 இலட்சம் குடும்ப அட்டைகள் ஏழை எளிய மக்களுக்கு, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே வழங்கப்பட்டுள்ளது என்கின்ற இந்த நல்ல தகவலோடு, புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளினுடைய எண்ணிக்கைக்கு ஏற்றவாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று பரிசீலிக்கப்படும் என்பதைச் சொல்லி அமர்கிறேன்.



2005 மார்ச் 4]

## 4. வரவு–செலவுத் திட்டம், 2005–2006, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த விவாதத்தைத் துவக்கி வைக்க அனுமதி அளித்தமைக்காக தங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் 'வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது, வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது' என்று சொல்லப்பட்டிருந்தாலும், சென்ற ஆண்டு 62 பக்கமாக இருந்த நிதிநிலை அறிக்கை, இந்த ஆண்டு 100 பக்கமாக அதிகரித்திருக்கிறது. சென்ற ஆண்டு 2-1/4 மணிநேரம் உரையாற்றிய மாண்புமிகு நிதியமைச்சர், இந்த ஆண்டு 3 மணி நேரம் உரையாற்றியிருக்கிறார். இந்த வளர்ச்சிதான் இருக்கிறதே தவிர, இதிலே தொழில் ரீதியான எந்த வளர்ச்சிகளும், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வளர்ச்சிகளுக்கான வாய்ப்புகளும் இருக்கிறதா என்று பார்த்தால் சந்தேகத்திற்குரியதாகவே இருக்கிறது. இதிலே பாராட்டுகிற அம்சத்திற்கு சில செய்திகள் இருந்தாலும் அதையும் முழுவதும் பாராட்டிவிடக் கூடாது என்ற எண்ணத்தோடே சொல்லப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, அரசு ஊழியர்களுக்கு D.A., 9 மாதத்திற்கு முன்பு கொடுக்க வேண்டிய D.A. இப்போது வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றாலும், அதே நேரத்திலே அவர்களுக்கு பணிக் காலத்தை, விடுப்பிலே இருக்கிற அந்தக் காலத்தைக்கூட பணிக்காலமாகக் கருதுவேன் என்று சொல்லி, அதிலேயும் ஒரு exemption கொடுத்திருக்கிறார்கள். வேலையிலேயிருந்து, வேலைப் பணியிழந்தவர்களுக்கும், அந்த ஆசிரியர்களுக்கும் கிட்டத்தட்ட 999 பேர், அவர்களுக்கு இந்த விடுப்புக் காலம் பணிக்காலமாக, அவர்களைத் தவிர மற்றவர்களுக்குக் கருதப்படும் என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த 999 பேருக்கு, அவர்களுக்கும் இதை வழங்கியிருந்தால் ஏதோ ஒரு முழுமையான மகிழ்ச்சியாவது அவர்களுக்கும் இருந்திருக்கும்.

அதுமட்டுமல்ல, அவர்களுடைய மிக முக்கியமான கோரிக்கையே, இந்த அகவிலைப் படியில் 50 சதவீதத்தை அடிப்படைச் சம்பளத்தோடு சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் நீண்ட காலமாக

வலியுறுத்தி வருகிறார்கள். அதற்கும் இதிலே எந்தவிதமான பதிலும் இல்லாத காரணத்தினால், அவர்களும் இதை முழுவதும் பாராட்ட முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

அதேபோல, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், இதிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முழுமையாகக் கவனம் செலுத்தியிருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். குறிப்பாக, சென்ற ஆண்டு சொல்லப்பட்ட திட்டங்களையே மீண்டும் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். நான் அவர்மீது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்பதற்காகக்கூட அல்ல. ஆனால், இதை எல்லாம் அவர் பார்த்திருக்கிறாரா என்பது சந்தேகமாக இருக்கிறது. இதிலே பக்கம் 52-ல் 2005-2006 ஆம் ஆண்டில் பின்வரும் பெரும் திட்டங்களை நிறைவேற்றி முடிக்கக் கருதப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு 4 திட்டங்களை, 8.5 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம், 98.85 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம், 126.85 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம், 78.70 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம். இந்த 4 திட்டங்களுமே 2004-05 நிதிநிலை அறிக்கையிலே பக்கம் 32-ல் அப்படியே இருக்கிறது. அது என்ன, 2004-05-லே 4 திட்டங்களை நிறைவேற்றுகிறீர்கள்; அதே திட்டங்களைக் கொண்டுவந்து 2005-06-லேயும் போட்டு இதை நாங்கள் நிறைவேற்றப் போகிறோம் என்று சொன்னால், குறைந்தபட்சம் போன வருஷம் நாங்கள் சொன்னோம், அது அப்போது முடியவில்லை, இப்போது நாங்கள் அதைத் தொடருகிறோம் என்று சொல்லியிருந்தால்கூட . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில்தான் தரப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு துவக்கப்பட்டது. தற்போது பக்கம் 52-லே 94-வது பாராவிலே கூறப்பட்டிருக்கிற முதல் வரியை மாண்புமிகு உறுப்பினர் படித்துப் பார்க்க வேண்டும். 2005-2006 ஆம் ஆண்டில் பின்வரும் பெரும் திட்டங்களை நிறைவேற்றி முடிக்கக் கருதப்பட்டுள்ளது. In this year it will be accomplished; it would be completed; it would be executed. That is the intention. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-25*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிதி அமைச்சர் இதுகூடத் தெரியாமல் இப்படி பதில் சொல்வார் என்று நினைக்கவில்லை. போன வருடம் சொன்ன திட்டத்திற்கு போன ஆண்டு, சென்ற ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தொடர் செலவினம். அதற்காக நிதி ஒதுக்கி விட்டு, அது செலவிடப்பட வேண்டும். அது அறிக்கையிலே இடம் பெற வேண்டும்....



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர் செலவினத்திற்குத் தேவையான நிதியை ஒதுக்காமல் இருந்துவிட முடியாது. நிதி ஒதுக்கித்தான் ஆக வேண்டும். நிதி ஒதுக்கினால்தான் திட்டம் ஈடேறும். இது சாதாரண அரிச்சுவடி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அரிச்சுவடியைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு சொன்ன திட்டத்தையே, 4 திட்டங்கள் மறுபடியும் ஒரு பக்கம் எழுதி 100 பக்கமாக அதிகரித்து இருக்கிறார் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. சென்ற ஆண்டு சொல்லப்பட்ட திட்டங்கள் முடிவுறாமல் இருந்திருந்தால் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்றால் ஒரே வரியில் முடிந்து போய் இருக்கும். ஆக, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்றால்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு சொன்ன அதே திட்டங்களை இந்த ஆண்டு ஏன் சொல்லியிருக்கிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். அவரது கட்சியைச் சார்ந்த இன்னொரு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் கடந்த கூட்டத் தொடரின்போது ஆளுநர் உரையில் சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றி ஏன் குறிப்பிடவில்லை என்று கேட்டார். கடந்த 3 ஆண்டுகளாக குறிப்பிட்டுக் கொண்டிருந்தீர்கள், இந்த ஆண்டு ஏன் குறிப்பிடவில்லை என்று கேட்டார். ஆகவே, ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டுவிட்டது என்பதற்காக குறிப்பிடவில்லை என்றால் முன்பு அறிவித்ததையே ஏன் இப்போது குறிப்பிடவில்லை என்று கேட்கிறார்கள். ஆனால், தொடருகின்ற ஒரு திட்டத்தை இப்போது முடிக்கப்போகிறோம் என்று அறிவித்தால் ஏன் சென்ற ஆண்டு சொன்னதையே இப்போது சொன்னீர்கள் என்று கேட்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான் பேசியது பற்றி விளக்கம் சொன்னார்கள். நான் கேட்டது, நீங்கள் நல்ல எண்ணத்திலே 3 ஆண்டுகளாக தொடர்ந்து சொல்லிக் கொண்டு வந்தீர்கள் சேது சமுத்திரத் திட்டத்தைப்பற்றி. ஆனால், இப்போது சேது சமுத்திரத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது. அதை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2005 மார்ச் 4

இந்த அரசாங்கம் தொடர்ந்து நிச்சயமாக நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்று ஏன் சொல்லவில்லை என்று அந்தப் பொருளிலேதான் நான் கேட்டேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றிகூட 2004-2005 சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது 2004 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2 ஆம் நாள் அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேது சமுத்திரத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு பிரதமர் அவர்கள் இத்திட்டத்தை "சாகர்மாலா திட்டத்தின்" ஒரு பகுதியாக செயல்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் எங்களுடைய ஆற்காட்டார் கேட்டாரே தவிர வேறு ஒன்றும் இல்லை. 2004-லிலே சொல்லியிருக்கிறீர்களே, இப்போது வந்திருக்கிறதே, ஏன் அதைச் சொல்லக்கூடாது என்று கேட்டிருக்கிறாரே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனால், நீங்கள் இங்கே சொல்லியிருப்பது 4 திட்டங்கள்—சேது சமுத்திரத் திட்டத்திற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது, இது day to day affairs மாதிரி. ஒரு ஆண்டு நிதியிலே செய்யக்கூடிய ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம்...(குறுக்கீடு) அந்தத் திட்டத்திற்கு, சரி அடுத்ததற்குப் போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பொன்முடி, நீங்கள் கேட்டதற்கு பதில் சொல்லிவிட்டார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** சரி, சரி. இதுபோன்ற பல்வேறு திட்டங்களைத் திருப்பித் திருப்பிச் சொல்வதன்மூலமாக இந்த நிதிநிலை அறிக்கை, அதில்தான் முழுமையாக இருக்கிறது. அதுமட்டுமல்ல. இதிலே கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால் தலைப்பைக்கூட சரியாக பார்க்காமல் இருந்திருக்கிறார்கள். பக்கம் 92, நீங்கள் தமிழ் ஆய்ந்த நடுவர் அவர்கள் இங்கே இருக்கிறீர்கள்; பேரவைத் தலைவர் இருக்கிறீர்கள். நீங்களாவது கொஞ்சம் பார்த்துச் சிலவற்றையெல்லாம் திருத்தியிருக்கலாம். வரி சீரிதிருத்தங்கள் என்று. உள்ளே சின்ன வரியாக இருந்தாலும் பரவாயில்லை. தலைப்பே அது. அதையாவது நிதியமைச்சர் அவர்கள் கொஞ்சம் பார்க்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் ஆங்கிலத்திலே இருந்தால் அதை பார்த்துவிட்டிருப்பார்கள். நீங்கள் தமிழிலே அதைக் கொஞ்சம் பார்த்து வரி...



2005 மார்ச் 4]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு பொருள் உள்ள ஆழமான செய்தி இல்லாத காரணத்தினால் ஏதேதோ பேச வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார் என்றே சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, பொன்முடி, அது எழுத்துப் பிழை.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சருக்கு மிக நன்றி சொல்லக் மிக மிக நன்றி. கடமைப்பட்டிருக்கிறேன். இதில் பேசுவதற்கு ஒன்றுமேயில்லை என்பதை அவர் ஒத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால் இது போன்ற குற்றச்சாட்டுகளைத்தான் நாங்கள் சொல்ல...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு ஒன்றுமே ஞானம் மாண்புமிகு பொன்முடி அவர்களுக்கு இல்லை என்பதைத்தான் நான் கூறினேனேயொழிய இதில் ஒன்றும் இல்லை என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை இரகசியமாக வைக்கப்பட வேண்டிய ஒன்று. இந்த அவையில் சமர்ப்பிக்கப்படும் நேரம் வரை அந்த இரகசியத்தை காக்க வேண்டும். ஆகவே, பட்ஜெட் என்றைக்கு இந்த அவையில் தாக்கல் செய்யப்பட்டதோ முதல் நாள் இரவுதான் அதன் முழு வரைவு draft முடிக்கப்பட்டது. அதன் பிறகு இரவு முழுவதும் அதைச் சரிபார்த்து நள்ளிரவுக்கு மேல்தான் அச்சிடும் வேலை தொடங்கப்பட்டது. காலையில் இந்த அவைக்கு வருவதற்கு முன்புதான் அச்சிடும் வேலை முடிவுற்றது. ஆகவே, அச்சிடும் வேளையில் சில அச்சுப் பிழைகள் ஏற்பட்டால் அதைச் சரிபார்க்க நேரம் இருப்பதில்லை. அது நிதி அமைச்சரின் தவறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல பக்கம் 49-ல் போக்குவரத்துத் துறையிலே, 'தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 2003-2004 ஆம் ஆண்டில் சிறிய அளவில் இலாபம் ஈட்டியுள்ளன' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே 2004-2005 ஆம் ஆண்டில் இலாபம் ஏற்பட்டிருக்கிறதா? நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா? ஏனென்றால், இந்த நிதிநிலை அறிக்கை

2005-2006-க்கு; 2003-2004-க்கு மட்டும் சிறிய அளவில் இலாபம் ஏற்பட்டதாக சொல்லியிருக்கிறீர்களே 2004-2005-ல் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையில் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரிலும் அவர்கள் எங்களுக்கு அளித்த அறிவுரைகளின்பேரிலும், ஆலோசனைகளின்பேரிலும் போக்குவரத்துத் துறை எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அந்த இலாபம் இந்த இரண்டாவது ஆண்டிலும் தொடர்கிறது என்ற நல்ல செய்தியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த விவரங்களையெல்லாம் மானியக் கோரிக்கையில் மிகத் தெளிவாக விளக்குகிறேன் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004-ல் சொன்னவர்கள் 2004-2005-லும் ஒரு வரி இதேமாதிரி சொல்லியிருக்கலாம். அதற்காகத்தான் சுட்டிக்காட்டினேன். இதற்கெல்லாம் வேண்டாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் இந்த ஆண்டும் எந்த அளவிற்குப் போக்குவரத்துத் துறை இலாபம் ஈட்டி இருக்கிறது என்ற விவரங்களை நிச்சயமாகத் தெரிவிப்போம்.

**டாக்டர் க. பொன்முடி:** அதையும் ஒரு வரி சொல்லியிருக்கலாம் என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடு) விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் இங்கே சுனாமி சீர்திருத்தப் பணிகளையெல்லாம் சொல்லுகிறபொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்களும் சுட்டிக்காட்டுகிறபொழுது விவசாயிகளுக்கு நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறதே அதற்காக எதையும் செய்யவில்லை என்று ஆளுநர் உரையில் பேசுகிறபொழுதுகூட குறிப்பிட்டார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே, அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு.. (குறுக்கீடுகள்) அந்த நிலத்தை மீட்டுக் கொடுப்பதற்கான ஏதாவது திட்டங்களோ, நிதி ஒதுக்கீடோ இருக்கிறதா என்று பார்த்தால், அறிவிப்பிலே அது இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி பாதிப்பிற்கு முழு நிவாரணத்தையும் தரவேண்டியது மைய அரசினுடைய கடப்பாடு. மைய அரசுக்கு எத்தகைய சேதம்



என்பதைத் தெளிவாகத் தெரிவித்து அனுப்பி இருக்கிறோம். மைய அரசினுடைய உதவியை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய் உள்ளம் கொண்ட தங்கத் தாரகையாக வாழ்ந்து வருகின்ற தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுனாமி ஆழிப் பேரலையினால் கடலோரப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் ஏற்பட்ட மண்ணின் உப்புத் தன்மையை மாற்றி மீண்டும் விவசாயத்திற்கு ஏற்ற நிலமாக மாற்றுவதற்காக அம்மா அவர்கள் 16 கோடியே, 96 இலட்சத்து, 16 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். அதிலும் குறிப்பாக, 13,569.29 ஹெக்டேர் பாதிக்கப்பட்ட விளை நிலங்களை மீண்டும் விளை நிலங்களாக மாற்றுவதற்காக இந்தத் தொகை 16 கோடியே, 96 இலட்சத்து, 16 ஆயிரம் ரூபாய் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி இருக்கின்றார்கள் என்பதை மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அடுத்து பேசுங்கள். (குறுக்கீடு) கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே சிவபுண்ணியம் கேட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 நிதிநிலை அறிக்கையிலேயே பேசுகிறபொழுது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதேபோல தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றி 20 இலட்சம் ஹெக்டேர் நிலம் இந்த 5 ஆண்டுகளில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 10 இலட்சம் பேர் வேலைவாய்ப்புகளைப் பெறுவார்கள் என்று 2001-2002-லே குறிப்பிட்டிருந்தார்கள். இது தொலைநோக்கோடு இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், இந்த ஆண்டும் சரி, சென்ற ஆண்டும் சரி, 2004-2005 பட்ஜெட்டில் 1.5 இலட்சம் ஏக்கர். அவர்கள் சொன்னது 20 இலட்சம் ஹெக்டேர் ஏக்கர் ஐந்தாண்டுகளில் தரிசு நிலம் மீட்கப்படும் என்று 2001-2002-லே சொல்லியிருக்கிறீர்கள், உங்கள் நிதிநிலை அறிக்கையில். இதுவும் ஐந்தாண்டுகளில் முடிப்போம் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். அதற்குப் பிறகு வந்த நிதிநிலை அறிக்கையிலே எதுவும் சொல்லப்படாவிட்டாலும்—சென்ற ஆண்டு நீங்கள் சுட்டிக்காட்டியிருப்பது, 1.5 இலட்சம் ஏக்கர். ஒரு ஹெக்டேர் என்பது 2.43 ஏக்கர். இங்கே நீங்கள்போன வருடம் சொன்னதே 1.5 இலட்சம்

ஏக்கர். சரி, இந்த ஆண்டாவது—ஏனென்றால் இந்த ஐந்து வருடத்திற்குள் இந்தத் திட்டத்தினை முடிக்கப் போகிறீர்கள். இந்த ஐந்து வருடத்திற்குள் திட்டம் முடியப்போகிறது என்கிற எண்ணத்தோடு இப்போதாவது—அதிகமாகக் கொடுத்திருப்பீர்கள் என்று பார்த்தால், இந்த ஆண்டும் அதே மாதிரி 1.5 இலட்சம் ஏக்கர் நிலம்தான் கொடுத்திருக்கிறீர்கள். ஆக, ....

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ......

**டாக்டர் க. பொன்முடி:** வரிக்கு வரி எழுந்தால் நான் என்ன பேச முடியும்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** அமைச்சர், பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) பிறகு சொல்லுங்கள். உங்களுக்கு அனுமதி கிடைக்கும். நிறைய நேரம் இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் பதில் சொல்வதற்கு நிறைய நேரம் இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே 20 இலட்சம் ஹெக்டேர், என்று சொல்லப்பட்டு அது கிட்டத்தட்ட 50 இலட்சம் ஏக்கர்; ஆனால் 3 இலட்சம் ஏக்கருக்குத்தான் இந்த 2 ஆண்டுகளிலே நீங்கள் பணியாற்றியிருப்பதாக, நிதியொதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அப்படி என்றால் நீங்கள் போட்ட திட்டம் என்னவாயிற்று?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்லக் கூடாது. தரிசு நில மேம்பாடு என்பதைப் பொறுத்தவரைக்கும் அரசுக்குச் சொந்தமான நிலத்தில் அந்த மேம்பாட்டை மேற்கொள்வது என்பது மட்டுமல்ல. தனியாருக்குச் சொந்தமான fallow land தான் அதிகமாக தமிழகத்திலே இருக்கிறது. அதிலே தனியார் துறை மூலமாகவும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் விவரங்களை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்துவார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டு பட்ஜெட்டினுடைய வாசகங்களை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். An estimated 43 per cent of the total land area in the



State is now under cultivation. Our Honourable Chief Minister Selvi J Jayalalithaa has already outlined her vision of reclaiming 20 lakh hectares of cultivable wasteland through a massive wasteland development programme to be implemented over the next five years. This programme will incorporate a micro-watershed development approach with focus on soil and water conservation. இதை 2001-2002-லே சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தான் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்கிறேன். That includes land owned by private sector also.

**டாக்டர் க. பொன்முடி:** எவ்வளவு அதிலே செய்திருக்கிறீர்கள்? Private Sector-லே எவ்வளவு செய்திருக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய புரட்சிகரமான, தொலைநோக்குத் திட்டங்களிலே விரிவான, தரிசு நிலத் திட்டம் என்பது மிகப் பெரிய ஒரு தொலைநோக்குத் திட்டம் என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையிலே 5 ஆண்டுக் காலத்திலே 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை மீண்டும் விளை நிலங்களாகக் கொண்டு வந்து, வீட்டையும் நாட்டையும் ஒளிமயமாக்கிட தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக, குறிப்பாக கிராமப்புற (குறுக்கீடு) சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேட்டுக்கொள்ளுங்கள் அண்ணே (குறுக்கீடு) பொறுமையாகக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) பொறுமையாகக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நான் புள்ளிவிவரத்தோடு சொல்கிறேன். நான் புள்ளிவிவரத்தோடு சொல்கிறேன். எங்களுக்கு கொஞ்சம்.. (குறுக்கீடு) நாங்கள் சொல்வதை நீங்கள் கொஞ்சம் பொறுமையாகக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்கிற வரைக்கும் நாங்கள் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். கடந்த 4 ஆண்டுக் காலமாக தொடர்ந்து வறட்சி இருந்தாலும்கூட, டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய—(குறுக்கீடு) ஒரு சிலவற்றை தெளிவுபடுத்திச் சொன்னால்தான் உங்களுக்குப் புரியும். ஆதலால்தான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி எழுப்பிய பிரச்சினைக்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். இதெல்லாம் ஏன் இல்லை என்று கேட்டதனால் அவர் சொல்கிறார்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** 2002-2003 ஆம் ஆண்டிலே 21 ஆயிரத்து 776 ஹெக்டேர் 2003-2004 ஆம் ஆண்டிலே 23 ஆயிரத்து 600 ஹெக்டேர், இந்த நிதியாண்டைப் பொறுத்தமட்டிலே, 2004-2005 ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டிலே, 60,000 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தற்போது 45,000 ஹெக்டேர் நிலம் இன்றைக்கு தரிசு நிலங்களை விளைநிலங்களாக, சாகுபடிக்கு உகந்த நிலங்களாக மாற்றியிருக்கின்றோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 4 ஆண்டு காலமாகத் தொடர்ச்சியாக வறட்சி இருக்கின்ற காரணத்தினாலே, அந்த இலக்கை இந்த 3 ஆண்டு காலமாக முழுமையாக முடிக்க முடியவில்லை. இந்த ஆண்டு பருவ மழை பொழிந்திருக்கின்ற காரணத்தினாலே நிச்சயமாக அந்த இலக்கை முழுமையாக அடைவோம் என்பதையும், 2005-2006 ஆம் ஆண்டிலே பருவ மழை நன்றாகப் பொழிகின்ற காலகட்டத்திலே நிச்சயமாக அந்த இலக்கை எய்துவோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தப் பரப்பளவு 130 இலட்சம் ஹெக்டேர். அதிலே சாகுபடிக்கு ஏற்ற நிலப்பரப்பு 53 இலட்சம் ஹெக்டேர். அரசினுடைய தரிசு நிலப் பரப்பு 1.5 இலட்சம் ஹெக்டேர். தனியாருடைய தரிசு நிலப் பரப்பு 18.5 இலட்சம் ஹெக்டேர். அந்த 18.5 இலட்சம் ஹெக்டேரிலே தனியாரை ஊக்குவிப்பதற்காக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1 ஹெக்டேருக்கு 8,500 ரூபாய் மானியமாக வழங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-40

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய material வைத்திருக்கும் திறமையை குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. ஒவ்வொரு மந்திரியும் தன்னுடைய இலாகாவினுடைய பதிலை அளிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், நான் என்ன சொல்கிறேன் என்றால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறபோது—நீங்களும் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள்—பேசிக்கொண்டு வரும்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்தான் பதிலளிக்கக்கூடியவர்; எல்லாவற்றையும் குறித்துக்கொள்வார்கள். பிறகு பேசுகின்றபோது இப்படியெல்லாம் உறுப்பினர் பேசினார் என்று பதில் சொல்வார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடாது என்பதல்ல. ஆனால், இப்படி அடிக்கடி எழுந்து பதில் சொல்வது என்று சொன்னால், பேசுகின்றவர்களுக்கு flow of thought போய் விடும். பேசுகின்ற வேகமும் போய் விடும்.



அருள்கூர்ந்து நான் உங்களைக் கேட்டுக்கொள்வது, அவர்களுடைய திறமையையோ, அல்லது பதில் சொல்லவில்லை என்றோ நான் சொல்லவில்லை. ஏனென்றால் அவர்கள் அந்த material வைத்திருக்கலாம். ஆனால், அடிக்கடி எழுந்து சொல்வதன்மூலம் எங்களுடைய வேகம் தடைபடுகிறது. உறுப்பினர்களுக்கு அந்த வாய்ப்பை நீங்கள் தரவேண்டும். (குறுக்கீடுகள்) நேரமும் போய் விடுகிறது. ஏனென்றால் அவர் பேசுவது, நியாயமாகப் பார்த்தீர்கள் என்றால் 3 நிமிடம்தான். கடைசியில் நீங்கள் bell அடித்து விடுவீர்கள். ஆகையால், இந்த அவை உறுப்பினர்கள் பேசுவதற்கு.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலுக்கு என்று வந்துவிட்டால் எதிர்ப்பைக் கண்டு அஞ்சக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் என்றாலே எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். எதிர்ப்பு வந்தாலே எங்கள் வேகம் தடைபட்டுவிடுகிறது என்று குறைபட்டுக் கொண்டால் எப்படி?

**திரு. துரைமுருகன்:** வாதத்துக்கு வாதம், சொல்லுக்குச் சொல், எழுத்துக்கு எழுத்து, பொருளுக்குப் பொருள் பதில் சொல்வதற்கு நாங்கள் ready- ஆனால், அவர்கள் ஒவ்வொரு வார்த்தைக்கும் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் ஆகிறது. அவையை நடத்த வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொல்கிறேனே தவிர, alright அவர்கள் பேசட்டும்; வடிவேல் சொல்வது மாதிரி, ஐயா எழுந்திட்டாங்க ஐயா, எழுந்திட்டாங்க ஐயா, வந்திட்டாங்க ஐயா என்று சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, பேச்சை முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு எதிரிக்கும் வாய்ப்புக் கொடுத்தால் போதும். அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் பேசட்டும். ஆனால், நீங்கள் உடனே, உங்களுக்கு நேரமாகிவிட்டது என்று குறைத்து விடாதீர்கள். எங்களுக்கும், அவர்களுக்குப் பதில் சொல்வதற்கு வாய்ப்பைக் கொடுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி. என்னவென்றால், நான் முதலில் சொன்னபோது, சென்ற ஆண்டு 1.5 இலட்சம் ஏக்கர், இந்த ஆண்டு 1.5 இலட்சம் ஏக்கர் முடிந்தது என்று சொன்னால், இல்லை, இல்லை நாங்கள் 45,000 ஹெக்டேர்தான் முடித்திருக்கிறோம் என்று அவரே சொல்லியிருக்கிறார். அதற்கு ரொம்ப நன்றி. நான் நினைத்தது ரொம்ப தப்புபோல் இருக்கிறது. மறுபடியும்,...

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, இந்த நிதியாண்டு முடிவதற்கு 31—3—2005 வரை கால அவகாசம் இருக்கிறது. இந்த மாத இறுதிக்குள்ளாக.

**டாக்டர் க. பொன்முடி:** நன்றி. (குறுக்கீடு) இல்லை, Target achieve பண்ணுவோமென்று சொன்னால் நன்றி.

அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு. இதிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில் கட்டுமானத் தொழிலாளர்களின் பயனுக்காக ஓய்வூதியத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுமென்று இந்த அரசு குறிப்பிட்டிருந்ததை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிந்திருக்கலாம். இந்தத் திட்டம் பின்னர் அறிவிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த கால கலைஞருடைய ஆட்சியில் 60-க்கும் மேற்பட்ட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தொழிலாளர்களை எல்லாம் கொண்ட அமைப்புச் சாரா தொழிலாளர்கள் வாரியம் என்று உருவாக்கப்பட்டு கிட்டத்தட்ட 10 வாரியங்கள் அதிலே உருவாக்கப்பட்டிருந்தன. மேலும், அந்தத் தொழிலாளர்களுக்கு நிதி வசதி செய்து கொடுப்பதற்காக உடல் உழைப்புத் தொழிலாளர்கள் பொது நல நிதி என்று ஏற்படுத்தப்பட்டது. அந்தத் தொழிலாளர்களை employ செய்கிற, பணியிலே அமர்த்துகிற அந்தத் தொழில் முனைவர்களே அவர்களுக்கான நிதியையும் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு, அதற்கான ஆட்டோ ரிக்ஷா, வாடகை ஓட்டுநர், ஊர்தி ஓட்டுநர் சங்கம், சலவைத் தொழிலாளர் சங்கம், முடிதிருத்துவோர் நலச் சங்கம், தையல் தொழிலாளர், பனை மரத் தொழிலாளர், கைவினைத் தொழிலாளர், விவசாயத் தொழிலாளர் ஆகியோருக்கான வாரியங்கள் எல்லாம் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், அந்த வாரியங்கள் எல்லாம் குறைக்கப்பட்டு ஒரே வாரியமாக இணைக்கப்பட்டது. அதிலும் இத்தனை வாரியத்திலே இருக்கிற உறுப்பினர்களுக்கும், அவர்களுக்கு ஓய்வூதியம், கல்வித் தொகை போன்றவை எல்லாம் அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால் கடந்த 4 ஆண்டு காலமாக இந்தத் தொழிலாளர்களுக்காக, அதுவும் குறிப்பாக, உடல் உழைப்புத் தொழிலாளர்கள் மற்ற தொழிலாளர்களுக்காக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், இதிலே சொல்லியிருக்கிறார்கள் ஓய்வூதியத்தைப் பற்றி. இது 2001-2002-லேயே சொல்லப்பட்டு இன்றும் கடைசியிலே, கடைசியாக அளிக்கிற இந்த பட்ஜெட்டிலேயும் நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே தவிர, அதற்கான திட்டம் முழுமையாக நிறைவேறியதாகத் தெரியவில்லை. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது.



முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைப்புச் சாரா தொழிலாளர்கள் வாரியத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். கடந்த காலத்தில் 1996-2001-ல் பல்வேறு வகையான திட்டங்கள் அவர்கள் ஆட்சியில் அறிவிப்பாக அறிவிக்கப்பட்டன. ஆனால், எந்தத் திட்டத்திற்கும் முறையான நிதியை ஒதுக்கவில்லை. நிதி ஒதுக்குவதற்கு உண்டான ஏற்பாடுகளையும் அவர்கள் செய்யவில்லை.

அதைப்போலத்தான் அமைப்புச் சாரா தொழிலாளர்கள் நல வாரியத்தையும் உருவாக்குவதற்கு ஆணையோடு அவர்கள் அறிவிப்புச் செய்தார்கள். அதனுடைய தொடர் செலவிற்காக மாண்புமிகு உறுப்பினர் தற்போது கூறியிருந்த பல்வேறு நலத் திட்டங்களுக்கு, விவசாயிகள் கரும்பு உற்பத்தியில், அவர்கள் ஆலைக்குக் கரும்பைக் கொடுக்கின்றபோது டன் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்ற வீதமும், நெல் கொள்முதலில் விவசாயிகளிடமிருந்து, அங்கே விவசாயிகள் கிலோவிற்கு ஒரு ரூபாய் என்று அவர்கள் அதில் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், விவசாயிகள் அந்த இரண்டையும் கொடுப்பதற்கு மறுத்துவிட்ட காரணத்தினால் அந்தத் தொடர் செலவிற்கு அங்கே நிதி இல்லை. தற்போது அந்த நல வாரியத்திற்கு நிதியை எந்த வகையில் நாம் ஏற்பாடு செய்யலாம் என்பதனை அங்கே இருக்கின்ற குழு ஆராய்ந்து கொண்டிருக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே நிதியாதாரங்களை விரிவுபடுத்தவில்லை என்று சொன்னார்கள். 15-6-1997-லே 0.1 விழுக்காடாக இருந்ததை 0.3 விழுக்காடாக அந்தப் பணியாளர்களை அமர்த்துகிறவர்கள் கொடுக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டு, 1996-ல் 90 இலட்சம் ரூபாயாக இருந்த அந்த நிதி 25 கோடியே 88 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாயாக 2001-ல் உயர்ந்தது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 90 இலட்சம் ரூபாயிலேயிருந்து 25 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, மற்றவர்களுக்கும் இதுபோன்று, அனைத்துத் தொழிலாளர்களுக்குமே இதைச் செய்யவேண்டும் என்று சொல்லித்தான் அந்த வாரியமே அமைக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டுமானத் தொழிலாளர்கள் பற்றிக் கூறுகிறார்களா அல்லது அமைப்புச் சாரா

தொழிலாளர்கள் நல வாரியத்தைப் பற்றி கூறுகிறாரா என்பதை விளக்கிக் கூற வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியமும் அதிலே ஒன்று. அதேபோல டாக்சி ஓட்டுநர்களுக்காக உருவாக்கப்பட்டதிலேயும், கார் தயாரிப்பாளர்கள், அவர்களும் அதிலே நிதி கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு, அதுவும் அளித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. இதிலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைப்பினுடைய வெற்றி, அமைப்பினுடைய உறுப்பினர்களான தொழிலாளர்களின் பங்கீடு செலுத்தினால்தான் வெற்றி பெற முடியும். பல அமைப்புகளில் தொழிலாளர்கள் பங்கீடு செலுத்தவே அவர்கள் முன்வரவில்லை. பங்கீட்டுக்கே அவர்கள் முன்வரவில்லை. அதைத்தான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் குறிப்பிடுகிறேன். அதற்காக இந்த நான்கு ஆண்டுகளில் இந்த அரசு எந்த முயற்சியும் எடுக்காத காரணத்தினால் இப்போதும் அதைச் சொல்லியிருக்கிறீர்களே தவிர, அதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, துறைமுகத்தைப் பற்றிக்கூட பேசினார்கள். குளச்சல் துறைமுகத்தைப் பற்றி இரண்டு நிதிநிலை அறிக்கைகளிலே சொன்னாலும், இந்த நிதிநிலை அறிக்கையிலே குளச்சல் துறைமுகத்தைப் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை; குறிப்பிடவும் இல்லை. அதை எப்படியும் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மேலும் நான் ஒரு வேண்டுகோளாக வைக்க விரும்புவது, இரண்டு நாட்களுக்கு முன்பு திராவிடக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் முதலமைச்சரைச் சந்தித்து ஒரு கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். 1970 ஆம் ஆண்டு அனைத்து சாதியினரும் அர்ச்சகராக ஆகலாம் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டு, அது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, அதைத் தடை செய்து நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் உச்ச நீதிமன்றம் அது செல்லும் என்று தீர்ப்பளித்ததற்குப் பிறகு, இன்னும் அது நிறைவேற்றப்படாமலே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்தச் சட்டத்தை,



அனைத்து சாதியினரும் அர்ச்சகராக ஆகலாம் என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக நான் கேட்டுக்கொள்கின்றேன். மீண்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளிலே உரையை முடித்துவிடுங்கள். பொன்முடி, ஏற்கெனவே 25 மணித் துளிகள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) 15 நிமிடங்கள்தான் கேட்டார்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயத்தீர்வை குறித்து ஆளுநர் உரையின் மீதான விவாதத்திலே எங்கள் மாண்புமிகு உறுப்பினர் ஆற்காட்டார் அவர்கள் பேசுகிறபோது, 2003-2004 ஆம் ஆண்டு ஆயத்தீர்வை ரூ.1,657 கோடி என்று குறிப்பிட்டார்; குறைந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டினார். உடனே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்து இல்லை, இல்லை, நீங்கள் சொல்வது தவறான கணக்கு என்று சொன்னார். திரு. ஆற்காட்டார் அவர்கள் அதற்கான சான்றையும் எடுத்துக்கொடுத்தார். அப்போது, அதற்கும் விடாமல் அமைச்சர் அவர்கள் எழுந்து, நீங்கள் சொல்வது தவறான சான்று என்றுகூட குறிப்பிட்டார்கள். அப்போது அது தவறாக இருந்திருக்குமானால், நீங்கள் இப்போது அளித்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையில், 57 Budget Information - நிதிநிலைக் குறிப்புப் பகுதி 1.

முற்பகல் 11-50

அதிலே படம் போட்டே காண்பித்திருக்கிறீர்கள். 2001-2002-ல் ரூ.2,058.22 கோடி, 2002-2003-ல் ரூ.2113.61 கோடி, 2003-2004-ல் ரூ.1,657.10 கோடி. அதைத்தான் அவர் சுட்டிக்காட்டினார். அதை அன்று தவறு என்று சொன்னீர்களே, இதை இப்போது குறிப்பிட்டிருக்கிறீர்களே, எப்படி?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் கடந்த கவர்னர் உரையின்போதும் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினார். தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இந்தப் பிரச்சினையை இங்கே கிளப்பியிருக்கின்றார். இதற்கு நான் உண்மையான விளக்கத்தினைச் சற்று நேரம் எடுத்துக்கொண்டு சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2002-2003 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை அதிகமாகவும், அதாவது, ரூ.2,113.61 கோடியாகவும், அதற்கடுத்து 2003-2004 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை குறைவாகவும், அதாவது, ரூ.1,657.10 கோடி வருவாய் கிடைத்துள்ளதாகவும், ஆக மொத்தம், 2002-2003 ஆம் ஆண்டைக்

காட்டிலும், 2003-2004 நிதியாண்டில் ஆயத்தீர்வை இழப்பு ரூ.456.51 கோடி என்கின்ற உண்மைக்கு மாறான கருத்து திட்டமிட்டே பரப்பப்பட்டு வருகிறது. இதில் எள்ளளவும் உண்மையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, நிதியாண்டு என்பது ஏப்ரல் முதல் மார்ச் முடிய உள்ள காலமாகும். 2002-2003 நிதியாண்டில் மது விற்பனையில் ஆயத்தீர்வை ஆண்டான காலம் 16-9-2002 முதல் 15-9-2003 வரையிலாகும். அதாவது, நிதியாண்டு என்பது ஏப்ரல் முதல் மார்ச் மாதம் வரை உள்ளடக்கிய ஆண்டாகும். ஆனால், ஆயத்தீர்வை, மது விற்பனைக்குண்டான ஆயத்தீர்வை ஆண்டு, ஒன்பதாவது மாதம் முதல், அடுத்த ஆண்டு ஒன்பதாவது மாதம் வரை கணக்கிடப்பட்டிருக்கிறது. இது 28-11-2003 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது அந்த ஆண்டில். 2002-2003 நிதியாண்டில் ஆயத்தீர்வை மூலம் பெறப்பட்ட வருவாய் ரூ.2,113.61 கோடியாகும். ஆயத்தீர்வை வருவாய் என்பது உரிமைத் தொகை, விற்பனைக் கட்டணம் மற்றும் இறக்குமதி அனுமதி உரிமைக் கட்டணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

2002 செப்டம்பரில் பெறப்பட்ட உரிமைத் தொகை ரூ.629.51 கோடி. அதாவது, தனியார் சில்லறை விற்பனையை நாம் ஆரம்பிக்கும்போது, தனியாரிடமிருந்து பெறப்பட்ட உரிமைத் தொகை அவ்வருடத்திய நிதியாண்டில் ஆயத்தீர்வை வருவாயாக உள்ளடக்கியிருக்கிறது. 2002-2003 நிதியாண்டிற்கு மட்டும் உரியது அல்ல, 2002 செப்டம்பரிலிருந்து, 2003 நவம்பர் வரையிலான ஆயத்தீர்வை ஆண்டிற்கும் அது கணக்கிடப்படவேண்டும். எனவே, 2003-2004 நிதியாண்டிற்கும் சேர்த்த தொகை இதில் அடங்கும். உரிமைத் தொகை என்பது ஒரு ஆயத்தீர்வை ஆண்டு முழுவதற்கும் உரியதாகும். எனவே, இதை மார்ச் 2003 வரையிலான நிதியாண்டு காலத்திற்கு மட்டும் கணக்கிடுவது சரியல்ல; செப்டம்பர் வரை அதைக் கொண்டு செல்லவேண்டும். ஆயினும், ஒரு வாதத்திற்காக எடுத்துக் கொண்டாலும், 2002-2003 ஆம் நிதியாண்டில் கிடைத்த உரிமைத் தொகை ரூ.629.51 கோடி வருவாயில் ரூ.323.34 கோடி மட்டுமே 2002-2003 நிதியாண்டிற்கு விகிதாச்சாரப்படி சேரவேண்டிய உரிமைத் தொகையாகும்.

இதனடிப்படையில் கணக்கிடுவோமானால், 2002-2003 நிதியாண்டிற்கு உரிய மொத்த ஆயத்தீர்வை வருவாய் ரூ.1,790.27 கோடி மட்டுமே ஆகும். 2002-2003 நிதியாண்டில் கணக்கிட்ட தொகை ரூ.2,113.61 கோடியாகும்.



இதில், அந்த ஆண்டிற்குரிய காலத்தில் விகிதாச்சாரப்படி சேரவேண்டிய உரிமைத் தொகை ரூ.323.34 கோடி மட்டுமே. எனவே, 2002-2003 நிதியாண்டிற்குச் சேரவேண்டிய சரியான தொகை ரூ.1,790.27 கோடியாகும்.

இதேபோன்று, 2003-2004 நிதியாண்டில் பெறப்பட்ட ஆயத்தீர்வை தொகை ரூ. 1,657.10 கோடியாகும். 2003-2004 நிதியாண்டிற்குச் சேரவேண்டிய, ஆனால், 2002-2003 நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட விகிதாச்சார உரிமைத் தொகை ரூ.323.34 கோடி.

முற்பகல் 11-55

ஆக, 2003-2004 நிதியாண்டிற்குரிய மொத்த ஆயத்தீர்வை வருவாய் ரூ. 1,980.44 கோடி ஆகும். எனவே, மிகச் சரியாகக் கணக்கிட்டால் 2002-2003 நிதியாண்டுக்குரிய ஆயத்தீர்வைத் தொகையோடு 2003-2004 நிதியாண்டுக்குரிய ஆயத்தீர்வைத் தொகையை ஒப்பிட்டால் 2003-2004 நிதியாண்டில் ரூபாய் 190.17 கோடி அதிகமாகவே அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது. இருப்பினும், 29-11-2000 முதல் மதுபான சில்லறை விற்பனை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஏற்றுக்கொண்ட பின்னர் உரிமைத் தொகை மூலம் வருவாய் ஏதும் பெறப்படவில்லை. ஆயினும், 29-11-2003 முதல் 28-11-2004 வரையிலான ஓராண்டுக் காலத்தில் TASMAC மதுபான சில்லறை விற்பனையின் மூலம் அரசுக்குக் கிடைத்த மொத்த வருவாய் ரூ.4,441.88 கோடி ஆகும். இந்த வருவாயை, இதே காலகட்டத்தில் அதாவது 29-11-2002 முதல் 28-11-2003 வரையில் தனியார் மதுபான சில்லறை விற்பனை செய்தபொழுது அரசுக்குக் கிடைத்த ஆயத்தீர்வை வருவாய் ரூ.3,146.48 கோடி மட்டுமே ஆகும். தமிழ்நாடு மாநில வாணிப கழகம் 29-11-2003 முதற்கொண்டு மதுபான சில்லறை விற்பனையை வெற்றிகரமாகச் செய்து வருகிறது.

சில்லறை விற்பனையை தனியார் நடத்திய காலமான 29-11-2002 முதல் 28-11-2003 வரையில் TASMAC-ன் மதுபான விற்பனை மதிப்பு ரூ.3877 கோடி ஆகும். மதுபான சில்லறை விற்பனையை TASMAC நிறுவனம் மேற்கொண்ட பிறகு இதற்கு இணையான ஒரு வருட காலத்தில் அதாவது 29-11-2003 முதல் 28-11-2004 வரையில் மதுபான விற்பனை மதிப்பு ரூ.5,441 கோடி ஆகும். இவ்வாறு TASMAC மதுபான சில்லறை விற்பனை மேற்கொண்ட ஓர் ஆண்டுக் காலத்தில் விற்பனையான மதுபானத்தின் கூடுதல் மதிப்பு மட்டும் ரூ.1,564 கோடி ஆகும். இது கடந்த ஆண்டு தனியார் விற்பனையோடு ஒப்பிடும்போது 40.34 விழுக்காடு வளர்ச்சியாகும்.

2004 ஏப்ரல் முதல் 2005 ஜனவரி வரையிலான 10 மாத காலத்தில் நடைபெற்ற விற்பனையின் மதிப்பு ரூ.1,338 கோடி ஆகும். முந்தைய நிதியாண்டில் இதற்கு இணையான காலத்தில் நடைபெற்ற மதுபான விற்பனையின் மதிப்பு ரூ.3,421 கோடி மட்டுமே ஆகும். இவ்வாறு, நடப்பு நிதியாண்டில் கடந்த 10 மாதங்களில் மட்டும் நடைபெற்ற விற்பனையின் கூடுதல் மதிப்பு ரூ.1,417 கோடி ஆகும். மதுபான சில்லறை விற்பனையைத் தனியார் நடத்திய 29-11-2002 முதல் 28-11-2003 வரையிலான ஓர் ஆண்டு காலத்தில், அதாவது, பெட்டிகளில் மதுபான விற்பனையின் அளவு, 149.79 இலட்சம் பெட்டிகள் ஆகும். TASMAC நிறுவனம் மதுபான சில்லறை விற்பனையை மேற்கொண்ட பிறகு இதற்கு இணையான காலத்தில் அதாவது 29-11-2003 முதல் 28-11-2004 வரையில் மதுபான சில்லறை விற்பனை 183.16 இலட்சம் பெட்டிகள் என்று உயர்ந்தது. இவ்வகையில் விற்பனை அளவில் ஏற்பட்ட கூடுதல் மட்டும், அதாவது தனியார் விற்பனையில் சில்லறை விற்பனை இருந்தபோது அதைக்காட்டிலும், TASMAC சில்லறை விற்பனையை ஏற்றுக்கொண்ட பிறகு 33.37 இலட்சம் பெட்டிகள் உயர்ந்திருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இது 22.27 விழுக்காடு வளர்ச்சியாகும். இதுதான் கடந்த 22 ஆண்டுகளில் நடைபெற்ற விற்பனையில் மிக அதிகபட்ச அளவாகும். நடப்பு நிதியாண்டில் 2004 ஏப்ரல் முதல் 2005 ஜனவரி வரையில் மதுபான விற்பனை அளவு 160.30 இலட்சம் பெட்டிகள் ஆகும். முந்தைய நிதியாண்டில் இதற்கு இணையான காலத்தில் 130.74 இலட்சம் பெட்டிகள் மட்டுமே விற்பனை ஆனது. இவ்வாறு நடப்பு நிதியாண்டில் கடந்த பத்து மாதங்களில் மட்டும் 29.56 இலட்சம் பெட்டிகள் கூடுதலாக விற்பனையாகியுள்ளது. இந்த மகத்தான சாதனையானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) துணிச்சலான மற்றும் தூய்மையான நிர்வாகத் திறனுக்கு கிடைத்த சான்றாகும் என்பதனை நான் இங்கே தெளிவாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பொன்முடி, இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றும் இல்லை, விளக்கம்தான், தகராறு பண்ணுவதற்கோ அல்லது வாதம் பண்ணுவதற்கோ வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்வது, நான் தெளிவாக அன்றைக்கு அரசாங்கம் அச்சடித்துக் கொடுத்த அந்தப் புத்தகத்திலிருந்துதான் எடுத்துக் கொடுத்தேன். பொன்முடியும் இப்போது அதைத்தான் சொன்னார். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மிக விளக்கமாக பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, நேற்றுதான் நிதித் துறை செயலாளர் ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். தயவுசெய்து அந்த அறிக்கையையும் எடுத்துப் பாருங்கள். அவர் சொல்கிற அந்த figure-க்கும் நம்முடைய அமைச்சர் திரு ஓபி. சொல்கின்ற அந்த figure-க்கும் கொஞ்சம்கூடப் பொருத்தமாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரும்பவும் ஒரு விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதியாண்டு என்பது ஏப்ரலிலிருந்து மார்ச் வரை. (குறுக்கீடு) ஆனால், ஆயத்தீர்வையினுடைய ஆண்டு என்பது செப்டம்பரிலிருந்து செப்டம்பர் வரை — அது ஆயத்தீர்வை ஆண்டு. அந்த கடந்த ஆண்டினுடைய privilege amount சென்ற ஆண்டினுடைய நிதியாண்டின் கணக்கில் சேர்ந்ததினாலே.—அடுத்த ஆண்டு தனியாரிடமிருந்து டாஸ்மாக் எடுத்ததினாலே privilege amount கிடைக்காது. அந்தக் குறைபாட்டைத்தான் நீங்கள் சொல்லி இருக்கிறீர்களேயொழிய டாஸ்மாக் சில்லறை விற்பனை எடுத்துக்கொண்டதிலிருந்து நட்டம் என்கின்ற வாதத்தை ஒத்துக்கொள்ள முடியாது என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் சொல்வதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. Calendar year என்பது ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து மார்ச் 31 ஆம் தேதி வரைக்கும். இந்த மது விற்பனை என்பது செப்டம்பரிலிருந்து அடுத்த செப்டம்பர் வரைக்கும். ஆனால், நம்முடைய நிதித் துறை செயலாளர் நேற்று ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். நான் ஏற்கெனவே பேசிய அந்தப் பிரச்சினைக்கு மிக விளக்கமாக ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். அவர் விடுத்திருக்கிற அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற அந்தப் புள்ளிவிவரங்களுக்கும், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் சொல்கின்ற புள்ளிவிவரங்களுக்குமே வேறுபாடு இருக்கிறது. நான் என்ன கேட்டுக்கொள்கிறேன் என்றால், இது பற்றி, ஆயத்தீர்வை குறித்து ஒரு நாளைக்கு விவாதிக்கப் போகிறோம். அன்றையதினத்தில்

மிக விளக்கமாக எல்லோருக்கும், நமக்கு மட்டுமல்ல, நாட்டு மக்களுக்கும் தெரியக்கூடிய வகையில்...

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நிதித் துறை செயலாளர் அறிக்கை விட்டிருக்கிறார் என்று சொல்கிறார் திரு. வீராசாமி. இது அதற்கு முன்னாலே எழுதிக் கொடுத்தது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணக்கு இரண்டுமே ஒன்றுதான். கணக்கில் எந்தக் குழப்பமும் கிடையாது. அரசாங்கத்தினுடைய நிதியாண்டு என்பது ஏப்ரலிலிருந்து மார்ச் வரை கணக்கிடப்படுகிறது. ஆனால், ஆயத்தீர்வையினுடைய வருவாயை நாம் செப்டம்பரிலிருந்து அடுத்த செப்டம்பர் வரைக்கும் கணக்கிடுகிறோம். அதுவும் குறிப்பாக நீங்கள் சொன்ன ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும்—போன ஆண்டிலே—தனியார் இந்த விற்பனைக் கடைகளை நடத்திக்கொண்டிருந்தார்கள். அப்போது privilege amount 650 கோடி ரூபாய், 629 கோடி ரூபாய், நாம் அவர்களிடம் வாங்கியிருக்கிறோம். அது ஆயத்தீர்வை வருவாயாக அந்த ஆண்டிலே கணக்கில் சேர்ந்தது. இந்த ஆண்டு என்று வரும்போது ஆயத்தீர்வையில் நாம் அந்த privilege amount—629 கோடி ரூபாயை அவர்களிடம் வாங்கவில்லை. முன்பு அந்த 629 கோடி ரூபாயை அவர்களிடம் வாங்கிக் கொண்டு, நாம் 20 சதவீதம் அவர்களுக்கு விற்பனை பண்ணியதால் இலாபம் கொடுத்துக் கொண்டு இருந்தோம். ஆனால், இந்த வருடம் அவர்களிடம் வாங்காமல் அந்த 20 சதவீதம் விற்பனையுடன் சேர்த்து நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டைக் காட்டிலும், டாஸ்மாக் அரசு நிறுவனம் எடுத்துக்கொண்ட பிறகு பெருத்த இலாபம் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை, உண்மை, உண்மை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பொன்முடி, இத்துடன் விட்டுவிடுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த விளக்கம் கொடுத்திருக்கிறார். அது குறித்து ஒரு நாளைக்கு விவாதிக்கப்போகிறோம். மிக விவரமாக விவாதிக்கலாம். ஆனால், ஒன்று இந்த டாஸ்மாக்கில் ஒரு பெரிய குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குழப்பம் என்ன என்பதை மிக விவரமாக விவாதிப்பதற்கு தயவுசெய்து அருள்கூர்ந்து நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இதில் எந்தவிதக் குழப்பமும் இல்லை. என்னிடம் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. நான் மாண்புமிகு உறுப்பினருக்கு நேரடியாகத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) எந்தவித குழப்பமும் இல்லை. அதாவது முன்பு 12 இலட்சம் பெட்டிகளாக இருந்த — மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே தெரிவித்தார்கள், மாதம் ஒன்றிற்கு 12 இலட்சம் பெட்டிகளாக இருந்த மாத சராசரி விற்பனையின் அளவு டாஸ்மாக்கில் நாம் எடுத்துக்கொண்ட பிறகு பதினெட்டரை இலட்சம் பெட்டிகளாக உயர்ந்திருக்கிறது. இதிலிருந்து நாம் நன்றாகவே தெரிந்துகொள்ளலாம். பெட்டிகளுடைய விற்பனை உயர்ந்திருக்கும்போது அதனுடைய ஆயத்தீர்வை வருவாய் உயருமா, உயராதா என்பதனை எல்லோரும் நன்றாகவே அறிவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்டி உயர்ந்திருக்கிறது என்பதை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பொன்முடி இரண்டு மணித்துளிகளுக்குள் உரையை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Mr. Ponmudi, one minute, one minute, Mr. Ponmudi. நிதிச் செயலாளர் கூறுவது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறையில் கூறப்பட்டிருப்பது சரியானதுதான். அதையேதான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் கூறியிருக்கிறார்கள். நிதித் துறையில் குறிப்பிடப்பட்டிருப்பது, அந்த டாஸ்மாக் பொறுப்பேற்பதற்கு முன்னால், டெண்டர் சிஸ்டம் இருந்தது. டெண்டர் சிஸ்டத்திலே, அந்த டெண்டர் வருவாய் வருகிறது. தனியார் துறை மூலம் அதை விடுகிறபோது, டெண்டர் வருமானம் வருகிறது; சில்லறை விற்பனைக்கு விற்கிறபோது. ஆனால், டாஸ்மாக் எடுத்தபோது, டெண்டர் முறை போய்விடுகிறது. டெண்டர் முறை போய்விடுவதால், ஆரம்பகாலத்தில் வருகிற அந்த டெண்டர் ஒட்டுமொத்தத் தொகை குறைகிறது. ஆனால், டாஸ்மாக் எடுத்த பிறகு, அந்த ரீடெய்லருக்குக் கொடுக்கின்ற கமிஷன் இல்லாமல் போய்விடுகிறது. அந்த கமிஷன் டாஸ்மாக்கிற்கு வருவாயாக வருகிறது. ஆனால், டெண்டர் சிஸ்டத்தில் ஆரம்பத்தில் பணம் வருவதுபோல் வரும். ஆனால், 20 சதவிகிதம் ரீடெய்லுக்குத் தருகிற காரணத்தால், மாதாமாதம் அந்தப் பணம் கரைந்துவிடும். அது தனியாருக்குச் சென்றுவிடும். தனியார் துறையிலிருந்து, சில்லறை வியாபாரிகளிடமிருந்து டாஸ்மாக் எடுத்த பிறகு

பெருத்த இலாபம் கிடைத்திருக்கிறது. இதைத்தான் புள்ளிவிவரத்தோடு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கினார்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் கூறுகின்றபொழுது, தனியார் மூலம் சில்லறை விற்பனை நடைபெற்றபோது இலாபம், ஆயத்தீர்வையில் அதிக வருவாய் கிடைத்தது. டாஸ்மாக் எடுத்ததற்குப் பின்னால், நஷ்டம் ஏற்பட்டது என்ற தோற்றத்தில், சென்ற கூட்டத்தில் சொல்ல முற்பட்டார். அதற்குத்தான் நான் இவ்வளவு நீண்ட விளக்கம் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பொன்முடி, இரண்டு மணித் துளிகளில் பேச்சை முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** என்ன, நான் ஆரம்பிக்கவேயில்லையே. எங்கே நான் பேசினேன்? என்ன சார், பேசவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டதைவிட அதிக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் க. பொன்முடி:** எல்லாம் நீங்களே பேசிவிட்டு, நான் பேசினேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டதைவிட அதிக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புகளைப் பொறுத்தவரையில், சாலைப் பணியாளர்கள் 10,000 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டு, உயர்நீதிமன்றம் அவர்களைப் பணியிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னதற்குப் பிறகும்கூட, இந்த நிதிநிலை அறிக்கையிலே அவர்களைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. (குறுக்கீடு) ஏங்க, கடைசியிலே பேசுங்கள், சார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், பள்ளிகளிலே கணினிப்பாடம் கட்டாயப் பாடமாக்கப்பட்டிருக்கிற காலகட்டத்தில், அங்கே பணிபுரிகிற ஆசிரியர்களும் கணினிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நிரந்தரமாக நியமிக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.



இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், "நுண்மாண் நுழைபுலமும், வாரிவழங்கும் வள்ளல் தன்மையும், தொலைநோக்குச் சிந்தனையும் கொண்ட, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் நல்லாட்சியைச் சித்தரிக்கும் வண்ணம் அமைந்துள்ள, வள்ளுவர் பெருந்தகையின் இச்சொற்களை நினைவு கூர்ந்து..." என்று இவர் ஆரம்பித்து, "திண்ணிய மன உறுதியுடனும், திடமான நம்பிக்கையுடனும், முழுமையான ஈடுபாட்டுடனும், தெள்ளத் தெளிவான சிந்தனையுடனும், தான் மேற்கொண்ட நடவடிக்கைகளின் வாயிலாக..." என்று நிதியமைச்சர் அவர்கள், இதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இதற்காக சில உதாரணங்களை மட்டும் சுட்டிக்காட்டி, இரண்டே மணித் துளிகளில் முடித்துக்கொள்கிறேன். குறிப்பாக, தொலைநோக்குச் சிந்தனை என்று சொன்னால், நீண்ட காலத் திட்டங்களாக உருவாக்குவது வழக்கம். ஆனால், இந்த ஆட்சியிலே ஏற்பட்டிருக்கிற தொலைநோக்குச் சிந்தனைகளுக்குச் சில உதாரணங்களை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த ரேஷன் கார்டிலே ஏற்பட்டிருக்கிற குழப்பம் ஒன்று மட்டும் போதும். 1-7-2002-லே அடையாளச் சீட்டிலே கூப்பன் சிஸ்டம் என்று ஒன்று கொண்டு வந்தீர்கள். 1-7-2002-லே கொண்டுவந்துவிட்டு, அடுத்த வருடமே அது இல்லையென்று சொல்லிவிட்டீர்கள். அடுத்து, 'எச்' முத்திரை குத்தப் போகிறோம் என்று, குத்தோ குத்து என்று எல்லா இடத்திலும் குத்தினீர்கள். 'எச்' முத்திரையும் இந்தத் தேர்தலிலே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டைப் பொறுத்தவரையிலே, (குறுக்கீடு) சொல்லி முடித்துவிடுகிறேன். ரேஷன் கார்டிலே குழப்பம் என்று சொல்லாதீர்கள். ரேஷன் கார்டைப் பொறுத்தவரைக்கும் உங்களது ஆட்சியில் குழப்பம் உருவாக்கப்பட்டது. அந்தக் குழப்பங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் தீர்த்திருக்கிறார்கள். பல ஏழைகளுக்கெல்லாம் ரேஷன் கார்டே இல்லையென்ற நிலையை உங்கள் ஆட்சியில் உருவாக்கினீர்கள். கிட்டாதவர்களுக்கெல்லாம், ஏழைகளுக்கு ரேஷன் கார்டைக் கொடுத்து, அவர்கள் வயிற்றில் பாலை வார்த்திருக்கிறார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதை நீங்கள் பாராட்ட வேண்டாமா?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளிலே முதன்முறையாக குழப்பத்தை உருவாக்கியவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர் ஆட்சி செய்த கட்சிதான். பச்சை அட்டை, சிகப்பு அட்டை, மஞ்சள் அட்டை என்று,

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 மார்ச் 4

பல வகையான வண்ண, வண்ண அட்டைகளை நாட்டு மக்களிடத்திலே அறிமுகப்படுத்தி, குழப்பமான அந்தச் சூழ்நிலையை கடந்த ஆட்சியாளர்கள் உருவாக்கினார்கள். அதையெல்லாம் மாற்றியமைத்து, இப்போது சீராக, ஏழையெளிய மக்களுக்கு குடும்ப அட்டைகள் விநியோகிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டு, புதிதாக ஏழையெளிய மக்களுக்கு, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலேயும் இல்லாத வகையிலே சீராக, ஒரே சமயத்திலே 37 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்கின்ற நல்ல செய்தியைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) பல வகையாக வண்ண அட்டைகளையெல்லாம் ஒழித்து, இப்போது சீராக, நல்லபடியாக ஏழையெளிய மக்கள் உணவுப் பொருள் வாங்கத்தக்க வகையிலே சீரமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய அம்மா அவர்களின் சிறப்பான ஆணைகளின் மூலம் சீரமைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளிக்குள் உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவதெல்லாம், திடமான சிந்தனை என்று சொன்னால், குறைந்தபட்சம் ஒரு முடிவு எடுக்க வேண்டும். 2002-லே கூப்பன் சிஸ்டம் கொடுத்துவிட்டு, 2003-லே இல்லை என்றீர்கள். 'எச்' முத்திரை குத்த வேண்டுமென்று சொன்னீர்கள். 'எச்' முத்திரை கொடுத்துவிட்டு, நாடாளுமன்ற... (குறுக்கீடு) சார், கொஞ்சம் உட்காருங்கள் சார். தயவு செய்து எங்களைப் பேச விடுங்கள் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டதற்குப் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) குறுக்கீட்டிற்குத்தான் பதில் சொல்கிறார். கேட்டதற்குத்தான் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூப்பன் சிஸ்டத்தை நாங்கள் கொண்டு வந்தோம். அதைப் பிறகு எடுத்தோம். காரணம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே போலி குடும்ப அட்டைகள் ஏராளமாக, இலட்சக்கணக்காக வழங்கப்பட்டிருந்தன. அவற்றைக் கண்டறிந்து ஒழிப்பதற்காக, கூப்பன் சிஸ்டத்தைக் கொண்டு வந்தோம். அதற்குப் பிறகு, போலி குடும்ப அட்டைகள் ஒழிக்கப்பட்டதன் காரணமாக, போலி குடும்ப அட்டைகள், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே கொடுக்கப்பட்ட



2005 மார்ச் 4] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

போலி குடும்ப அட்டைகள் ஒழிக்கப்பட்ட காரணத்தினால், கூப்பன் சிஸ்டம் இப்போது தேவையில்லை என்று அதை எடுத்துவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

**டாக்டர் க. பொன்முடி:** 'எச்' முத்திரையை ஏன் குத்தினீர்கள், பிறகு ஏன் எடுத்தீர்கள்? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. உரையை முடியுங்கள் பொன்முடி.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அது ஒரு ஆளுகிற சர்க்காருடைய, அப்போதைக்கப்போது, நடைமுறையில் தேவையான நேரத்திலே எடுத்துக்கொள்ளக்கூடிய கொள்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** அதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆளும் சர்க்காருக்கு அப்போதைக்கப்போது ஏற்படுகிற மாதிரி மாற்றிக்கொள்கிற திட்டங்கள்தான் இருக்கிறதே தவிர, சரியாக இல்லை. அதேமாதிரி இப்போது புதிய ரேஷன் கார்டு. அதைப்போல மற்றொன்று; மதமாற்றத் தடைச் சட்டம். அந்த மதமாற்றத் தடைச் சட்டம் வருகிறபோதே சொன்னார்கள். ஆழ்ந்த சிந்தனையோடும், மிகுந்த எச்சரிக்கையோடும் இந்த அவசரச் சட்டத்தை, மதமாற்றத் தடைச் சட்டத்தை கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள்.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முடியுங்கள். (குறுக்கீடு) டாக்டர் குமாரதாஸ். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** முடிக்க போகிறேன் சார். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, என்னுடைய அனுமதி மறுக்கப்பட்டபிறகு பேசுவது அவைக்குறிப்பிலே ஏறாது. டாக்டர் குமாரதாஸ்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட சிந்தனை, நிரந்தரமான முடிவு இவற்றைப்பற்றியெல்லாம்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 மார்ச் 4

மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி பேசுகிறார். எங்களுக்கு திடமான சிந்தனை இல்லை என்கிறார். அடிக்கடி முடிவுகளை மாற்றுகிறோம் என்கிறார். அவர்களுடைய தலைமைக்கு எவ்வளவு திடமான சிந்தனை இருக்கிறது என்பதை இந்த நாடே அறியும் (மேசையைத் தட்டும் ஒலி) முதலில் பி.ஜே.பி.-ஐ பண்டாரங்கள், பரதேசிகள் என்று திட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பின்னர் அவர்களோடு சேர்ந்து ஆட்சியிலும் பங்கு கொண்டார்கள். பின்னர் அவர்களுக்கு வசதி ஏற்பட்டபோது மீண்டும் அவர்களைக் கழட்டிவிட்டு இப்போது காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து அங்கேயும் ஆட்சியில் பங்கு கொண்டிருக்கிறார்கள். இப்போது மீண்டும் பி.ஜே.பி.-ஐத் திட்டுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய திட சிந்தனையைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அதைப் பற்றி பேசாமல் இருப்பது நல்லது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு ஒரு நிமிடம்... *(குறுக்கீடுகள்)*

**திரு. இ. புகழேந்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பொன்முடியை பேசி முடிக்கவிடுங்கள்... *(குறுக்கீடுகள்)*

**திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே,.. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ். *(குறுக்கீடுகள்)* திரு. துரைமுருகன் உட்காருங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும். *(குறுக்கீடுகள்)* டாக்டர் குமாரதாஸ்

**டாக்டர் க. பொன்முடி:** சார், பேசி முடிக்கவிடுங்கள்..

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆண்டிற்கான.. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. பொன்முடி, நேரம் முடிந்துவிட்டது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நிதிநிலை அறிக்கையின்மீது உரையாற்றுகின்ற வாய்ப்பினைத் தந்த உங்களுக்கும். இங்கே உரையாற்றுவதற்காக.. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, கொடுத்த நேரம் முடிந்து விட்டது. *(குறுக்கீடுகள்)* அவர் முடிக்க மாட்டேன் என்கிறாரே?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தமிழகத்தினுடைய தங்கத் தாரகையாக... *(குறுக்கீடுகள்)*



2005 மார்ச் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடிக்க மாட்டேன் என்கிறாரே? *(குறுக்கீடுகள்)* திரு. பொன்முடி, ஒரு மணித்துளிதான்; ஒரு மணித்துளியிலே முடியுங்கள். *(குறுக்கீடுகள்)* குமாரதாஸ், உட்காருங்கள். திரு. பொன்முடி, நீங்கள் ஒரு மணித்துளியில் முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலில் வெற்றிகரமாக செயல்பட வேண்டுமென்றால், மக்களுடைய எண்ணங்களை அறிந்து, மக்களுடைய விருப்பங்களை அறிந்து செயல்பட வேண்டும். ஆகவே, அரசியல் என்றாலே adaptability, flexibility மிக மிகத் தேவை. அதாவது தேவைப்படும்போது முடிவுகளை மாற்றிக்கொள்ளக்கூடிய மனப்பக்குவமும், அந்தத் தன்மையும் இருந்தால்தான் வெற்றிகரமாக நிர்வகிக்க முடியும்; நிர்வாகம் நடத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடிந்துவிட்டது. நீங்கள் உட்காருங்கள். நீங்கள் கேட்டதற்கு பதில் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. துரைமுருகன் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பி.ஜே.பி.-ஐப் பண்டாரம் என்றார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஏற்கெனவே முடிந்துவிட்டது. குமாரதாஸ் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

**டாக்டர் க. பொன்முடி:** என்னை முடிக்கவிடுங்கள் சார்.. *(குறுக்கீடுகள்)*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது உரையாற்றுகின்ற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு எனது இதயங்கனிந்த நன்றியைச் சொல்லி *(குறுக்கீடுகள்)* இந்த நிதிநிலை அறிக்கையில் அதி.மு.க. சார்பாக என்னை உரையாற்றுவதற்காகப் பணித்த *(குறுக்கீடுகள்)* *(மணியடிக்கப்பெற்றது)*

**திரு. துரைமுருகன்:** ஒரேயொரு செகண்ட்..

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் குமாரதாஸ் கொஞ்சம் இருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பி.ஜேபி.-ஐப் பண்டாரம் என்றார்கள். பின்னர் அவர்களோடு சேர்ந்துகொண்டார்கள்; உங்களுடைய தலைவருடைய திடச்சிந்தனை தெரியும் என்கிறார். பி.ஜே.பி. ஆட்சி கவிழ்வதற்கு முன்னால் இங்கிருந்து சென்று அங்கே உட்கார்ந்து, திருமதி சோனியா காந்தியைப் பார்த்து நீங்கள் பிரதமராக இருங்கள் என்று நம்முடைய முதலமைச்சர் சொன்னார். பிறகு அவரையே பார்த்து, வெளிநாட்டுக்காரி, பதி பக்தி இல்லாதவர் என்று...(மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், திரு. குமாரதாஸ், திரு. குமாரதாஸ் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ். (குறுக்கீடு) திரு. குமாரதாஸ். குறுக்கீடுகள் இனிமேல் வாய்ப்பு இல்லை. திரு. குமாரதாஸ், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** சார், ஒரே ஒரு வரி சார். (குறுக்கீடு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டுக்கான (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. கடைசியாக திரு. துரைமுருகன் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (கூச்சல்-குழப்பம்) திரு. குமாரதாஸ், பேசுங்கள். (குறுக்கீடுகள்) முடியாது, முடியாது. குமாரதாஸ், பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது உரையாற்றுகின்ற வாய்ப்பினை நல்கிய எங்களது வணக்கத்திற்கும், போற்றுதலுக்கும் உரிய கழகத்தினுடைய பொதுச் செயலாளரும், தமிழக முதல்வருமான டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்களைக் கூறி, இந்த உரையின்மீது சில கருத்துகளை நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) இன்றையதினம், எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த... (குறுக்கீடு)

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் ஒரு வாதம் நடைபெறுகிறபோது,



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னால், அரசியல் தொடர்புடைய கருத்தைச் சொன்னால், அதே அரசியல் தொடர்புடைய இன்னொரு கருத்தை எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் சொல்வதற்கு நியாயமான உரிமை தர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது ஒரு கருத்து. திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள். அதுவும் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. அதுவும் ஒரு கருத்து. ஆகவே, இரண்டு கருத்தும் இடம்பெற்றால்தான் இந்த அவையிலே எதிர்க்கட்சி இருப்பதற்கு அர்த்தம் உண்டு. இரண்டு கருத்துகள் இடம்பெறாது, முதலமைச்சர் பேசிய கருத்து வரையிலேதான் இடம்பெறும் என்று சொன்னால், எதிர்க் கட்சியை நியாயமான உரிமையைப் பயன்படுத்த நீங்கள் அனுமதிக்கவில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னும்கூட தெளிவாக நான் சொல்கிறேன். நிலையான கொள்கை என்பது நிர்வாகத்தைப் பற்றித்தான். அரசியலிலே நிலையான கொள்கை ஆளும் கட்சிக்கும் கிடையாது, எதிர்க் கட்சிக்கும் கிடையாது, எந்தக் கட்சிக்கும் கிடையாது. நிலைமைகள் மாறுகிறபோது கட்சிகளின் கொள்கைகள் மாறும். நிலைமைகள் மாறுகிறபோது கூட்டணிகள் மாறும். கடந்த காலத்திலே ஆளும் கட்சியோடு கூட்டணியாக இருந்த பல கட்சித் தலைவர்கள் இப்போது எதிர்க் கட்சியோடு கூட்டணியிலே இருக்கிறார்கள். ஆகவே, கூட்டணிகள் மாறும். மாண்புமிகு முதலமைச்சரும் தன்னுடைய கூட்டணியை மாற்றிக்கொண்டிருக்கிறார். அதேபோல எதிர்க் கட்சியிலே உள்ள நாங்களும் மாற்றிக்கொண்டிருக்கிறோம். இந்தக் கூட்டணி மாறுவதற்கு அவ்வப்போது சில காரணங்கள் இருக்கின்றன. அது அரசியல். ஆனால், அந்த அரசியலிலே முதலமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலுக்கு, எதிர்க் கட்சியிலே உள்ள துணைத் தலைவர் பதில் சொன்னால் அந்த பதிலும் குறிப்பேட்டில் இடம்பெற வேண்டும். அந்த பதில் சரியா,, தவறா என்பதைப் பொதுமக்கள் தீர்மானிப்பார்கள்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன பதில் அவைக்குறிப்பில் இடம் பெறுகிறது. இது போதுமானது. டாக்டர் குமாரதாஸ், பேசுங்கள் (குறுக்கீடுகள்) குமாரதாஸ், பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு முன்னாலே உரையாற்றிய.. (குறுக்கீடு)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற வாதத்திலே எதுவும் முறையற்ற பேச்சு அல்ல. முறையாக நடைபெற்ற எந்தப் பேச்சையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நீக்குவது மாண்புமிகு பேரவைத் தலைவருடைய பொறுப்புக்கு, கண்ணியத்திற்கு ஏற்றது அல்ல. திரு. துரைமுருகன் பேசிய வார்த்தைகள் நியாயமான வார்த்தைகள். அது உண்மையா அல்லவா என்பதை பொதுமக்கள் தீர்மானிக்கட்டும். அதற்கு அனுமதி கிடையாது என்று சொன்னால், எங்களுக்கு இந்த அவையிலே பேச அனுமதி இல்லை என்றுதான் தாங்கள் சொல்வதாக நான் கருதுகிறேன். தங்களுடைய முடிவை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது முழுமையாக அவைக் குறிப்பிலே இப்பொழுது ஏறியிருக்கிறது. தாங்கள் சொன்ன பதிலும் ஏறியிருக்கிறது. ஆகவே, இதுவே போதும். முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு தாங்கள் சொன்ன பதிலை அவைக் குறிப்பிலே ஏற்றிக்கொள்கிறேன். அவ்வளவுதான். டாக்டர் குமாரதாஸ். (குறுக்கீடு)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னது, கடந்த காலத்தில் பாரதிய ஜனதா கட்சியைக் கண்டித்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அதே பாரதிய ஜனதா கட்சியோடு கூட்டணி சேர்ந்தார் என்று சொன்னார். அப்படி நாங்கள் சேர்ந்தது உண்மைதான். ஆனால், கண்டிக்கிறபோது இருந்த காரணங்கள் சேருகிறபோது இல்லை. அந்த விளக்கங்களை அந்தந்தக் கட்சிகள்தான் சொல்ல முடியும். அவர்கள் மக்களிடத்திலே அந்த விளக்கங்களைச் சொல்லித்தான் கூட்டணியை அமைக்கிறார்கள். அதே இலக்கணம் முதலமைச்சருக்கும் பொருந்தும். அ.இ.அ.தி.மு.க. கட்சி எந்தக் கட்சியோடும் கூட்டணி அமைத்து சேர்ந்தால் நிரந்தரமாக அவர்களோடு இருந்தார்களா? பலமுறை மாறவில்லையா? மாறுவதற்குக் காரணம் இல்லையா? ஆகவே, இப்படி அரசியலிலே மாறுவது என்பது வேறு. ஆனால், நிர்வாகத்திலே நிலையான கொள்கை இல்லாமல் அடிக்கடி நிர்வாகக் கொள்கையை மாற்றுவோமேயானால், அதனால் ஏற்படுகிற பாதிப்பு பொதுமக்களைத்தான் அடையும்.

*பிற்பகல் 12-20*

அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகிறபோது, சாதாரண ரேஷன் அட்டைகளை எத்தனை முறை மாற்றினீர்கள் என்று கேட்டார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பலபேர் பொய்யான அல்லது உண்மை அல்லாத கார்டுகள்



வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டை இங்கே அமைச்சர் சொன்னார். அந்தக் குற்றச்சாட்டை நாங்களே அறிந்துதான் அந்த நிலைமையை மாற்றுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சி நடைபெறுகிறபோது ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அந்தக் குற்றச்சாட்டு உண்மை அல்ல என்று சொல்லவில்லை. ஏறத்தாழ இலட்சக்கணக்கான கார்டுகள் பொய்யாக வழங்கப்பட்டிருந்தன. அங்கங்கே கடைகளிலே பலபேர் பதிவு செய்துகொண்டோ, செய்துகொள்ளாமலோ பல தவறுகள் நடைபெற்றதைக் களைவதற்கான முயற்சியில் ஈடுபட்டபோதுதான் ஆட்சி மாறிவிட்டது. அந்த நேரத்திலே ஆட்சிக்கு வருகிறவர்கள், அடுத்து அந்தப் பொறுப்பைச் செம்மையாக நிறைவேற்றக் கடமைப்பட்டவர்கள். ஆனால், அதிலே எத்தனை முறை மாற்றம் ஏற்பட்டது? ரேஷன் கார்டுகள் பற்றி இன்றைக்குக்கூட 30 ஆம் தேதி வரையில்தான் ரேஷன் கார்டு மாற்றலாம், 1 ஆம் தேதி வரையிலே புதுப்பிக்கலாம், 6 ஆம் தேதி வரையிலே புதுப்பிக்கலாம் என்று எத்தனை முறை மாற்றி மாற்றி அறிவித்ததால் பொதுமக்கள் எவ்வளவு திண்டாடுகிறார்கள்? ஆகவே, நான் சொல்வது நிர்வாகத்தில் ஏற்படுகிற தடுமாற்றங்கள். அதைக்கூட நீங்கள் இயற்கை என்று சொல்லுங்கள். ஆனால், நிர்வாகத்திலே ஏற்படுகிற தடுமாற்றத்திற்குப் பதிலாக அரசியலிலே ஏற்பட்ட மாற்றத்தைப் பதிலாகச் சொன்னார்கள். அதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக துரைமுருகன் சொன்ன பதில் இந்த அவைக் குறிப்பிலே இடம் பெறவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இடம்பெறாது என்று சொன்னால் நாங்கள் இந்த அவையிலே இருக்க மாட்டோம், வெளியேறுவோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலே இடம்பெறும். டாக்டர் குமாரதாஸ். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். குமாரதாஸ், பேசுங்கள், பேசுங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்கள் ஒருபக்க முடிவாக, ஒரே முடிவை சொல்கிற காரணத்தால் நாங்கள் வெளியேறுகிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கைக்குச் செல்வதற்கு முன்பாக (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவரவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ் பேசுகிறார்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய பொன்முடி அவர்கள் இங்கே பேசுகிறபோது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நம்முடைய அவைத் தலைவர் அவர்கள், தொடர்ந்து அடிக்கடி நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எதிர்க் கட்சிகள் உண்மையான கருத்தை, நல்ல கருத்துகளை, நியாயமான கருத்துகளை வலியுறுத்திப் பேசினாலும்கூட, ஆளுங்கட்சிக்கு எதிர் என்ற காரணத்தாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது ஒலிபெருக்கியிலே பேசுவதற்கு நான் அனுமதி கொடுத்துதான் நீங்கள் பேசுகிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. தொடர்ந்து இப்படி நீக்குவதனாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைத் தலைவர் மேலே குற்றம் சொல்லாதீர்கள். உங்களுக்கு இப்போது நான் அனுமதி கொடுத்துதான் நீங்கள் பேசுகிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதைத்தான் சொல்ல வருகிறேன். அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறீர்கள். மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் சொன்னது நியாயமான கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது நியாயமான கருத்து ஒன்றும் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** அப்படி நீக்கப்படுவதால், பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே அதைக் கண்டித்து நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

*[பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் (திருமதி வி. சிவகாமி தவிர) வெளிநடப்புச் செய்தனர்.]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ், பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஆக, இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகிறபோது, நமது அரசு வேலைவாய்ப்பைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை என்றும் இந்த



அரசு இளைஞர்கள்பால் நாட்டம்கொள்ளவில்லை என்றும் சொன்னார்கள். அவர் பக்கத்தினுடைய எண்ணிக்கையைச் சொன்னார், ஆனால், பக்கங்களைப் புரட்டிப் பார்த்து அவற்றிற்குள் செல்லவில்லை என்று கருதுகிறேன்.

2004 ஆம் ஆண்டு, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருந்தவர்களுடைய எண்ணிக்கை 48 இலட்சம். ஆனால், 2005 என்று வருகிறபோது பதிவு செய்யப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 41 இலட்சம். ஆகவே, இந்த ஓராண்டு காலத்திற்குள் அம்மா அவர்களுடைய அரசு 7 இலட்சம் இளைஞர்களுக்கு தமிழகத்திலே வேலைவாய்ப்பினை வழங்கி இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் படிக்கத் தவறியது ஏனோ என்பது புரியவில்லை.

அதுபோல மிக வேகமாக வருத்தப்பட்டுக் கொண்டார்; தமிழைப் பற்றி 96 ஆம் பக்கத்தில் திருத்தப்படவில்லை என்கிற ஒரு குறையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்பால் சொன்னார். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இன்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்து, இந்தப் பேரவையிலே குறிப்பில் இருக்கக்கூடாது என்று சொன்னது சரி அல்ல; அதைத் திரும்பப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப் பரிசீலிப்பதற்கு, அதை ஏற்றுக்கொள்வதற்கு மறுப்பதாக இருந்தால் நாங்களும் வெளியேறுவோம்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், எதிர்க் கட்சித் தலைவர் பேசியது அவ்வளவும் அவைக்குறிப்பில் இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் பேசியது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கட்சித் தலைவர் சொன்ன பதில் அவ்வளவும் அவைக்குறிப்பிலே எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன பதில் அவ்வளவும் அவைக்குறிப்பிலே இருக்கிறது. அவர் அரசியல் ரீதியாகச் சொன்னது எல்லாமே அவைக்குறிப்பில் இருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது இருக்கிறது. எதிர்க் கட்சித் துணைத் தலைவர் சொன்னது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஹேமச்சந்திரன், போகிற போக்கிலே வார்த்தைகளை வீசுவது என்பது முறையற்றது. திரு. துரைமுருகன் பேசியது அத்தகைய வார்த்தைகள். ஆகவேதான் அவையெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன. கண்ணியமாக எழுந்து சொல்ல வேண்டிய பதிலைச் சொல்வதிலே எந்தத் தவறும் இல்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஓர் அரசியல் கருத்தை முதல்வர் அவர்கள் சொல்லி, அந்த அரசியல் கருத்துக்குப் பதில் சொல்வதற்கு எதிர்க் கட்சிகளுக்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் இருப்பது என்பது சரியல்ல.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை மேலும், மேலும் பெரிதாக்கிக் கொண்டே போவதை நாங்கள் விரும்பவில்லை. கடந்த தேர்தலின்போது நான் என்ன சொன்னேன் என்பது அனைவருக்கும் தெரியும். அதை எந்தக் காலத்திலும் நான் மறுக்கவில்லை. ஆகவே, இப்போது, சற்று முன்பு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசியதைத் தாங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்குவதாக அறிவித்தீர்கள். அதை மீண்டும் அவைக்குறிப்பில் சேர்க்குமாறு, உத்தரவிடுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் சொன்னது அவைக்குறிப்பிலே ஏற்றப்படுகிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தன்மையோடு எதிர்க் கட்சிகள் எது சொன்னாலும், அதை அவைக்குறிப்பிலே ஏற்றவேண்டுமென்று ஜனநாயக ரீதியோடு இந்தச் சபையை நடத்தி வருகிற எங்களது டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதயம் கனிந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் கூறிக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, இங்கே பேசிய மரியாதைக்குரிய உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகிறபொழுது தமிழைப்பற்றி ரொம்ப வருத்தப்பட்டார். ஐய்யய்யோ, தமிழ் எழுத்தில் இவ்வளவு பிழை வந்துவிட்டதே என்று! நான் அந்த நண்பருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சுமார் 2,3 தினங்களுக்கு முன்பாக அவர்களுடைய குடும்பத் தொலைக்காட்சி ஒன்றை எதிர்பாராதவிதமாகப் பார்க்கின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அதிலே ஒரு கேள்வி கேட்கிறார்கள். என்ன கேள்வி என்று சொன்னால், காங்கிரஸ் கட்சி நண்பர்கள் கூட்டணி மந்திரி சபை அமைக்க வேண்டுமென்று



சொல்கிறார்களே, அதற்கு உங்களுக்கு உடன்பாடா என்று கேட்கிறார்கள். அதற்கு, அந்தக் கழகத்தினுடைய தலைவர் சொல்கிற பதில் என்ன தெரியுமா? இந்த State-ல் அது applicable ஆகாது என்று. இந்த State-க்கு அது applicable ஆகாது. ஆக, நாலு வார்த்தைகள் சொல்கிறபோது அதிலே இரண்டு ஆங்கில வார்த்தைகளைச் சேர்த்துச் சொல்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கு, இன்றைக்கு ஓர் எழுத்துப் பிழை வந்துவிட்டதை பெரிய வேதனையான செய்தியாகச் சொல்கிறார்கள் என்று சொன்னால், இவர்கள் வெளியே நடத்துகிற நாடகத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்னுமொன்றைச் சொன்னார்கள். திடச் சிந்தனை வேண்டுமென்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இன்றைக்கு மத்தியிலே நிதியமைச்சராக இருக்கிற மரியாதைக்குரிய சிதம்பரம் அவர்களைப் பார்த்து, இந்தக் கருணாநிதி என்ன சொன்னார் தெரியுமா? 'சின்னப் பையன் சிதம்பரம்' என்று சொன்னார். அன்றைக்குத் திட புத்தியோடுதான் சொன்னாரா? ஆக, இப்படிக் கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு நான் பதில் சொல்லிவிட்டேன்.

இனி, 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது எங்களுடைய புரட்சித் தலைவி 6 கோடி மக்களுடைய தலைவி, தங்கத் தாரகை (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க அமைக்கபட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கைக்குள் நான் செல்ல விரும்புகிறேன். நான் இப்போது 19-வது பட்ஜெட் கூட்டத்திலே கலந்துகொள்கிறேன். என்னைப் பொறுத்தவரைக்கும் 19 ஆண்டு காலமாக சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறேன். இது எனக்கு 19-வது ஆண்டு. இந்த 19 ஆண்டு கால வரலாற்றிலே, ஒரு வரி கூட இல்லாமல் ஒரு பட்ஜெட் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழக அரசினுடைய வரலாற்றிலே முதல்முறை என்று நான் கூறிக்கொள்வதிலே பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இந்த பட்ஜெட்டினுடைய கருத்து, தத்துவம் எப்படி இருக்கிறது என்று கேட்கிறபொழுது, இது விவசாயிகளுக்காக, தொழிலாளர்களுக்காக, வியாபாரிகளுக்காக, எல்லாத் தரப்பு மக்களும் ஏற்றுக்கொள்கின்ற விதத்திலே அளிக்கப்பட்டிருக்கிற ஒரு நிதிநிலை அறிக்கை. இது ஏழைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு மலர்க் கொத்து என்று அம்மா அவர்கள் சொன்னார்கள். இது உண்மையான, மணம் வீசுகிற ஒரு

மலர்க் கொத்து. காகிதப் பூ கதாநாயகர்களைப் போல, காகிதப் பூ மலர்க் கொத்து அல்ல (மேசையைத் தட்டும் ஒலி) இது என்பதை நாடு உணர்ந்து கொள்ளவேண்டும்.

*பிற்பகல் 12-30*

அது மட்டுமல்ல, அம்மா அவர்களைப் பற்றி மற்றவர்கள் என்ன சொன்னாலும் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் கிடையாது. அம்மா அவர்கள் ஒரு தங்கத் தாரகை. யார் சொல்வது? தமிழ்நாட்டுக்காரன் அல்ல, இந்தியன் அல்ல, உலக நாடுகள் வந்து சொல்கின்றன, நீங்கள் தங்கத் தாரகை என்று. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதைக்கண்டு பொறாமைப்படுகின்ற சில தகர டப்பாக்கள் இப்படி கிடந்து அல்லோலகல்லோலப்படுவதைக் கண்டு வேதனைப்பட வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு எங்கள் பகுதியிலே வயதானவர்களை, அதாவது தாத்தா, பாட்டி என்று சொன்னால், அவர்களை கண்ணம்மா என்று சொல்வார்கள். கண்ணம்மா என்று சொன்னால் பாட்டியைக் குறிக்கும். கன்னையா என்று சொன்னால் தாத்தாவைக் குறிக்கும். ஆக இன்றைக்கு பொழுது போகாத அரசியல்வாதிகள், கண்ணம்மா என்று கதை எழுதிக்கொண்டிருக்கின்ற கன்னையாக்களுக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இந்த நாட்டிலே இல்லை என்பது மக்களுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இன்றைக்கு அம்மா அவர்களைப் பற்றி ஏதோ உலக நாடுகள் மாத்திரம் சொல்கின்றன என்று நீங்கள் கருதிவிட வேண்டாம். நம்முடைய நாட்டிலே ரோட்டரி சங்கம் இருக்கிறது. 164 நாடுகளிலே இந்த ரோட்டரி சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த 164 நாடுகளிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற ரோட்டரி சங்கங்களின் சார்பில் 100-வது ஆண்டை நிறைவுபடுத்துகின்ற விதத்திலே அம்மா அவர்களுக்கு ஆயுட்கால சாதனையாளர் விருது வழங்குகிறார்கள். ஆயுட்கால சாதனையாளர் விருது வழங்கப்படுகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நான் பேசியது இந்த அவைக் குறிப்பிலே இருக்கலாம் என்று எடுத்துச் சொன்னதை, தாங்கள் ஏற்றுக்கொண்டு அதை அவைக் குறிப்பிலே ஏற்றியமைக்காக, அதாவது முன் இருந்த



நிலை மாறியதற்காக தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்போதும் இருக்கிற நிலைதான் அது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதேபோல இன்றைக்கு தமிழகத்தினுடைய திரையுலகை வாழ வைத்து, இலட்சக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான நடிகர், நடிகைகள் ஒட்டுமொத்தமாக, அம்மா, அம்மா, அம்மா, எங்களை வாழவைத்த தெய்வம் நீங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) திருட்டு வி.சி.டி.-யை ஒழித்து, திருட்டுத்தனமாக நடந்த தொழிலை ஒழித்து பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களை, சினிமாத் துறையில் அவர்களை வாழ வைத்ததற்காக வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, இன்றைக்கு மழைநீர் சேகரிப்புத் திட்டம். இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின்மூலம் எவ்வளவு நிலத்தடி நீரின் தன்மை உயர்ந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆக இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன.

அடுத்து சட்டம். சட்டத்தின் முன்பு அனைவரும் சமம். நம்முடைய மறைந்த முதலமைச்சர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள்

"ஒரு தவறு செய்தால்,

அதைத் தெரிந்து செய்தால்

அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்"

என்று சொன்னார். ஆனால், நமது டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

"ஒரு தவறு செய்தால்,

அதைத் தெரிந்து செய்தால்

அவன் தேவாதி தேவனாக இருந்தாலும்

விடமாட்டேன்" என்று சொல்லி சட்டத்தினுடைய ஆட்சியை நிலைப்படுத்தி, இன்றைக்கு அனைத்துத் தரப்பு மக்களுடைய அன்பையும், ஆதரவையும் அம்மா அவர்கள், சாதி, மதம், இன உணர்வுகளைக் கடந்து அனைவரையும் சமமாகப் பார்க்கின்ற ஒரு மனித தெய்வமாக இன்றைக்கு உங்களை அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [2005 மார்ச் 4

அதேபோல, இதற்கு முன்பு ஓர் அரசு இருந்தது. அந்த அரசினுடைய முதலமைச்சர் காவல் துறைக்குத் தலைவராக இருந்தார். அந்தக் காவல் துறைக்கு அவர் தலைவராக இருந்தபோது என்ன சொன்னார் தெரியுமா பொறுப்பேற்றவுடன்? தமிழகத்தினுடைய காவல் துறையின் ஈரல் 75 சதவிகிதம் கெட்டுப் போயிற்று. புரையோடிவிட்டது; இனி தமிழகத்தினுடைய காவல் துறையை, காப்பாற்ற முடியாது என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தார். அவர் அங்கலாய்த்து, ஐந்தாண்டுகள் முதலமைச்சராக இருந்து போன பிறகு — மீண்டும் ஐந்தாண்டுகள் இருந்தால், எவ்வளவு கெட்டுப் போயிருக்கும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். ஆக, அந்தக் காவல் துறையை கையிலே எடுத்து, அந்தக் காவல் துறையை வைத்து, அந்தக் காவல் துறைக்கு ஈடு இணையாக இந்தியாவில் காவல் துறையே இல்லை என்று நிலைநாட்டுகின்ற ஒரு சூழ்நிலையை தமிழகத்திலே ஆட்சி செய்யும், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தெந்தக் கோணங்களில் நீங்கள் பார்ப்பீர்கள் என்று சொன்னால், இன்றைக்கு வீரப்பனை ஒழித்தது; அம்மா அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியைப் பார்த்து கொக்கரித்தார்கள்; ஏதோ, வீரப்பனை இவர்கள் எங்கே பிடிக்கப் போகிறார்கள், அந்த ஈரல் கெட்டுப் போயிற்று என்று சொன்னார்களே, அதே காவல் துறையை வைத்து, அன்றைக்கு உலகளாவிய அளவிலே இந்திய இராணுவம் வந்தது; வீரப்பனைப் பிடிக்க வந்தது; முடியாது என்று புறமுதுகிட்டுச் சென்றது. இருந்தாலும் நம்முடைய காவல் துறையினரை வைத்து அம்மா முடுக்கிவிட்டு, இன்றைக்கு வீரப்பனை ஒழித்திருக்கிறார்.

பிற்பகல் 12-35

அதுமாத்திரமல்ல. கடந்த நான்கு ஆண்டுகளிலே தமிழகத்தில் எந்த மூலை முடுக்கிலும் ஒரு ஜாதிக் கலவரமோ, இனக் கலவரமோ, மொழிக் கலவரமோ ஏற்பட்டிருக்கிறதா என்று சொன்னால், ஒன்றுகூட தேறுவதற்கு இல்லாத ஒரு தூய ஆட்சி சூழ்நிலை தமிழகத்தில் இருக்கிறது. இப்படி இந்தக் காவல் துறையை வைத்து மிக நேர்த்தியாக, அழகாக சட்டம்-ஒழுங்கைப் பராமரித்து, தமிழகத்து மக்கள் நிம்மதியாக வாழ்கின்ற ஒரு சூழ்நிலையினைத் தமிழகத்திற்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள், நம்முடைய வணக்கத்திற்கும், போற்றுதலுக்கும் உரிய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2005 மார்ச் 4] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அதேபோல, 1991-1996 ஆம் ஆண்டுகளிலே நமது அரசு ஆட்சி செய்து, வெற்றி வாய்ப்பினை இழக்கிற சூழ்நிலையிலே, நம்முடைய அரசு 1,255 கோடி ரூபாயைக் கடனாக விட்டுச் சென்றது. ஆனால், அதற்குப் பிறகு, 1996-லிருந்து 2000 வரைக்கும் ஆட்சி செய்த திராவிட முன்னேற்றக் கழகம், 5,781 கோடி ரூபாயைக் கடனாக வைத்து, பற்றாக்குறையாக வைத்து— 5,781 கோடி ரூபாயைப் பற்றாக்குறையாக வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதிலிருந்து மீளுவதற்கு அம்மா எடுத்திருக்கிற முயற்சிகள்— அந்தக் கடன்களை எல்லாம் அடைத்து, நாட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்து, குறைவில்லாத வளம் மிக்க ஓர் ஆட்சியைத் தந்து எல்லோருடைய இதயத்திலும் டாக்டர் புரட்சித் தலைவி, புரட்சித் தலைவி, புரட்சித் தலைவி என்று சொல்கின்ற ஒரு பாங்கினை ஏற்படுத்தி, இன்றைக்கு தமிழகம் முழுவதும் மக்கள் ஒட்டுமொத்தமாக மலர்க் கொத்தினை அம்மா அவர்கள் கையிலே கொடுப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனையாக இருந்துகொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. சுனாமி என்கின்ற பேரலை காரணமாக தமிழகத்திலே, 8,018 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். இலட்சக் கணக்கானவர்கள் வீடிழந்திருக்கிறார்கள். இலட்சக்கணக்கானவர்கள் முழு உடைமைகளை — கட்டுமரம், வலை, வள்ளம், படகு — போன்றவற்றை ஒட்டுமொத்தமாக இழந்திருக்கிறார்கள். ஆனால், அம்மா என்ன நினைக்கிறார்? இந்த நிகழ்ச்சி 26 ஆம் தேதி நடக்கிறது. 26, ஆம் தேதி இங்கே சென்னையிலே பார்வையிட்டார்கள். 27 ஆம் தேதி காலையிலே நாகர்கோவிலுக்கு வருகிறார்கள். உண்மையிலேயே அம்மா அவர்கள் வருகின்றபோது நாங்கள் அங்கே நிற்கிறோம். அந்த முகம் களையிழந்து, சோகமாகி, கண்களிலே கண்ணீர் வடிகின்ற நிலையிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியிலே வந்து நின்றபோது, எல்லோரும் அதைவிட வேதனையடைகின்ற ஒரு சூழ்நிலை. வருகிறார்கள். நான் உங்கள் சகோதரி வருகை தந்திருக்கிறேன். உங்களுக்கு எந்தவிதமான குறையும் இல்லாமல் நான் பார்த்துக்கொள்கிறேன் என்ற வார்த்தையை (மேசையைத் தட்டும் ஒலி) எப்போது அவர்கள் மத்தியிலே சொன்னார்களோ, அவர்கள் மத்தியிலே மீண்டும் ஒரு தன்னம்பிக்கை, நாம் வாழ்வோம், வளர்வோம், நம்மை வாழ வைப்பார்கள் என்கிற எண்ணம் உருவானது.

அதே நேரத்திலே, சில தலைவர்கள், படுத்துக்கொண்டே அறிக்கைகளை விட்டு காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. ஒரு வாரத்தில்-இரண்டு தினங்களில்-27 ஆம் தேதி வருகிறார்கள், பார்வையிடுகிறார்கள்; 30 ஆம் தேதி மீண்டும் வருகிறார்கள்; பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக உதவி. ஆக, ஓர் இன்னல் தமிழகத்தினுடைய மக்களுக்கு எந்தப் பகுதியிலே ஏற்பட்டாலும் ஓடி வந்து உதவுகிற கரங்களுக்குச் சொந்தக்காரர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாத்திரமாகத்தான் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விதத்திலே அவர்கள் வந்தார்கள், சொன்னார்கள் என்பது மட்டுமல்ல; பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு—கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக நான்கு தாலுகாக்கள் உண்டு—அதிலே விளவங்கோடு, கல்குளம், அகஸ்தீஸ்வரம், தோவாளை நான்கு தாலுகாக்கள். தோவாளை தாலுகாவும், அகஸ்தீஸ்வரம் தாலுகாவும் பாதிக்கப்பட்டது; கல்குளம் அதிகமாகப் பாதிக்கப்பட்டது. விளவங்கோடு தாலுகா அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. ஆனால், பாதிக்கப்பட்டிருக்கிற கடற்கரை கிராமங்கள் ஒட்டுமொத்தமாக, ஒட்டுமொத்த மக்களுக்கு, அத்தனைப் பேருக்கும் நிவாரண உதவி வழங்கி-ஐயாயிரம் ரூபாய் முழுமையாக வீடிழந்தவர்களுக்கு, சொன்னபடி வழங்கப்பட்டது மட்டுமல்ல, தொழிலுக்குப் போக முடியாதவர்களுக்கு, மூவாயிரம் ரூபாய், அப்படி அத்தனை பேரும் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்தச் சூழ்நிலையிலே, பாதிக்கப்பட்ட மக்கள் 100 சதவீதம் பேரும் அம்மாவை வாழ்த்திக் கொண்டிருக்கிற காலகட்டத்திலே, அரசியல் காரணத்திற்காக சில குள்ளநரிக் கூட்டம் எங்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை, கிடைக்கவில்லை, கிடைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, யதார்த்தமான உண்மை, கடற்கரைப் பகுதியிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு அம்மா அறிவித்த சலுகைகள் ஒட்டுமொத்தமாகச் சென்றடைந்திருக்கின்றன; அங்கொன்றும் இங்கொன்றும் விடுபட்டிருக்கலாமே தவிர, ஒட்டுமொத்தமாக மக்கள் நிறைவாக வாழ்கிறார்கள். ஆனால், இன்னும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டும். அது கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-40*

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். மத்தியிலே இருக்கக்கூடிய சர்க்கார் 1726.72 கோடி ரூபாயை நமக்குத் தருவதாகச் சொன்னார்கள். உலக நாடுகள் நமக்கு உதவி செய்வதற்கு முன் வந்தார்கள். வேண்டாம்; எங்கள் நாட்டை நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்று



சொன்னார்கள். நமக்கும் சந்தோஷமாக இருந்தது. பரவாயில்லை, நாம் பிரதமரிடம் கேட்கவில்லை, தந்துவிடுவார்கள், மக்களுடைய குறைகள் தீர்ந்துவிடும் என்றிருந்தோம். ஆனால், இதுவரைக்கும் அவர்கள் சொன்னதிலே செய்தது வெறும் 250 கோடி ரூபாயை வழங்கி இருக்கிறார்கள். ஆனால், நமது அம்மா அவர்கள் பெரும் பிரச்சினைகளுக்கிடையில் இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காக 895.18 கோடி ரூபாயை செலவு செய்திருக்கிறார்கள். மரியாதைக்குரிய சிதம்பரம் அவர்கள் நிதியமைச்சர் ஒரு நாணயமிக்கவர், சொன்னதைச் செய்வார் என்று எதிர்பார்த்தால் அவர் சேர்ந்திருக்கின்ற கூட்டம் அப்படி மாற்றிவிட்டதோ என்னவோ தெரியவில்லை. அவர் நாணயத்தை இழந்து, நா நயமிக்கவராக இருக்கிறாரே தவிர, நாணயமிக்கவராக இல்லை என்பது வேதனைக்குரிய ஒன்றாகிவிட்டது. சொன்னபடி அந்தப் பணத்தை..

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** On a Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே உறுப்பினராக இல்லாத ஒருவரைப் பற்றி இதுபோன்று விமர்சிப்பது சரியல்ல. நாணயமில்லாதவர் என்று சொல்வது நிச்சயமாக unparliamentary. அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தரவில்லை, அதுதான் நாணயம் இல்லை. வேறு என்ன? சொன்ன பணத்தைக் கொடுக்கவில்லை. இது என்ன unparliamentary word-ஆ? It is not unparliamentary.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லாத ஒருவரைப் பற்றி விமர்சனம் செய்வது தவறு; ஒன்று. இரண்டாவது நாணயமில்லாதவர் என்று சொல்வது, அவர் நாணயமற்ற நபர் என்று சொல்வது சரியல்ல. அது Parliamentary ஆகாது. நிச்சயமாகச் சொல்லக்கூடாது. அவைக்குறிப்பிலிருந்து அதை அகற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் தனிப்பட்ட முறையிலே சொல்லவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தனிப்பட்ட முறையில் பெயர் சொல்லி, சிதம்பரம் என்று பெயர் சொல்லி சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நிதியமைச்சர் என்கிற முறையிலே (குறுக்கீடு) நிதியமைச்சர் என்ற முறையில் அவர்..

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நிதியமைச்சர் சிதம்பரம் என்றே வைத்துக்கொள்ளுங்கள். நிதியமைச்சர் சிதம்பரம்தான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயரைக் குறிப்பிடுவது என்பதல்ல.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தனிப்பட்ட முறையில்தான் அவர் சொன்னார். அதனால் அதை நீக்கியாக வேண்டும். அது முறையல்ல. (குறுக்கீடு) முறையல்ல.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசுகின்றபோது மத்திய நிதியமைச்சரைக் குறிப்பிட்டு, அவர் மத்திய நிதியமைச்சர் என்ற முறையில் இந்த மாநிலத்திற்கு இவ்வளவு நிதி வழங்கப்படும் என்பதை அறிவித்து, பின்னர் அந்த நிதி வழங்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டார். அதனால் நாணயமில்லாதவர் என்றார். அதில் எந்தத் தவறும் இல்லை. It is certainly not unparliamentary. தனிப்பட்ட அவருடைய குணாதிசயங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடவில்லை. மத்திய நிதியமைச்சர் என்ற முறையில் மாநிலத்திற்கு அறிவிக்கப்பட்ட நிதியை அவர் வழங்கவில்லை என்றுதான் சொன்னார். அது உண்மை. அதில் எந்தத் தவறும் இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதேபோல, மாண்புமிகு..

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் குறிப்பிட்டு, (குறுக்கீடுகள்) பெயர் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார். நாணயம் இல்லாதவர் என்று சொன்னார். -parliamentary-யா அது? (குறுக்கீடுகள்) It is not parliamentary.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயர் என்றால், அவர் மேலே தனிப்பட்ட காழ்ப்பில் அல்ல.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது unparliamentary.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் என்ற முறையிலே அவர் சொன்னதைச் செய்யவில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாணயமில்லாதவர் என்று சொல்வது unparliamentary.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I wish to reiterate, we are not discussing the personal character of the Union Finance Minister. மத்திய நிதியமைச்சரின் தனிப்பட்ட குணாதிசயங்களைப் பற்றி இங்கே யாரும் விவாதிக்கவில்லை. அவர் மத்திய நிதியமைச்சர் என்ற முறையில் மாநிலத்திற்கு அறிவித்த நிதியை வழங்கவில்லை என்றுதான் குறிப்பிட்டார். அதில் எந்தத் தவறும் இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வழங்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தால் நான் சொல்லமாட்டேன். ஆனால், நாணயமில்லாதவர் என்று சொன்னார். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அது வார்த்தை சொல்லாடலே தவிர, வார்த்தை ஜாலமே தவிர, அது உண்மை அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் என்ற முறையிலே அவர் அறிவித்ததை வழங்கவில்லை என்று குறிப்பிட்டுச் சொல்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது வெறும் சொல்லாடல், இது வெறும் வார்த்தை ஜாலமே தவிர உண்மை அல்ல. நாணயமில்லாதவர் என்று சொல்வது நிச்சயமாகப் பாராளுமன்ற நடைமுறைக்கு ஒவ்வாதது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு டாக்டர் குமாரதாஸ் அவர்கள் தனிப்பட்ட முறையிலே சிதம்பரத்தைப் பற்றி அப்படிக் குறிப்பிடவில்லை. மத்திய நிதியமைச்சர் என்ற முறையில் அவர் அறிவித்த தொகையை வழங்கவில்லை என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறார். ஆக அதில் ஒன்றும் unparliamentary இல்லை. டாக்டர் குமாரதாஸ் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தனிப்பட்ட முறையில் நாணயமில்லாதவர் என்று சொன்னார்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய நிதியமைச்சர் குறிப்பிட்டது போல, நாணயம் நமக்கு வழங்கவில்லை. அதனாலே நாணயம் இல்லை என்று சொன்னேன். அதில் தவறு என்ன இருக்கிறது என்றே புரியவில்லை. கொடுக்கிறேன் என்று சொன்ன நாணயத்தை ஏன் கொடுக்கவில்லை? அதுதான் நாணயம் இல்லை என்று சொன்னேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் தனிப்பட்ட முறையிலே சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் என்ற முறையிலே, அவர் அறிவித்ததை வழங்கவில்லை என்றுதான் சொல்கிறார். டாக்டர் குமாரதாஸ்.

*பிற்பகல் 12-45*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக இந்த... (குறுக்கீடுகள்).

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதில் இரண்டு stand இருக்கிறது. ஒரு stand-தான் நான் முதலில் சொன்னேன். (குறுக்கீடு) அவைக்குறிப்பிலிருந்து அதை நீக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது கூறியது, தமிழகத்திற்கு வழங்குவதாக தமது நாவினால் கூறியதை நிதி அமைச்சர் நிறைவேற்றவில்லை. அதில் நாணயம் தவறிவிட்டார் என்று அவருடைய பணிக்குத்தான் சொன்னார். அந்தப் பொருளோடுதான் அவர் சொன்னாரேயொழிய வேறில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தனிப்பட்ட முறையில் அவர்மீது குற்றச்சாட்டு கூறவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி., நான் சொல்லிவிடுகிறேன். தனிப்பட்ட முறையிலே சிதம்பரம் அவர்களைப் பற்றி அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. சிதம்பரத்திற்கும் அவருக்கும் என்ன வாய்க்கால் தகராறா? வரப்புத் தகராறா? நிதி அமைச்சர் என்ற முறையில் அவர் அறிவித்ததைச் செய்யவில்லை என்பதற்காகக் குறிப்பிட்டுச் சொல்கிறார். அதிலே ஒன்றும் தவறு இல்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஒன்றும் கிடையாது (குறுக்கீடுகள்). சும்மா இருங்கள் ஐயா. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல தமிழக கடல் நீரை........



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் வாக்குகளைப் பெற்று மத்தியிலே ஆட்சி புரிந்துகொண்டு இருக்கும் காங்கிரஸ்காரர்களுக்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு நிதி வழங்க வக்கில்லை. இங்கே சில வார்த்தைகளைப் பற்றிக் குறிப்பிட்டு சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல இங்கே வந்து 1,000 கோடி ரூபாய்....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குப் பதில் நான் சொல்லிவிட்டேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** கடல் நீரைக் குடிநீராக்குவதற்காக நிதியைத் தருகிறோம் என்று சொல்லி வாய் ஜாலம் அடித்துவிட்டு (குறுக்கீடுகள்) ஐந்து கோடி ரூபாய் மாத்திரம் கொடுத்துவிட்டுச் சென்றாரே இந்த யோக்கியதைக்குப் பெயர் என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆக, அவர்கள் சொன்னதற்கும் செய்வதற்கும் எள்ளளவும் சம்பந்தம் இல்லை என்பதை ஆணித்தரமாகக் கூறுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I want to make a submission.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள் (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நாணயம் இல்லாதவர் என்று சொன்னது ஒரு தவறு. இப்பொழுது முதலமைச்சர் வக்கில்லை என்று சொல்லியிருக்கிறார். அதுவும் தவறு (குறுக்கீடுகள்). எதிர்க்கட்சிகளைச் துச்சமென மதிக்கும் இந்த ஆளுங் கட்சியைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் (கூச்சல், குழப்பம்).

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், பேசுங்கள் (குறுக்கீடு) டாக்டர் குமாரதாஸ், பேசுங்கள் (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் தமிழ்நாட்டு வாக்குகளைப் பெற்று, மத்திய அரசாங்கம் 1,726 கோடி ரூபாய் தருவதாக வாக்குறுதி அளித்து, அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத வக்கில்லாதவர் என்று சொல்வது un-parliamentary கிடையாது. வக்கு இல்லாதவர் வழக்கு-Pauper Suit- என்று நாம் சொல்கின்றோம்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உங்கள் பிரச்சினை முடிந்தது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. இது அவையினுடைய பிரச்சினை. பேரவைத் தலைவர் அவர்களே, எது எப்படியிருந்தாலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு நிதியமைச்சரை நாணயம் இல்லாதவர் என்று சொல்வது (குறுக்கீடுகள்), முதலமைச்சர் அவர்கள்—முதலமைச்சருடைய இராஜ தந்திரம் எனக்குப் புரிகிறது. வக்கு இல்லாதவர் என்று எதற்காக முதலமைச்சர் அவர்கள் அப்படி ground-ஐ prepare பண்ணுகிறார்கள் என்று தெரிகிறது. எது எப்படி இருந்தாலும்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எது எப்படி இருந்தாலும் என்றால் என்ன?

**திரு. துரைமுருகன்:** ஒரு தமிழ்நாட்டு அமைச்சரை, இப்படிச் சொன்னதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து எடுக்காத காரணத்தால் நாங்களும் அதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம் (குறுக்கீடுகள்).

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு சுவருக்குள்ளே பேசிய ஒரு பேச்சின் கருத்தை தங்களுடைய செயற் குழுக் கூட்டத்திலே வைத்து ஒரு மத்திய அமைச்சரை நீக்கவேண்டுமென்று முடிவு எடுத்திருப்பது மட்டும் கண்ணியத்திற்கு அழகா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்களிடத்திலே நம்முடைய



உரிமையைக் கேட்டுப் பெறுவது, தமிழகத்திற்கு கூடுதலாகக் கேட்டு நிதியைப் பெறுவது நம்முடைய அரசாங்கத்தினுடைய கடமை. அதை விடுத்து.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதெல்லாம் கேட்டாகி விட்டது. நீங்கள் சொன்னது கேட்டாகி விட்டது. உட்காருங்கள். குமாரதாஸ், பேசுங்கள். (குறுக்கீடு) குமாரதாஸ், பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அந்த சுனாமி நிதியைப் பொறுத்தவரைக்கும்.......

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்ன கருத்தை இங்கே நான் மறுத்தே ஆகவேண்டும். மத்திய அரசிடமிருந்து நிதியைக் கேட்டுப் பெறுவது மாநில அரசின் கடமை என்கிறார். எங்கள் கடமையை நாங்கள் செய்யத் தவறி விட்டோம் என்றார். அது தவறு. மத்திய அரசிடம் தேவையான நிதியைக் கேட்டோம். மத்திய அரசும் ஒரு குறிப்பிட்ட தொகையை அறிவித்தது. அறிவித்த தொகையை வழங்கவில்லை. அதைத்தான் இங்கே சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 12-50

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவித்த தொகையை வழங்கவில்லையென்று சொன்னால், மீண்டும் கோரிக்கை வைப்பது அரசினுடைய கடமையாக இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) எடுத்தவுடனே கொடுக்கவில்லையென்று சொல்லி, சத்தம் போடக் கூடாது. இப்போது ஏன் சத்தம் போடுகிறீர்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி, குமாரதாஸ் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கடமையை நாங்கள் ஒழுங்காகச் செய்துகொண்டுதான் இருக்கிறோம். கேட்டுக்கொண்டே இருப்பது மாநில அரசின் கடமையா? அப்படியானல் அறிவித்ததை வழங்க வேண்டியது மத்திய அரசின் கடமையில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. மணி, சொல்லுங்கள். என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்கு முதலமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நாங்கள் மரியாதையோடு பேசுகிறோம். ரொம்ப அடக்கமாகப் பேசுகிறோம். ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அப்படி முறைகேடாகப் பேசக் கூடாது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) முறைகேடாகப் பேசக் கூடாது. தாங்கள் பேசியதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இத்தனைக்கும் உங்களை நான் பேசுவதற்கே அனுமதிக்கவில்லை. இருந்தாலும் முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தப் பதிலை ஏற்றுக்கொண்டு கண்ணியமாக அமருங்கள். டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர் மணி அவர்கள் பேசுகிறபோது, ஏதோ நீங்கள் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும், கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்று சொல்கிறார். இலட்சக்கணக்கான மக்கள் கண்ணீரிலே மிதந்துகொண்டிருக்கிறபோது ஒரு தாயுள்ளத்தோடு வந்து பாதுகாத்த தாய் எங்கே? மத்தியிலே ஆண்டுகொண்டிருக்கிற தமிழகத்தைச் சேர்ந்த ஒரு நிதியமைச்சர் இத்தனையையும் கண்டும் காணாமலும், கண் இருந்தும் குருடனாக, காதிருந்தும் செவிடனாக இருக்கக்கூடிய காலகட்டத்திலே, வேறு என்ன செய்ய முடியும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அம்மாவைப் பொறுத்தவரைக்கும், பொறுமையாக, இறுதியாக எவ்வளவு மரியாதையாகக் கேட்க வேண்டுமோ அதைக் கேட்பார்கள். நீங்கள் மிஞ்சிப் பார்த்தால் அம்மாவினுடைய சிங்க நடைக்கு எதிராக நீங்கள் தூள் தூளாகிப் போவீர்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுனாமியால் பாதிக்கப்பட்ட, இப்போது மணி அவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட (குறுக்கீடு) ஹலோ. நீங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி பண்ண வேண்டுமா வேண்டாமா? அதை மாத்திரம் சொல்லிவிட்டு போங்கய்யா. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உங்களுக்கு அனுமதியில்லை. குமாரதாஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) கேட்டதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். மறுபடியும், மறுபடியும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பேசிக்கொண்டிருந்தால் ஒன்றுமில்லை. இலாவணிக் கச்சேரி இல்லை. (குறுக்கீடுகள்) குமாரதாஸ் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதே போல, (குறுக்கீடுகள்) சுனாமியைப் பொறுத்தவரைக்கும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய நிதியமைச்சர் அவர்களை வக்கில்லையென்று முதலமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தினாலே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதானே, குமாரதாஸ் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஆக, இந்த சுனாமியைப் பொறுத்தவரைக்கும் பாட்டாளி மக்கள் கட்சி நண்பர்கள் மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். சுனாமியால் இலட்சக்கணக்கான மக்கள் அழிந்தாலும், ஒழிந்தாலும் எங்களுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை, மத்திய அரசிடம் பணம் கேட்கமாட்டோம், கொடுக்கமாட்டோம், கடற்கரைப் பகுதியிலே வாழ்கிற இலட்சக்கணக்கான மீனவ நண்பர்கள் அழிந்தொழிய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சி நண்பர்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். வாழ்க, அவர்களுடைய கட்சி, வாழ்க, அவர்களுடைய தொண்டு. ஆக, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வையையும், மற்றவர்களுடைய பார்வையையும் ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆக, நம்மைப் பொறுத்தவரைக்கும் இங்கே சுனாமியால் பாதிக்கப்பட்ட நேரத்திலே இன்னொரு முக்கியமான செய்தி. கடற்கரைக் கிராமத்திலே கன்னியாகுமரியிலே அன்றைக்கு... (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். நான் பேசுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், உட்காருங்கள். ஜெக. வீரபாண்டியன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ப. சிதம்பரம் சுனாமிக்கு மட்டும் அவர் கொடுக்கவில்லை என்பதல்ல. அதைவிட சுனாமிக்கு முன்பு எங்கள் மாவட்டம்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. ப. சிதம்பரம் அவர்களைக் காரில் காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர் தாங்கி அழைத்துக்கொண்டு வந்தார்கள். ஆயிரக்கணக்கான விவசாயிகள் காத்திருக்கிறார்கள். பணம்கூடத் தரவில்லை. காரைவிட்டு இறங்கவில்லை, காத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஒரு வார்த்தை ஆறுதல்கூடக் கூறவில்லை. கனரா வங்கியிலே கூட்டம் நடத்தினார். விவசாயிகள் காத்திருக்கிறார்கள். விவசாயிகள் கேட்கப் போகிறார்கள் என்று ஐந்து நிமிடங்களிலே கூட்டத்தை முடித்துவிட்டு ஓடிவிட்டார்கள். வக்கற்றவர் என்று சொல்வதிலே தவறில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போல அம்மாவினுடைய அரசு ஆற்றியிருக்கின்ற இன்னொரு பணி, பெரியதாக வெளியே தெரியாது.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன், இன்றுபோல் என்றும் வாழ்க. உட்காருங்கள். (சிரிப்பு) குமாரதாஸ், பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதாவது, கன்னியாகுமரியிலே இந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட நேரத்தில், அலை அடித்து வருகிற நேரத்திலே, விவேகானந்தர் பாறையிலே, சுமார் 1,500, 2000 பேர் இருக்கிறார்கள். சுற்றுலாப் பயணிகளாக வந்தவர்கள். அவர்கள் அத்தனை பேரையும் அம்மாவினுடைய, காவல் துறையைச் சார்ந்த காவல் துறை அதிகாரிகளும், நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும், அங்கே உள்ள ரெவின்யூ அதிகாரிகளுமாக, ஓர் உயிர்கூட சேதம் இல்லாமல் 2,000 பேரையும், விவேகானந்தர் பாறையில் இருந்து கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள் என்று சொன்னால், அதுவும் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஒரு சாதனை என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, இந்த சுனாமி நேரத்திலே குளச்சல் பகுதியிலே, 800-க்கும் அதிகமானவர்கள் மரணம் அடைந்தார்கள். அந்த நேரத்தில் அந்தப் பகுதியிலே ஜேம்ஸ் மருத்துவமனையில், பிரேம்குமார் என்கிற ஒரு டாக்டர் அங்கே கண்ணியமாக இருந்து, எந்தவிதமான பிரதி



உபகாரமும் எதிர்பாராமல் பணியாற்றிய காரணத்தினாலே, கிட்டத்தட்ட 200, 300 உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள். அவரை அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர், மரியாதைக்குரிய அருமைச் சகோதரர் பச்சைமால் அவர்களுக்குத் தெரியும்; மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் எல்லோருக்கும் தெரியும். ஆக, அரசிடம் அவர் பணம் எதிர்பார்க்கவில்லை. அவருடைய கடமையைச் செய்தார். முடிந்தால், அவருக்கு ஒரு கௌரவம் கிடைக்கின்ற விதத்திலே, அம்மா அவர்கள் ஏதாவது செய்தால், மாவட்ட மக்கள் உண்மையிலேயே அதற்காக, உங்களுக்குக் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள். முடிந்தால் அதைப் பரிசீலித்துப் பாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய காவல் துறையைப் பற்றி நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நம்முடைய குடும்ப அட்டையினுடைய பிரச்சினையை இங்கே சொன்னார்கள். கிட்டத்தட்ட 1,000 கோடி ரூபாய் மானியமாக வழங்கி இன்றைக்கு, 49,31,757 மனுக்கள் பெறப்பட்டு அதிலே 37,70,446 புதிய அட்டைகள் வழங்கப்பட்டு, மீதம் உள்ள அட்டைகளை ஜூன் மாதத்திற்குள்ளாக வழங்குவதாக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதற்காக இன்றைக்கு தமிழகம் முழுவதும், ஏழை எளிய மக்களுக்கு இந்த குடும்ப அட்டை கிடைப்பதன்மூலம், தங்களுடைய வாழ்விலே வளம் சேர்ந்துவிடும் என்கிற நம்பிக்கையோடும், அம்மா அளிக்கிற மானியத்தோடு, பட்டினிப் பசி நீங்கி வாழலாம் என்ற உணர்வோடும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியை முடுக்கிவிட்டு வெகு விரைவிலே ஆவன செய்துகொண்டிருப்பதற்காக நான் அம்மா அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றைய தினம் 2005-2006 ஆம் ஆண்டிற்கு, கல்விக்கு என்று சொல்லி 4,348 கோடி ரூபாய் நீங்கள் ஒதுக்கீடு செய்து இருக்கிறீர்கள். கடந்த ஆண்டைவிட, கிட்டத்தட்ட 547 கோடி ரூபாய் அதிகமாக இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், போக்குவரத்துக் கழகம் என்று சொல்கிறபோது இந்த ஆண்டு 2,000 புதிய பேருந்துகள் வாங்குவதாக அறிவித்து இருக்கிறீர்கள். பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். 4,848 பழைய பேருந்துகளைப் புதுப்பிப்பதற்காக ரூ. 30 கோடி ஒதுக்கியிருப்பதற்குப் பாராட்டுகிறோம்.

அதேபோல், 2001-ல் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததில் இருந்து இதுவரைக்கும் டீசலினுடைய விலை 27 முறை உயர்ந்து இருக்கிறது. இந்த 27 முறை டீசல் விலை உயர்ந்து — ஒரு லிட்டருக்கு

10 ரூபாய் 31 காசு உயர்ந்து இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பிற்கு அம்மா வருகிறபோது 18 ரூபாய் 53 காசாக இருந்த டீசல், இன்றைக்கு 28 ரூபாய் 84 காசாக உயர்ந்தபிறகும், (குறுக்கீடுகள்) — மத்திய அரசு டீசல் விலையை உயர்த்திய பிறகும், போக்குவரத்துப் பயணிகளுடைய நலனைக் கருத்திற்கொண்டு ஏழை எளிய மக்களினுடைய வாழ்வில் அக்கறை கொண்டு, பேருந்துகளினுடைய டிக்கெட் — பயணக் கட்டணத்தை உயர்த்தாமல் இருப்பதைக் கண்டு — இன்றைக்கு பஸ் கட்டணத்தை உயர்த்தாமல் இருப்பதைக் கண்டு தமிழக மக்கள் உங்களை வாழ்த்திக்கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல, சுகாதாரத் துறையைப் பொறுத்தவரைக்கும், கடந்த ஆண்டு 1,317.83 கோடி ரூபாய் மொத்தமாகச் செலவு செய்தீர்கள். இந்த ஆண்டு 1652.24 கோடி ரூபாய். கடந்த ஆண்டைவிட 334 கோடி ரூபாய் அதிகமாக, இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். இதிலே குறிப்பாக ஒன்றை மாத்திரம் சொல்லி முடித்துவிடுகிறேன். இந்திய முறை மருத்துவம். இந்த இந்திய முறை மருத்துவத்தைப் பொறுத்தவரைக்கும், நான் ஒரு பாரம்பரியமான சித்த மருத்துவக் குடும்பத்தைச் சார்ந்தவன். நான் ஒரு சித்த மருத்துவப் பட்டதாரி, அது வேறு விஷயம். ஆனால், இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான சித்த மருத்துவர்கள் மருத்துவம் செய்து, அவர்களுக்கு அங்கீகாரம் இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. இதை அம்மாவினுடைய கவனத்திற்குக் கழிந்த முறை நாங்கள் கொண்டுவந்தோம். 1994-லே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து enlistment வழங்க வேண்டுமென்று உங்களிடம் கேட்டோம். Enlistment என்றால் பதிவுமுறை மருத்துவம். பாரம்பரிய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு அதைக் கொடுத்தால், வைத்தியம் செய்து பிழைத்துக்கொள்வார்கள் என்று சொன்ன நேரத்திலே, இரண்டு விதமான நன்மைகள்; பாரம்பரிய சித்த மருத்துவம் அழிந்துபோகாமல் பாதுகாப்பது ஒன்று; இன்னும் ஒன்று, அவர்கள் மருத்துவம் செய்வதற்கான உரிமை. அப்படி 6 ஆயிரம் பேர்களுக்கு ஒரே நேரத்தில் ஒரே கையெழுத்திட்டு சித்த மருத்துவத்தைக் காப்பாற்றி, வாழ வைத்த தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 1-00

அதைப்போல, அதைச் சார்ந்தவர்கள் மீண்டும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முடிந்தால், அதற்கான வாய்ப்புகள் இருக்கும் என்று சொன்னால், சித்த மருத்துவத்தைக் காப்பாற்றுவதில்—வாய் கிழிய இங்கே சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார்களே, தமிழ், தமிழ், தமிழ் என்று—ஆனால் தமிழ் மருத்துவம், சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி



படித்தவர்களுக்கு, நூற்றுக் கணக்கானவர்களுக்கு வேலை கொடுத்ததே டாக்டர் புரட்சித் தலைவி அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே 5 ஆண்டுகளில் 7 பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், கடந்த 4 ஆண்டுகளிலே 140 பேர்களுக்கும் அதிகமானவர்களுக்கு சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருத்துவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள். ஆக, தமிழைப் பற்றி வாய் கிழியப் பேசாமல் இருந்தாலும், உள்ளத்தளவில் தமிழரை நேசித்து அவர்கள் வாழ வழி செய்து கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்திய முறை மருத்துவர்கள், குறிப்பாக சித்த மருத்துவர்கள் இதயபூர்வமாக வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, அரசுப் பணியாளர்கள். கிட்டத்தட்ட 3 சதவிகிதம் அகவிலைப்படி கொடுக்கப்பட்டதன்மூலமாக அரசுக்கு 211 கோடி ரூபாய் அதிகமாகச் செலவானாலும், 12.33 இலட்சம் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் பயன் பெறுகிறார்கள். 4.80 இலட்சம் ஓய்வூதியதாரர்கள் பயன் பெறுகிறார்கள். ஆகமொத்தம், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வுபெற்றவர்கள் அத்தனைபேரும் இந்த பட்ஜெட்டைப் பற்றி நினைக்கிறபோது, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போட்ட பட்ஜெட் என்கிற உணர்வோடு உங்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, சத்துணவு. சத்துணவைப் பற்றிச் சொல்கிறபோது, கிட்டத்தட்ட வெகுகாலமாக வைத்த கோரிக்கையை நீங்கள் ஏற்று, 50 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்குவதற்கு ஆணையிட்டிருப்பதற்காக சத்துணவுப் பணியாளர்கள் ஒட்டுமொத்தமாக உங்களைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, ஆதிதிராவிடர் நலனுக்காக 453.91 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை ஆதிதிராவிட மக்கள் மிகவும் கனிவோடும், பணிவோடும் எண்ணிப் பார்க்கிறார்கள். அதுமட்டுமல்ல அந்த SC/ST வகுப்பைச் சார்ந்தவர்கள், Most backward-ஐச் சார்ந்தவர்கள், Backward community-ஐச் சார்ந்தவர்கள்—இந்தப் பள்ளிப் பிள்ளைகள், பள்ளிக்குச் செல்வதற்காக 3,45,194 சைக்கிள்களை வழங்கியிருக்கிறீர்கள் என்று சொன்னால், அது அந்தப் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்ல, படிப்பினைத் தொடர, அவர்கள் படிப்பை தடைபடாமல் பாதுகாக்கின்ற ஒரு பாங்கு, ஆக எப்படி ஒரு தாய் தன்னுடைய பிள்ளை படிக்க வேண்டுமென்று விரும்புவாளோ, அதைவிட அதிகமாக பல கோடிகள் நமக்குச் செலவானாலும் பரவாயில்லை, நம்முடைய மாநிலத்தில், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், படிக்க வசதி

இல்லை என்கிற காரணத்தாலே படிப்பை விட்டுவிடக் கூடாது என்கிற உணர்வோடு இன்றைக்கு கோடிகள் பல செலவானாலும் இலட்சக்கணக்கான சைக்கிள்களை வாங்கி பள்ளிக்கு அனுப்பியிருக்கிறீர்களே, இதற்கு ஈடாக இந்த உலகத்திலே என்ன இருக்க முடியும் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் அதை எண்ணி, எண்ணி பூரிப்பு அடைகிறார்கள். யாருக்கும் உதிக்காத சிந்தனை, இந்தத் தாய்க்கு வந்திருக்கிறதே என்று பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு சிறு மற்றும் குறு உழவர்களுக்குச் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன முறைக்கு 50 சதவிகிதம் உதவித் தொகை வழங்க முன்வந்திருக்கிறீர்கள். ஆக, இந்த வேளாண்மைத் துறை கெட்டுவிடக் கூடாது, ஏற்கெனவே மழை இல்லாமல் பாதித்துக் கொண்டிருக்கக்கூடிய விவசாயம் அழிந்துவிடக் கூடாது, அவர்களையும், சிறு, குறு விவசாயிகளையும் பாதுகாத்திட வேண்டும் என்ற உணர்வோடு கோடிகள் பல செலவானாலும் பரவாயில்லை, விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற உணர்வோடு நீங்கள் பிறப்பித்திருக்கின்ற ஆணையைக் கண்டு விவசாயப் பெருங்குடி மக்கள் பூரிப்பு அடைகிறார்கள்.

அதேபோல, தற்போது 12 மாவட்டங்களிலே உழவர் பயிற்சி மையங்கள் இருப்பதை, மேலும் 11 மாவட்டங்களில் விரிவுபடுத்துவதற்கான முயற்சியைக் கண்டு எல்லோரும் இதயபூர்வமாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, ஓசூர், ஊட்டி, தேனி ஆகிய பகுதிகளில் 65.34 கோடி ரூபாயில் ஏற்றுமதி மண்டலங்கள் அமைப்பதற்கான ஏற்பாடு செய்திருப்பதைக் கண்டு அனைத்துத் தரப்பு விவசாயிகளும் பெரு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-05*

அதேபோல, கடலூரிலே முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம் ஒன்றை 10.36 கோடி ரூபாய் செலவில் ஒதுக்கியிருப்பதையும், இதயபூர்வமாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

வேளாண் துறைக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற விதத்தில் 854.41 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை இதயம் உள்ளவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, இவை எல்லாவற்றையும்விட், பாதிக்கப்பட்ட விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்கிற உணர்வோடு கூட்டுறவுக்



கடன் நிறுவனங்களிலேயிருந்தும், வணிக வங்கிகளிலிருந்தும் பெற்ற கடன்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்குத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று, அவர்கள் கோரிக்கை வைக்கிறார்களோ இல்லையோ, நீங்கள் மத்திய சர்க்காரை வலியுறுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனையும் தள்ளுபடி செய் என்று சொன்னால், அதற்கு ஈடாக என்ன இருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல, கால்நடைத் துறையைப் பொறுத்தவரைக்கும் 2004-2005 ஆம் ஆண்டில் 1.85 கோடி ரூபாயிலே 505 முகாம்களை நடத்தி, மாடுகள், கன்று காளைகளைப் பராமரித்து, வருமுன் காப்போம் திட்டத்தைப்போல, கால்நடைகளையும் நீங்கள் கவனித்துக்கொண்ட காரணத்தினாலே, தொற்று நோய்கள் பரவாமல் கால்நடைகள் இன்றைக்கு பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, துறைமுகம். இப்படி, எந்தத் துறையானாலும் சரி, அத்தனை துறை மக்களும் ஏற்றுக்கொள்கின்ற விதத்திலே, பாராட்டுகின்ற விதத்திலே, ஒரு பைசாகூட வரியில்லாத விதத்திலே ஓர் அருமையான நிதிநிலை அறிக்கையைத் தந்து, தமிழகத்தினுடைய 6 கோடி மக்களும், இப்படியும் ஓர் ஆட்சி, இப்படியும் ஒரு பட்ஜெட்டா என்று நினைக்கின்ற விதத்திலே, அம்மா, தமிழக மக்கள் ஒட்டுமொத்தமாக உங்களுடைய துணிச்சலைக் கண்டு, நீங்கள் எடுக்கிற முடிவுகளுக்கு, யார் வந்தால் என்ன, போனால் என்ன, அவர்களைக் கண்டுகொள்ளாமல், நெஞ்சுரத்தோடு நீங்கள் நடந்து செல்கிறபொழுது உங்கள் பின்னாலே கோடானுகோடி மக்கள் அணிவகுத்து வருவதற்குத் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தயாராக இருந்துகொண்டிருக்கிறார்கள். கலங்க வேண்டாம், சஞ்சலம் வேண்டாம், துணிந்து செயல்படுங்கள். உங்களுக்காக உயிர்த் தியாகம் செய்வதற்குக்கூட பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, உங்களுக்காக எந்தத் தியாகத்தைச் செய்வதற்கும் தமிழக மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை மீண்டும் மீண்டும் கூறி, இந்த நிதிநிலை அறிக்கையிலே உரையாற்றுகின்ற வாய்ப்பினைத் தந்ததற்காக உங்களுக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துகளையும், இதயம் கனிந்த நன்றியையும், உங்கள் பொற்பாதங்களிலே சமர்ப்பித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கே எழுப்பிய சில வாதங்களுக்குப் பதிலாக இரண்டு கருத்துகளை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

முதலில், 'மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்குவதாக அறிவித்த நிதியை வழங்கவில்லை; அப்படி வழங்குவதற்கு வக்கில்லை' என்று நான் குறிப்பிட்டதற்கு ஆட்சேபனை தெரிவித்து, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் 'வக்கில்லை' என்ற சொல் Unparliamentary சொல் என்று குறிப்பிட்டு, அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளாததால் வெளிநடப்புச் செய்வதாக அறிவித்து வெளிநடப்புச் செய்தார்கள். அவர்களைத் தொடர்ந்து தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும், பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தார்கள். 'வக்கில்லை' என்று சொல்வது Unparliamentary சொல்லா? நிச்சயமாக அப்படியில்லை. நீதிமன்றங்களிலேயே 'வக்கில்லாதவர்கள் வழக்கு' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது 'Pauper Suit'. (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, நீதிமன்றங்களிலேயே நடைமுறையில் 'வக்கில்லாதவர்கள் வழக்கு' என்ற சொல் வழக்கில் இருக்கும்போது, நடைமுறையில் இருக்கும்போது, நிச்சயமாக அது Unparliamentary சொல் ஆகாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சற்றுமுன் நடைபெற்ற விவாதத்தில், நிர்வாகத்தில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்றும், ஒரு திடமான கொள்கை கடைப்பிடிக்கப்படவில்லை என்றும் ஒரு வாதம் எழுப்பப்பட்டது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல், adaptability and flexibility இருப்பது ஒரு சிறப்பான அரசாங்கத்தின் அறிகுறியாகும். மக்களின் மாறிவரும் விருப்பங்களைப் புரிந்துகொண்டு கொள்கை மாற்றங்கள் செய்வது எக்காரணத்தைக் கொண்டும் தவறு என்று கூற இயலாது. ஒரு ஜனநாயகத்தின் அடிப்படையே இதுதான். நாங்கள் செய்வது இத்தகைய நிர்வாக மாற்றம்தான். இதைக் கண்டு ஏன் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அஞ்சுகிறார்கள்? நான் மேற்கொண்ட நிர்வாக மாற்றங்களினால் மக்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்று புரிந்துகொண்டு பீதியடைகிறார்கள் என்பதுதான் உறுதியாகிறது. எங்கள் ஆட்சி எப்பொழுதுமே மக்கள் ஆட்சியாகும். நாங்கள் எப்போதுமே மக்கள் பக்கம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மக்கள் எப்போதுமே எங்கள் பக்கம்தான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வருகை தந்துள்ள திரு. ஆறுமுகம்.



**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், இந்த நிதிநிலை அறிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த என்னுடைய கட்சியினுடைய நிறுவனத் தலைவர் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இந்தியத் திருநாட்டின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. ஆறுமுகம் பேசுவதைப் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்களே புறக்கணித்து வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள் என்பதை அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்தவர்கள் ஒவ்வொருவராக வந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய தலைவரும் வருவார். ஆனால், இதை விமர்சனப் பொருளாக ஆக்குவது எப்படி என்று எனக்குப் புரியவில்லை? எங்களுடைய கட்சி இயக்கத்தின் சார்பில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், கடைசியாக எல்லோரும் வந்து விடுவார்கள். (சிரிப்பு)

**திரு. கே. ஆறுமுகம்:** இந்தியத் திருநாட்டின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 3 மணி நேரம் படித்து, 100 பக்கங்களைப் படித்து முடித்திருக்கிறார்கள். அந்த வகையிலே படித்திருக்கிற அந்த அறிக்கையிலே நம்முடைய தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கு நீண்ட நெடிய பல்வேறு புதிய திட்டங்களை அறிவிப்பார் என்று எதிர்பார்த்தோம். வளர்ச்சிக்கான புதுமைகள் எதுவும் இல்லை. வேலைவாய்ப்பிற்கான புதிய திட்டங்கள் உள்ளதா என்று உற்றுப் பார்க்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறது என்பதைக் கூறி முதற்கண் நிதிநிலை அறிக்கைக்கு வருவதற்கு முன்பாக ஏற்கெனவே இந்த அவையிலே அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் என்னுடைய தொகுதியிலே இன்னும் கிடப்பில் கிடக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலேயும், அதேபோன்று சேலம் மருத்துவமனையிலேயும் மாணவர்கள் சேர்க்கை கூடுதலாகச் சேர்க்கப்படுவார்கள் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சொல்லியும்

இதுவரையிலே அந்த மருத்துவக் கல்லூரிகளிலே மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்படாமல் இருப்பது வருந்தத்தக்க ஒரு விஷயமாகக் கருதுகிறேன்.

அதேபோன்று செங்கற்பட்டு கொளவாய் ஏரியை சீர் செய்வதற்கும், ஆழப்படுத்துவதற்கும் பல கோடிகளை ஒதுக்கி, இன்னும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகவே இருக்கிறது என்பதையும் நான் புலப்படுத்த விரும்புகிறேன். அதேபோன்று, சுற்றுலா வளர்ச்சித் துறைக்கு கடந்த 4 ஆண்டுகளைவிட இந்த ஆண்டு ஏறக்குறைய 6 மடங்கு நிதி கூடுதலாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியும்கூட மாமல்லபுரத்திலே ஒலி-ஒளி காட்சி அமைக்கப்படும் என்று சொன்னதற்கு இதுவரையிலே முயற்சி எடுக்கப்படவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று செங்கற்பட்டு நகரிலே பாதாள சாக்கடை திட்டம் அறிவிக்கப்பட்டு 2 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இன்னும் அது ஆரம்பிக்கப்படவில்லை. அதேபோன்று ஆதிதிராவிடர் நலப் பள்ளியாக இருக்கிற மணமை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி துவக்கி 2 ஆண்டுகள் ஆகியிருக்கிறது. அதிலே மேல்நிலைப் பள்ளிக்கான தலைமையாசிரியர் தவிர வேறு எந்த ஆசிரியர் பணியிடமும் நிரப்பப்படாமல், அங்கே அந்த மாணவர்கள் இந்த ஆண்டு முதலாவதாக +2 தேர்வு எழுதுகிறார்கள்; அதற்கு ஆசிரியர்களே இல்லை. இது மிகப் பெரிய கொடுமையான விஷயமாக அந்த மாணவர்கள் கருதுகிறார்கள். அதேபோன்று, செங்கற்பட்டு சட்டக் கல்லூரியிலே தமிழகத்திலே இருந்து பல்வேறு மாவட்டங்களிலேயிருந்து வந்த மாணவர்கள் படிக்கிறார்கள். அங்கு மாணவிகளும் படிக்கிறார்கள். அவர்கள் தங்கிப் படிப்பதற்கு இதுவரையிலே மாணவர் விடுதிகள் கட்டப்படவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, வட்டத் தலைமை மருத்துவமனையாக திருக்கழுக்குன்றம் நிலை உயர்த்தப்பட்டு ஏறக்குறைய 8 ஆண்டுகள் ஆகியும் இதுவரையிலே 10 படுக்கைகள்கூட இல்லாமல் வட்டத் தலைமை மருத்துவமனையாக அங்கே இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று, உலகப் பிரசித்திப் பெற்ற மாமல்லபுரத்திலே இருக்கிற அந்த மருத்துவமனை 24 மணி நேர மருத்துவமனையாக உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை வைத்தும், அதற்கான புதிய கட்டடங்கள் இல்லாமல் ஒரேயொரு சிறிய அறையிலே அந்த மருத்துவமனை இயங்கிக் கொண்டிருப்பது அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு மிகப் பெரிய வருத்தமாக இருந்து கொண்டிருக்கிறது.



இன்னொரு பிரச்சினை என்னவென்று சொன்னால், இங்கே காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திலே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற 10 கிராமங்கள், அவற்றை சுற்றி 30 குக்கிராமங்கள் இருக்கின்றன. அங்கே கடந்த 4 மாதங்களாக அந்த வழியே அடைக்கப்பட்டிருக்கிறது. அதைக் கேட்டால் ஒரு கிலோ மீட்டர் தூரம் வனத் துறைக்குச் சொந்தமான சாலையிலே சென்று கொண்டிருப்பதாலே, அங்கு இயங்கிக் கொண்டிருந்த 3 பேருந்துகளில், 2 அரசுப் பேருந்துகளும் ஒரு தனியார் பேருந்தும் நிறுத்தப்பட்டு, அந்த வழியே அடைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக்கூட கடந்த ஆளுநர் உரையிலே நான் கவன ஈர்ப்பு கொடுத்தும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அது இன்னும் கேட்பாரற்று கிடக்கிறது. இப்படி அந்தப் பகுதி மக்களைப் புறக்கணிக்கிற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது.

இன்னொரு பக்கம் பார்த்தால் மாமல்லபுரம் நகரில் இரவிலே பேருந்துகள் போவது இல்லை. புறவழிச் சாலையில் 1—1/2 கிலோ மீட்டருக்கு வெளியே கொண்டு விடுகிறார்கள். இரவு நேரங்களில் வெளிநாட்டுப் பயணிகள் அதேபோன்று வெளி மாநில பயணிகள் எல்லாம் தவித்துக் கொண்டு செல்கிற ஒரு நிலைமை இருக்கிறது. அதை பல முறை சொல்லியும் அங்கு இருக்கிற அதிகாரிகள் அதைச் செவிமடுக்கவில்லை.

பிற்பகல் 1-15

அடுத்து இன்னும் ஒன்று என்ன சொல்லவேண்டுமென்றால், இப்பொழுது நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயத்தைப் பற்றி குறிப்பிடுகிறபோது நம்முடைய தமிழகத்திலே வர இருக்கிற ஆண்டிலே 16 சதவீதம் வளர்ச்சி ஏற்படுமென்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அதிலே சொட்டுநீர்ப் பாசனத்திற்குத்தவிர ஏனைய மானியங்கள் வழங்கப்பட்டிருக்கிறதா என்றால் அது கேள்விக்குறியாக இருக்கிறது. அங்கே இடு பொருள்களுக்கு மானியம் கூட்டப்படவில்லை. பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு கூட்டப்படவில்லை. அதேபோன்று பார்த்தால் விவசாயிகள் பயன்படுத்துகிற மின்சாரம், விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிற புது இணைப்புக்கு 10 ஆயிரம், 25 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் கட்டணங்கள் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், இதையெல்லாம் கொடுத்தால் இந்த முதன்மைத் தொழிலாக இருக்கிற விவசாயம் எந்த அளவுக்கு வளர்ச்சியை எட்டும் என்று பார்க்கவேண்டும். இதை ஏன் நம்முடைய அரசாங்கம் செய்யாமல் இருக்கிறது என்பதே என்னுடைய கேள்வி . . . .

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 25 சதவீதமாக இருந்த சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர்ப் பாசனத்திற்காக இருந்த மானியத் தொகையை 50 சதவீதமாக உயர்த்திய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உண்டு என்பதையும், இன்றைக்கு செயல்திறனற்ற மின் மோட்டார்களுக்குப் பதிலாக, 5 எச்.பி.— மற்றும் அதற்கு மேலாக இருக்கின்ற மின் மோட்டார்களை புதியதாக வாங்குவதற்காக 5,000 ரூபாய் மானியம் வழங்குவதற்கும், 5 எச்.பி.-க்கும் குறைவாக இருக்கின்ற செயல்திறனற்ற மின் மோட்டார்களை மாற்றிப் புதிய மின் மோட்டார்கள் வாங்குவதற்காக 2,500 ரூபாய் மானியத் தொகை வழங்குவதற்கும், அதோடுமட்டுமல்ல வால்வுகள், ஸ்டார்ட்டர்கள், ஒயர்கள் மாற்றுவதற்காக வேளாண் பெருமக்களுக்காக 1,500 ரூபாய் மானியமாக வழங்குவதற்கும், அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 6,500 ரூபாய் மானியம் வழங்குவதற்கும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை வழங்கி, தமிழகம் முழுவதும் அந்த செயல்திறனற்ற மின் மோட்டார்களுக்குப் பதிலாக புதிய மின் மோட்டார்கள் வாங்குவதன்மூலமாக நிலத்தடி நீரை மிச்சப்படுத்தவும் வேளாண் சாகுபடியினுடைய பரப்பளவை அதிகப்படுத்தவும், அதோடுமட்டுமன்றி மின்சாரத்தை சேமிப்பதற்கு உண்டான வாய்ப்பையும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி இருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு வேளாண் பெருமக்கள் பயன்படுத்துகின்ற அளவிலே தானியங்களுக்காக, விதைகளுக்காக மானியங்கள் வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அதேபோன்று power tiller, tractor மற்றும் உழவுக் கருவிகள் போன்றவைகளுக்கும் மானியம் இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக சிறப்பாக சொல்லவேண்டுமென்றால் ஒரு பண்ணை இயந்திரம் என்று சொல்லப்படுகின்ற power tiller -ஐ வாங்குவதற்காக மட்டும் இன்றைக்கு ஏறக்குறைய ரூ.28,000, அந்த power tiller-னுடைய ஒட்டுமொத்த மதிப்பே ஏறக்குறைய ஒரு இலட்சம் ரூபாய். அந்த ஒரு இலட்சம் ரூபாய் கொள்முதலிலே வாங்கப்படுகின்ற அந்த power tiller -க்காக மட்டும் ரூ.28,000-க்கும் மேலாக மானியம் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

Power sprayer போன்ற பல்வேறு மருந்து தெளிப்பான்களுக்கும் இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மானியம் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். 5 ஆண்டு காலமாக நோய்





பாதிக்கப்பட்டிருக்கின்ற தென்னை மரங்களுக்கு அந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்காக ரூபாய் 9.50 கோடி அளவிலே இன்றைக்கு ஒரு கோடியே 41 இலட்சம் தென்னை மரங்களுக்கு இலவசமாக செம்பான் சிலந்திநோய் கட்டுப்படுத்துவதற்காக மானியம் வழங்கிக் கொண்டு, மகத்தான சாதனை புரிந்துகொண்டு வருகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, இன்றைக்கு கூட்டுறவு வட்டி கடன் எவ்வளவு தள்ளுபடி செய்து இருக்கின்றார்கள் என்பதையும் நீங்கள் நினைவுகூர வேண்டும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆறுமுகம், இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச ஆரம்பித்து அமைச்சர் அவர்கள் அதிகமாக பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் நிறையப் பேசி இருக்கிறீர்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** எங்களுக்குப் பேச கொஞ்சம் வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஓர் உறுப்பினர் பேச வேண்டும்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கருத்துகளைச் சொன்னார்கள். இன்னொரு குறைகூட விவாசாயிகள் மத்தியிலே இருக்கிறது. 3 குதிரைத் திறன் அல்லது 5 குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார்களை இயக்குகிற விவசாயிகள், இப்போது அதிகமான ஆழத்திலே தண்ணீர் சென்று விட்டதாலே அதை குழாய்கள் மூலம் எடுக்கிறபோது அந்த விசை போதவில்லை. அதற்காக கூடுதல் குதிரைத் திறன் கொண்ட மோட்டார்களைப் பொருத்துவதற்கான வாய்ப்புகள் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அது மறுக்கப்பட்டு வருகிறது அதைப் பரிசீலிக்க அரசு முன்வருமா என கேட்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** தலைவர் அவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டதைப்போன்று, செயல்திறனற்ற மின் மோட்டார்கள் இருக்கின்றபோது, இன்றைக்குப் புதிய தொழில்நுட்பத்திலே கண்டுபிடிக்கப்பட்ட, - (குறுக்கீடு) புரிகிறது. நான் சொல்வதைக் கேளுங்கள். நானும் விவசாயிதான். எனக்கும் தெரியும். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்டுக்கொள்ளுங்கள்-செயல்திறனற்ற மின்மோட்டார் இருக்கின்றபோது, அதை மாற்றுவதற்காக, புதிய தொழில்நுட்பத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற, இன்றைக்குச் செய்து வருகின்ற Monobloc, Submersible போன்ற மோட்டார்களைப் பொருத்துகின்றபோது, பழைய மோட்டார்களிலே பெறப்படுகின்ற நீரைக்காட்டிலும் பன்மடங்கு அதிக அளவிலே நீரை உறிஞ்சுகின்ற தன்மை கொண்ட மோட்டார்களை வாங்குவதற்காக மகத்துவமான இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க வருவது, இப்போது புதிய மோட்டார்களைக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதிலே குதிரைத் திறனைக் அதிகப்படுத்திக் கொடுப்பார்களா இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** குதிரைத் திறனிலே, அதிக சக்தி வாய்ந்த அளவிற்கு Monobloc, Submersible மோட்டார்கள் இப்போது இருக்கின்றன என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திற்கு அதிகமான நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அடுத்த விஷயத்திற்குச் சென்றுவிடுகிறேன்.

குடிநீர் வழங்கல் திட்டம். தமிழக அரசு 2004-2005, 2005-2006 ஆம் ஆண்டுகளில் ஏறக்குறைய 1,000 கோடி ரூபாய்க்கு மேலாக பல்வேறு குடிநீர்த் திட்டங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறது. அறிவித்திருந்தபோதிலும், மிகப் பெரிய சோதனையாக, வறட்சி இருக்கின்ற மாவட்டங்களாக இருக்கிற காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், கிருட்டிணகிரி, தருமபுரி, சேலம், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர் போன்ற பல்வேறு மாவட்டங்களிலே எந்தவித புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையோ, புதியத் திட்டங்களையோ அறிவிக்காததால் அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் மிக, மிக





அதிருப்தியில் இருக்கிறார்கள். இதிலே ஏன் இப்படி ஒருதலைப்பட்சமாக அரசாங்கம் செய்திருக்கிறது என்பதை நான் கேட்க விரும்புகிறேன். அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் செய்த பாவம் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. அதேபோன்று...

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, இந்தப் பகுதிகளையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. எங்கெங்கு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தேவையோ அங்கெல்லாம் செயல்படுத்துகின்ற வகையிலேதான் மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோல மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, அவருடைய பகுதியில்கூட, செங்கல்பட்டு நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டமானது வருகின்ற டிசம்பர் மாதத்தில் முடிவடைய இருக்கின்றது. மேலும், அவர் கூறியதுபோல, வேலூர் மாவட்டம், தருமபுரி மாவட்டம், கிருட்டிணகிரி மாவட்டங்களில் எல்லாம், இப்போதைக்குத் தேவையான தண்ணீரானது, குடிநீருக்காகக் கொடுக்கப்பட்டு வருகிறது. தொலைநோக்குப் பார்வையோடு மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பகுதிகளுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைப் பற்றி இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களால்தான் நிறைவேற்ற முடியுமே தவிர, மற்றவர்கள் யாராலும் அந்தத் திட்டத்தினை நிறைவேற்ற இயலாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவித்து அமைகிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக்கூட வேலூர் மாவட்டத்திலே திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி, காட்பாடி போன்ற தொகுதிகளிலே ஒரு குடம் தண்ணீர் 2 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்கிற நிலை இருக்கிறது. (குறுக்கீடு) 5 ரூபாயா? நான் குறைத்துச் சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறானக் கருத்து. தொன்றுதொட்டு, உப்பு நீராக இருக்கின்ற பகுதிகளிலே, குடி தண்ணீரைப் பெறுவதற்காக, நல்ல குடிதண்ணீரைப் பெறுவதற்கு வாங்குவது என்பது தொன்றுதொட்டு இருக்கின்ற ஒரு நடைமுறை. வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற பகுதிகளிலே தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் மூலமாக வெளியேற்றப்படுகின்ற கழிவுநீராலே எப்போதுமே அங்கே உப்பு நீர் இருக்கின்றது. குடிநீருக்காக,

பெருமளவு மழை பெய்தாலும்கூட, ஆற்றிலே பெருமளவு தண்ணீர் போனாலும்கூட, அந்த உப்பு நீர் இருக்கின்ற காரணத்தினாலே, குடிநீருக்காக, நல்ல குடிதண்ணீர் கிடைப்பதற்காக, தொன்றுதொட்டு, காலம் காலமாக, அந்த நீரை விலைக்கு வாங்குகின்ற ஒரு நிலைமை வேலூர் மாவட்டத்திலே இருக்கின்றது. வறட்சிக்காக அல்ல.

அதோடு மட்டுமல்ல. மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு, வேலூர் மாவட்டத்தில் இருக்கின்ற குடி தண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக, ஒரு கோடி ரூபாய், வழங்கியிருக்கின்றார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். அதோடு மட்டுமல்ல. இந்தத் தொகையைச் செலவழித்துவிட்டதற்குப் பிறகு மீண்டும் தொகையைக் கேளுங்கள்; நான் தருகின்றேன் என்று தாயுள்ளத்தோடும் சொல்லியிருக்கின்றார்கள் அம்மா.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 தொகுதிகளுக்கு ஒரு கோடி ரூபாய் நம்முடைய முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். இது போதுமா?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** நான் சொல்கின்றபோதே சொன்னேன். இந்தத் தொகையைச் செலவழித்துவிடுங்கள். உடனடியாக அடுத்தகட்டத் தொகை—முதற்கட்டத் தொகையாகத்தான் ஒரு கோடி ரூபாய் கொடுத்திருக்கின்றார்கள். இந்தத் தொகையைச் செலவழித்ததற்குப் பிறகு அடுத்த கட்டமாக, மேலும் தொகை கொடுக்கிறேன் என்ற உத்தரவாதத்தையும் வழங்கியிருக்கின்றார்கள் அம்மா. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இது விவாதத்திற்காகவோ, வேறுவிதமாகவோ எடுத்துக் கொள்ள வேண்டாம். தொன்றுதொட்டு வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற நிலைமையை, நீங்கள் கடந்த காலங்களிலே எண்ணிப் பார்க்க வேண்டும்.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும்போது ஒரு குடம் தண்ணீர் இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுவதாக தவறான தகவலை அவையிலே சொல்லியிருக்கின்றார். அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், பேசுங்கள்.



**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வேலைவாய்ப்பு நியமனத்திற்கு தடைச் சட்டத்தை நீக்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கிறோம். அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நீக்குவார்கள் என எதிர்பார்க்கிறேன். அதேபோன்று, வேலைவாய்ப்புக்காக காத்திருப்போர் பட்டியல் அரசு அறிவித்துள்ள புள்ளிவிவரங்களின்படி 2003 இறுதியிலே 48.76 இலட்சம் ஆகவும், அதுவே 2004 ஆம் ஆண்டு இறுதியிலே 41.2 இலட்சம் ஆக குறைக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறப்பட்டுள்ளது. ஏறக்குறைய 7¼ இலட்சம் பேர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறதா என்பதை கேட்க விரும்புகிறேன். அதற்கான புள்ளிவிவரங்களை அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இன்றைக்கு அரசு நடத்துகின்ற தொழிற் பயிற்சி நிறுவனங்களிலே ஐ.டி.ஐ.-யிலே படித்து முடித்தவர்களுக்கு மூலச் சான்று கிடைப்பதற்கு ஏறக்குறைய 4, 5 ஆண்டுகள் ஆகின்றன. அவர்கள் வெறும் provisional சான்று வைத்துக் கொண்டுதான் வேலைக்குப் போகிறார்கள். இங்கே பல்வேறு பெரிய நிறுவனங்களுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு செல்கின்ற அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு அந்த மூலச் சான்றிதழ் இல்லையென்று சொன்னால், அவர்களுக்கு வேலையே கிடைக்கவில்லையென்ற நிலைமை இருக்கிறது. ஆனால் தனியார் தொழிற் பள்ளி நடத்துகின்றவர்கள் 3 மாதங்களிலே அந்தச் சான்றிதழை வாங்கிக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இந்த நிலைமையை உடனடியாக அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நகரப் பகுதிகள் குடிசை மேம்பாட்டு திட்டம். அதிலும் குறிப்பாக நகரப் பகுதியிலே பட்டா வழங்குகிற திட்டத்தை அமல்படுத்த வேண்டும். பல்வேறு தடைகள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே, செங்கற்பட்டிலே மட்டும் தட்டான்மலை பகுதியிலே ஏறக்குறைய 8, 9 வார்டுகளிலே 5,000 குடியிருப்புகளுக்கு பட்டா இல்லை. அவர்கள் நீண்ட நாட்களாக குடியிருக்கிறார்கள். அதைக் கொடுப்பதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கிழக்கு கடற்கரைச் சாலையிலே இன்றைக்கு மிக அதிகமான விபத்துகள் நடக்கின்றன. உயிர்ப் பலி அதிகமாக நடக்கிறது. அதற்கான காரணங்களை அறிந்து உடனடியாக அதை நிவர்த்தி செய்து, உயிர் இழப்புகளைத் தடுக்க வேண்டும். விபத்துகளைத் தடுக்க வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை வைக்கிறேன்.

செந்தமிழ் சொற்பியல், சொற்ப படிப்பு, அகர முதலி தொகுப்பு வெளியீடுகள் நீண்டநாட்களாக வெளியிடப்படாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆறுமுகம், (குறுக்கீடுகள்)

**திரு. கே. ஆறுமுகம்:** சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலி.

**திரு. கே. ஆறுமுகம்:** செந்தமிழ் சொற்பிளப்பியல் அகரா முதலி,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; இன்னும் சரியாக வரவில்லை, செந்தமிழ்..

**திரு. கே. ஆறுமுகம்:** நீங்கள் புலமை படைத்தவர்கள். சபாநாயகர் அவர்களே, நீங்கள் சொல்வதுபோல் நான் சொல்ல முடியாது. நான் ஒத்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பவும் கொஞ்சம் repeat பண்ணினால் நன்றாக இருக்கும்.

**திரு. கே. ஆறுமுகம்:** தமிழ் மொழியை அனைத்துத் துறைகளிலும் முதன்மையாகக் கொண்டு வருவதற்கு நம்முடைய முதல்வர் அவர்களும் இதற்கு பெரு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ், இன்றைக்கு நாம் பேசுகிறோம். நேற்றைக்குக்கூட நம்முடைய முதல்வர் அவர்கள் பல்வேறு விதமான கேள்விகளை எல்லாம் தொடுத்தார்கள், என்னுடைய தலைவர் அவர்கள் இருந்தபோது. இப்போது நாம் முதற்படியாக, தமிழிலே பேசுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்றுதான், அந்த முயற்சி எடுத்துக் கொள்கிறோம். அனைத்தும் அனைவருக்கும் தெரியாது. இங்கே இருக்கிற யாருக்கும் தொடர்ந்து 10 பொருள்களுக்கு தமிழ் வார்த்தைகளைச் சொல்ல முடியாது; ஆங்கிலத்தைத்தான் அதிகமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் திருத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டியது நம்முடைய தமிழக அரசின் கடமை. அதைச் செய்ய வேண்டுமென்று பட்டாளி மக்கள் கட்சி சார்பாகக் கேட்டுக் கொள்ள விழைகிறேன். அதேபோன்று (குறுக்கீடு) நான் சொல்லி விட்டேன். அது முடிந்து விட்டது.



அடுத்து கல்விக் கொள்கையைப் பார்க்கிறபோது, ஓராசிரியர் பள்ளிகள் அதிகமாக இருந்துகொண்டிருக்கின்றன. ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இதையெல்லாம் உடனடியாக செய்து முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றே ஒன்று, கடைசியாச் சொல்லி முடிக்கிறேன். துறை வாரியான நிலைக் குழுக்களை அமைக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இங்கே கூட மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிறபோது ஒரு மானியக் கோரிக்கையிலே விவாதம் 2 மணி நேரம், 2½ மணி நேரம் நடக்கிறது. அதிலே அமைச்சர் குறுக்கீடு, பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. அதன்மீது பேசி முடிக்க முடியவில்லை. ஆனால், ஒவ்வொரு துறைக்கும் தனியாக Standing Committees—நிலைக் குழுக்கள் அமைத்தால், அதிலே விவாதிக்கப்பட்டு பல்வேறு புதிய திட்டங்களையும், புத்வேகத்தையும் ஒவ்வொரு துறையிலும் ஏற்படுத்துவதற்கு மிகப் பெரிய வாய்ப்பு இருக்கும். அதையும் செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டு இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசாங்கம் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறது என்று சொன்னாலும்கூட, நிதிநிலை அறிக்கையிலே நாங்கள் முக்கியமாக எதிர்பார்த்தது, Education, Employment, Eradication of Poverty. இதையெல்லாம் மிகக் குறைந்த அளவிலே தெளிவில்லாத நீரோடையாக...

பிற்பகல் 1-30

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது சொன்னவற்றையெல்லாம் தமிழில் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. கே. ஆறுமுகம்:** நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆறுமுகம், அதை யோசித்துச் சொல்லுங்கள்; (குறுக்கீடு) ஆறுமுகம், அதை நன்றாக யோசித்துச் சொல்லுங்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை [7-3-2005] காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2005 மார்ச் 4

# 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

33. சிறு தொழில் நிறுவனங்கள் தயாரித்து விற்பனை செய்த காகிதப் பைகள் மீது 10-1-1996 முதல் 30-1-1996 வரையிலான கால அளவிற்கு செலுத்தத்தக்க விற்பனை வரி, மேல் வரி, கூடுதல் வரி, கூடுதல் விற்பனை வரி மற்றும் அபராதத் தொகை ஆகியவையினை தள்ளுபடி செய்து வணிக வரிகள் (டி.2) துறையின் 8-9-2004 ஆம் நாளிட்ட 378 (டி.) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) பிரிவு 53(5), 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) பிரிவு 7(3) மற்றும் 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) பிரிவு 4(3) ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

34. சென்னை-1-ல் உள்ள "அன்பகம்" ஏலாமையுற்றோர், ஆதரவற்றோர் மற்றும் கைவிடப்பட்டோர் மறுவாழ்வு மற்றும் கல்வி அறக்கட்டளைக்குச் சொந்தமான டி.என்.04 ஜே 0538 (ஆம்புலன்ஸ்) ஆம் பதிவு எண்ணைக் கொண்ட மோட்டார் வண்டியினை வாடகைக்கு விடாமல், நற்செயலுக்கு அளிக்கப்படாமல் மேற்சொன்ன அறக்கட்டளையின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் ஐந்து ஆண்டு கால அளவிற்கு அவ்வறக்கட்டளை செலுத்த வேண்டிய வரியினை ஐம்பது சதவீதமாக குறைத்து உள் (போக்குவரத்து-1) துறையின் 6-11-2004 ஆம் நாளிட்ட 1196 (டி1) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974 பிரிவு 25(2)-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

35. 2003-2004 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

36. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)



2005 மார்ச் 4]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

33. 2005-2006 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (53 புத்தகங்கள்) (கோரிக்கை எண் 50 தவிர)

34. 2005-2006 ஆம் ஆண்டின் வருவாய் குறித்த விரிவான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

35. 2005-2006 ஆம் ஆண்[illegible]நிலை அறிக்கை.

36. 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு (பகுதி-1)

37. 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு (பகுதி-2)

38. 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

39. 2005-2006 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம்-வரவு செலவுத் திட்ட இணைப்பு) 2005-2006 ஆம் ஆ[illegible]டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு.

40. 2005-2006 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல். (பகுதி-2 திட்டங்கள்).

41. 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

42. 2005-2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல். (தமிழ், ஆங்கிலம்)

43. 2005-2006 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

44. 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

45. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

46. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட[illegible]வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வ[illegible]

226631
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.